விடுதலை இயக்கத் தமிழ்ப்பாடல்கள்

பொன். சௌரிராஜன்

साहित्य

விடுதலை இயக்கத் தமிழ்ப் பாடல்கள்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மனலச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.)

படஉதவி : நேஷனல் மியூசியம், புதுதில்லி.

விடுதலை இயக்கத் தமிழ்ப் பாடல்கள்

தொகுப்பு : பொன். சௌரிராசன்

சாகித்திய அக்காதெமி

Viduthalai Iyakkath Tamizh Paadalgal (Selection of Songs and Poems of freedom struggle) Compiled by Pon.Sourirajan, Sahitya Akademi, 1996 Rs.50

© Sahitya Akademi
First Published 1996
ISBN - 81-7201-745-6

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம் :
ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி 100 001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி - 110 001.

'குணா பில்டிங்', 304-305, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018.

ஜீவன்தாரா பில்டிங், 4வது மாடி, டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா - 700 053.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை, தாதர், பம்பாய் - 400 014.

109, ஜே.ஸி. சாலை, பெங்களூர் - 560 002.

விலை ரூ.50

அச்சிட்டோர் : உதயம் ஆப்செட்ஸ், சென்னை.

பொருளடக்கம்

அறிமுக உரை 7

வள்ளல் இராமலிங்க அடிகளார்
மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை
ஜீவா
பாபநாசம் சிவன்
கல்கி
வி.ஏ. செல்லப்பா
சுத்தானந்த பாரதியார்
எஸ்.டி.சுந்தரம்
கொத்தமங்கலம் சுப்பு
நாட்டுப்புறப் பாடல்கள்

I மகாகவி பாரதியார் பாடல்கள் 21

எனது தாய் நாட்டின் முன்னாட்
பெருமையும், இந்நாட் சிறுமையும்
வந்தே மாதரம்
நாட்டு வணக்கம்
எங்கள் நாடு
சுதந்திரப் பெருமை
எங்கள் தாய்
ஸ்வதந்திர தாகம்
துடிக்கின்ற நெஞ்சம்
சுதந்திர தேவியின் துதி
மாதாவின் துவஜம்
பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி
பாரத தேசம்
பாரத சமுதாயம்
பாரத நாடு
பாரத மாதா நவரத்ந மாலை
விடுதலை
மஹாத்மா காந்தி பஞ்சகம்
பாரத தேவியின் திருத்தசாங்கம்

பாரத மாதா
நிகழ்கின்ற ஹிந்துஸ்தானமும்
வருகின்ற ஹிந்துஸ்தானமும்

II மதுர பாஸ்கரதாஸ் பாடல்கள் 58
பஞ்சாப் படுகொலை
கொக்குப் பறக்குதடி
சத்தியம் என்றும் தளராத நாடு
சுய ஆட்சி

III பாவேந்தர் பாரதிதாசனார் பாடல்கள் 62
பாரததேவி வாழ்த்து
தெய்வீகத் தாய்நாடு
தொண்டரைச் சேர்த்தல்
சக்திக்கு விண்ணப்பம்
தேவியின் திட்டம்
பாரத சமூக மன்றம் (காங்கிரஸ்) சொல்லுகிறது
பாரத தேவி தனது மாணவர்களுக்குக் கூறுவது
காந்தியடிகளும் கதரும்

IV காந்தீயக் கவிஞர் நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளை பாடல்கள் 75
கத்தியின்றி ரத்தமின்றி
என்னுடைய நாடு
இந்தியத்தாய் புலம்பல்
நம் சுதந்திரம்
இளைஞரின் சபதம்
கொடி பறக்குது
சாந்தி தரும் கொடி

V இந்திய விடுதலை இயக்கம் பற்றியமேடை நாடகப் பாடல்கள் 93
தொகுப்பு: 'தமிழண்ணல்'

அறிமுக உரை

1858-இல் இங்கிலாந்து பார்லிமெண்டின் நேராட்சிக்கு இந்தியா ஆட்படுத்தப்பட்டு இலார்டு கானிங் இராஜப் பிரதிநிதி ஆக்கப்பட்டார். ஏறக்குறைய இதற்கு ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்தான் சிப்பாய்க்கலகம் பிரிட்டிஷ் வாணிகர் ஆட்சியை எதிர்த்துத் தோன்றியது. உள்நாட்டுப் போரால் ஒற்றுமையின்மையால் ஆங்கிலேயே வாணிப ஆட்சிக்கு அடிமையாகிப் போனதை உணர்ந்து பகதூர்ஷா போன்றவர்கள் ஒன்றுபட்டது, மேலை நாட்டார் செய்த சீர்திருத்தங்கள், புகுத்திய கல்வி முறை, செய்த மதப்பிரசாரம் ஆகியவற்றில் எழுந்த வெறுப்பு, பன்றிக் கொழுப்பைத் துப்பாக்கியில் தடவியது, பிரிட்டிஷ் வாணிபச் சுரண்டலால் இந்தியக் கைத்தொழில் நலங்கெட்டு வறுமையுற்று அழிந்தது, 1857-ல் சிப்பாய்க்கலகம் உருவெடுக்கக் காரணமாயின. இதனையே முதல் இந்திய விடுதலைப் போராட்டம் என இந்திய வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

ஆனால், உண்மையில் தமிழகத்தில் கும்பினி ஆட்சியை எதிர்த்து வீரபாண்டிய கட்டபொம்மன் நிகழ்த்திய போராட்டத்தை முதல் விடுதலைப் போராட்டமாகக் (1791-1801) கொள்ளலாம். அவ்வாறு கொண்டால் ஏறக்குறைய 150 ஆண்டுகளை அதாவது 1792 லிருந்து 1947-க்கு உட்பட்ட காலகட்டத்தை விடுதலை இயக்கப் போராட்ட காலமாகக் கொள்ளலாம். இந்தக் காலக்கட்ட கவிஞர்கள் விடுதலை உணர்வைப் பின்வரும் பதினொரு வகை பாடுபொருள்களில் பாடி உணர்த்தினர்.

1. நாட்டுப் பற்று
2. நாட்டுப் பற்றுக்கான காரணங்கள்
3. அடிமையின் சிறுமை

4. உரிமையின் பெருமை
5. விடுதலை வேட்கை
6. விடுதலைக்கு ஏற்படும் தடை - தடை நீக்கல்
7. ஒரு கொடி-ஒரு நாடு- ஒருகுறிக்கோள்
8. விடுதலை இந்தியா
9. தாய்மொழிக் கல்வி
10. பொது உடைமை
11. காந்தீயம்

இக்காலகட்டப் போக்கினை உணர்ந்து விடுதலைப் பொருளை மையமாகக்கொண்டு தத்தம் எழுதுகோலைப் பயன்படுத்திய இலக்கியச்சான்றோர்கள் பலர். நாட்டுப்பாடல்களாய், தெருக்கூத்துப் பாட்டுக்களாய், திரைப்பட இசைப்பாடல்களாய், கவிதைகளாய், காவியங்களாய், பக்திப் பாடல் பாங்கினைக் கொண்டதாய் பல்வேறு வடிவுகளில் தேசபக்தி, விடுதலை வேட்கை — ஆகியவற்றைப் பாடுபொருள்களாகக் கொண்டு பாடிய தேசபக்தி கவிஞர்கள் பலர். அவர்களுள் வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகளார் (5.10.1823-30.1.1874) பேராசிரியர் சுந்தரம் பிள்ளை (1855 - 1897) மகாகவி பாரதியார் (11.12.1882 - 11.9.1921) மதுர பாஸ்கரதாஸ் 30.6.1892 - 20.12.1952) பாவேந்தர் பாரதிதாசனார் (1891 - 1964) காந்தீய கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை (19.10.1888 - 24.8.1972) கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை, பொதுஉடைமைக் கவி ஜீவானந்தம், திரு.வி.க. முதலானோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர்களுள் வடலூர் வள்ளலார் குறிப்பாகவும், சுந்தரம் பிள்ளை தாம் இயற்றிய காவியத்தில் பாண்டியன் ஜீவக வழுதியின் சொற் பொழிவில் வைத்தும் கொடிய அடிமை ஆட்சியின் நீக்கத்தை நாட்டுப் பற்றின் ஆக்கத்தைப் பாடியுள்ளமை காணலாம்.

இன்னும் இந்த விடுதலை இயக்கத்திற்குப் பிற இலக்கியத்துறையிலிருந்து கொண்டே பங்களிப்புச் செய்த கவிஞர்களுள் பாபநாசம் சிவன், சி.ஏ. இலக்குமண தாஸ், கல்கி கிருஷ்ணமூர்த்தி, வி.ர.செல்லப்பா, சுத்தானந்த பாரதியார், எஸ்.டி.சுந்தரம், கொத்தமங்கலம் சுப்பு முதலியோரும் இங்குக் குறிப்பாகக் கருதத்தக்கவர் ஆவர்.

1. வள்ளல் இராமலிங்க அடிகள்

சிதம்பரம் இராமலிங்கம் என்று தன்னைக் குறித்துக் கொண்ட வள்ளலார் (5-10-1823 - 30-1-1874) ஆன்மீகத் துறைக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டாலும் விடுதலை இயக்கப் பின்புலம் அவர் பாடல்களில் பதிந்துள்ளமையைக் காணலாம்.

விடுதலை இயக்கமும் வள்ளலாரும்:

“கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக” என்ற குரலும், “ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளராகி உலகு நடத்த வேண்டும்” என்ற சிந்தனையும், “சாதியிலே மதங்களிலே, சமய நெறிகளிலே, சாத்திரச் சந்தடிகளிலே, கோத்திரச் சண்டையிலே, ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர், அலைந்து அலைந்து நீர் அழிதல் அழகலவே” என்ற கருத்தும் அரசியல், பொருளாதார, சமுதாய விடுதலை உணர்வு அடிகளாரின் இலக்கியத்தில் பதிந்திருந்தமையைக் காட்ட வல்லவையாகும். அன்றியும், பாரதிக்கு முன்னோடியாகத் தமிழ்க் கவிதை நடையில் எளிமையை வளர்த்த பாங்கும் வள்ளலார்க்கு உரியது.

2. மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை

விடுதலை இயக்கத் தாக்கம் சிலர் பாடல்களில் வெளிப்படையாகவும் சிலர் பாடல்களில் மறைமுகமாகவும் அமைந்திருக்கக் காணலாம். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை (1855 - 1897) இயற்றிய மனோன்மணீயத்தில் (1891)

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, அந்நியப் படையை அகற்றல் முதலிய சிந்தனைகள் ஆங்காங்கே அமைந்து விளங்கக் காணலாம்.

தேசப்பற்று

"தாயினும் சிறந்த தயைபூண் டிருந்தநும்
தேயமாம் தேவிக்குத் தீவினை யிழைக்கத்
துணிந்தஇவ் வஞ்சரை எணுந்தொறும்
எணுந்தொறும்"
(83 - 85)

தாமிரபன்னி எனும் நீர்ப்பற்று

"களங்கமில் நும்முகம் காட்டுமிச் சினத்தீ
கண்டு அப் பாண்டியே கொண்டனள்
உவகை
அலையெறிந் தீதோ ஆர்த்தனள் கேண்மின்
முலை சுரந் தூட்டிய முதுநிதி மாதா"
(90 - 93)

"ஒருதுளி யேனும்நீர் உண்டுளீர் ஆயின்
கருதுவீர் தாம்பிர பன்னியின் கட்டுரை
மக்காள்! அருந்தி வளர்மின்! நுமக்கு
மிக்கோர் இல்லா வீரமாய்ப் பரந்து
முது சுதந் தரத்தின் முத்திரை ஆகி
இதுபரி ணமித்துநும் இதயத் துறைக!
அன்னியன் கைப்படா இந்நீர் கற்பிற்கு
இழிவுறின் மார்பினின் றிதுவே
சோரியாய்ப்
பொழிகநீர் பொன்றிடும் அளவும்" (94 -
102)

தமிழ் எனும் மொழிப்பற்று

"விந்தம் அடக்கினோான் தந்தநற் றமிழ்மொழி
தற்சுதந் தரமறும் அற்பர்வாய்ப் படுமோ?"
(106 - 107)

பொதிகைத் தென்றல்:

"பொதியமா மலையிற் புறப்பட் டிங்குதன்
படியே உலாவுமிச் சிறுகால், பணிந்துமற்று
"அடியேம்" எனத்திரி பவர்க்கோ உயிர்ப்பு
ஹே! ஹே!
கோட்டமில் உயிர்ப்போ கூறீர்; அன்ன
நாட்டபி மானமில் நடைப்பிண மூச்சும்
சீச்சீ! சீச்சீ!
சேனையோ டிவ்வழி திரிந்துநேற்
றிரவில்நும்
திருவனை யார்களும் சேய்களும் கொண்ட
வெருவரு நித்திரைக் குறுகண் விளைத்து நும்
பாஷாபி மானமும் தேசாபி மானமும்
பொருளெனக் கருதா தருறை நுமது
தாய்முலைப் பாலுடன் வாய்மடுத்
துண்டநல்
ஆண்மையும் சுதந்தரக் கேண்மையும்
ஒருங்கே
நிந்தைவஞ் சியர்செய வந்தநும் கோபம்
முற்றும் இயல்பே" (118 - 131)

உரிமை நாட்டாபிமானம்

"உரிமைமேல் ஆண்மைபா ராட்டார்
சாந்தம்
பெருமையில் பிணத்திற் பிறந்ததோர்
சீதம்
அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டாபி மானமுள் மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க் கென்றுமே உவப்பு"
(134 - 138)

தியாகத்தால் நிலைப்பதே சுதந்தரம்:

"இன்றுநீர் சிந்தும் இரத்தமோர் துளியும்
நின்றுகம் பலவும் நிகழ்த்துமே"

(141 - 142)

சுதந்திரம் அவர்க்குயிர்; சுவாச மற்றன்று
நினையுமின் நன்றாய்க் கனவினும் இதனை"

(145 - 146)

தியாகம்-சுதந்திரம்-புகழ்:

"அனந்தம் தலைமுறை வருந்தனி மாக்கள்
தினந்தினம் தாமனு பவிக்குஞ் சுதந்திரம்
தத் தம் முன்னோர் நொந்தபுண் எண்ணிச்
சிந்தையன் புருகிச் சிந்துவர் கண்ணீர்,
என்றால் அப்புண் 'இரந்து கோட்டக் கது'
அன்றோ? அறைவீர் ஐயோ! அதுவும்
புண்ணோ? புகழின் கண்ணே, எவரே
புண்படா துலகிற் புகழுடம் படைந்தார்?
புகழுடம் பன்றியிவ் விகழுடம் போமெய்?
கணங்கணம் தோன்றிக் கணங்கணம்
மறையும்
பிணம்பல, இவரெலாம் பிறந்தார்
என்பவோ
உதும்பர தருவில் ஒருகனி அதனுட்
பிறந்திறும் அசகம் இவரிலும் கோடி
பிறந்தார் என்போர் புகழுடன் சிறந்தோர்"

(145 - 167)

3. ஜீவா

மனிதனையே தம் இலக்கிய மையக் கருத்தாகக் கொண்ட 'ஜீவா' என்னும் பொதுஉடைமைக் கொள்கை ஜீவானந்தம் தேச விடுதலை, ஜனநாயக ஆட்சிக்கு ஆற்றிய தொண்டு பற்றி எழுதிய பாடல்கள் இங்கு நினைவுகூரத் தக்கன.

விடுதலை

தேசம் சுதந்திரம் பெறலாகாதா-எங்கள்
இந்திய
தேசம் சுதந்திரம் பெறலாகாதா
ஏகாதி பத்தியம் வந்து புகுந்து
ஏறி மதித்திட நொந்தோம்
சோகம் தவிர்க்க நாமினி ஒன்று
சூழ்ந்து துணிய லாகாதோ...

என்று தேசவிடுதலை பெற மக்கள் சிந்தனை ஒன்றுபட வேண்டும் என்று வேண்டினார்.

டொமினியன் நிலை வேண்டாம். முழு உரிமை நமக்கு வேண்டும், ஏகாதிபத்தியம் ஒழிந்து ஜனநாயகம் மலர வேண்டும் என்று முழங்கினார்.

பூரண சுயேச்சைநம் தேசம்எய் திடுமாறு
போர்முர சடிக்க வேண்டும்
புன்னெறிகள் ஏகாதி பத்தியமே
டுறவுசெய்
போக்கைப் பழிக்க வேண்டும்
சாரமில்லாத புதுஅர சியலெனும் அடிமைச்
சாசனம் உடைக்க வேண்டும்
ஜனநாய கத்திற்கு முரணான சட்டங்கள்
தம்மைத் தகர்க்க வேண்டும்

அன்று நாடுமுழுதும் பரவிய விடுதலைப் போராட்டத்தில் தன்னை முழுதும் ஈடுபடுத்துக்கொண்ட காங்கிரசுடன் இணைந்து அன்னிய ஆட்சியை அகற்ற வேண்டும் என்று பாடினார்.

அஷ்ட தரித்திரம் அகன்றிட வேண்டி
அடிமைக் கொடும்தளை அறுந்திட வேண்டி
துஷ்டத் துரைத்தனம் தொலைந்திட வேண்டி
காங்கிரஸ் கொடிக்கீழ்
பாங்கொடு நீயும்
கச்சையை வரித்துக் கட்டிநின்றே
தோழா.

4. பாபநாசம் சிவன்

'தமிழ்த் தியாகய்யா' என்று சிறப்புப் பெற்ற பாபநாசம் சிவன் திரை இசைக் கவிஞரே ஆனாலும் அந்தக் கால விடுதலை இயக்கத்திற்கு அவர் ஆட்பட்டமையை அவர்தம் திரை இசைப் பாடல் சிலவற்றின் வழி காணலாம்.

மாத்ரு பூமி (1939) என்னும் திரைப் படத்துக்கு அவர் பாடித்தந்த 'நமது ஜன்ம பூமி' என்ற பாடல் இலட்சக்காணக்கான மக்கள் உள்ளத்தில் விடுதலை வேட்கையை, நாட்டுப்பற்றை உருவாக்கியது.

பாரத மாதா பரிபூரண சுதந்திரம்
எய்துவாளோ... ... ...

(அனாதைப் பெண்)

நம்ம நாடு
நம் சொந்தம் இல்லையா? இதில்
நமக்கும் உரிமை கொஞ்சம் இல்லையா?

(தியாக பூமி)

என்ற பாடல்களும் நாட்டு விடுதலையில் இவர்க்கிருந்த ஈடுபாட்டை உணர்த்தவல்லன.

5. கல்கி

மேலே குறித்த 'தியாகபூமி'யின் கதாசிரியராகிய கல்கி கிருஷ்ண மூர்த்தியும் தம் கதைக்கென "பாரத புண்ணிய பூமி", "தேச சேவை செய்ய வாரீர்", என்னும் சில பாடல்கள் எழுதி விடுதலை இயக்கப் போராட்டத்திற்குத் துணைசெய்துள்ளார்.

6. வி.ஏ.செல்லப்பா

வி.ஏ. செல்லப்பா என்னும் திரைப்படக் கவிஞர் 1940-இல் 'தமிழ்த்தாய் அல்லது மாத்ரு தர்மம்' என்னும் திரைப்படத்துக்கு இயற்றியளித்த பாடல்களுள் 'வந்தே மாதரம்' 'பவள மிலகும் பாரததேவி' என்னும் பாடல்கள் இரண்டும் விடுதலை நோக்குடையன.

7.சுத்தானந்த பாரதி

இலக்கியத் துறையின்எல்லா வகைப்பாடு களிலும் ஈடுபட்டு வெற்றிகண்ட சுத்தானந்த பாரதியார் ஒரு கவிஞர். அதிலும் தேசீயம், உலகீயம் காண விழைந்த ஆன்மீகக் கவிஞர். அவர் பாடல்களுள்

"அடிமை யென்கிற பேச்சினி யில்லையென்
றாக்குவோம் - அச்சம் - போக்குவோம்
வெடிகொண் டெம்மை வெருட்டினும்
கொள்கையை
விட்டிடோம் - கையைக் - கட்டிடோம்"

ஏறு போலத் தலைநிமிர்
இந்தி யாவின் சிங்கமே
வீறு கொண்டு நடநட
விடுத லைக்கு விடுதலை
நெஞ்ச முண்டு நீதியுண்டு
நிகரிலாத வீறு முண்டு
அஞ்சி லோம்கெஞ் சிலோம்
அமர் முறுக் கிவெல் லுவோம்

அகில பார தத்தில் வாழும்
யாவரும் சமானமே
ஆரியர் திராவிடர்
இஸ்லாமியர் கிறிஸ்தவர்...

என்பன விடுதலை வேட்கை நோக்கில் குறிப்பிடத் தக்கன.

8. எஸ்.டி.சுந்தரம்

எஸ்.டி.சுந்தரம் விடுதலைப் போரில் ஈடுபட்டுக் களம் கண்ட கவிஞர். நாடகத் துறையில் பெரிதும் தம் எழுத்தைப் பயன்படுத்தினாலும் அவர் கவிதைபல விடுதலை உணர்வு கொண்டனவாக உள்ளதைக் காணலாம்.

"பாசமோங்கும் பாரத தேசப்பணி", "செங்கண் மறவா...." முதலான பாடல்கள் இளைஞர்களைத் தேசப் பணியில் அன்று ஈடுபடுத்த முனைந்த பாடல்கள் ஆகும்.

1945-இல் விடுதலைக் கதிரவன் கீழ்த்திசையில் தோன்றத் தொடங்கிய போது தன்னல சக்திகள் பல நாட்டைப் பங்குபோட்டுப் பாழ்படுத்த முயன்றது எண்ணி,

"ஆயிர மாயிரம் பேரன் பேத்திகள்
அரண்ம னைக்குள் வாழ்கின்றோம்
அத்தனை பேரும் பாகங் கேட்டால்
ஆளுக் கொருகல் மிஞ்சுமடா
கட்டிய விடுதலைக் கோயி லிடிக்கக்
கடப்பா றைகள் தேடாதே...."

என்று பாடியுள்ளார்.

நாட்டு நிலை உணர்ந்து உரிமைப் போரில் பங்கேற்ற தம் போன்ற சிலரைச் சிறையில் அடைத்து வாய்ப்பூட்டிட்ட அன்றைய ஆட்சியை, பட்டம் பெற்ற தன்னலக் காரர்களை நினைத்து மனம் நொந்து அவர் பாடிய பாட்டு இது.

"கொற்றவனோ இங்கில்லை இங்கி லாந்தில்
குளிர்பனியில் அவன்காதோ கேளாக்
காது
மற்றிங்கு இருப்பவரோ கூலிக் காரர்
மன்னவர்க்கு வால்பிடிக்கும் மண்டூகக்
கூட்டம்

முற்றுமற படித்தவரோ வெள்ளை யர்க்கு
முக்காலும் நண்பர்பின் தாசர் கூட்டம்
பற்றுடனே சிலவீரர் பேச வந்தோம்
வாய்ப்பூட்டுச் சட்டத்தால் சிறை
வைத்தாரே”

9. கொத்தமங்கலம் சுப்பு

‘வெள்ளைக் காரா வெளியே போ வென்று
வீரப்போர் புரிவேன்
வெற்றியோ சாவோ மற்றது எதுவும்
மத்தியில் கிடையாது’

என்று நாட்டுப்பாடல் போக்கில் விடுதலை உணர்வை மக்களிடத்தே பரப்பிய கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு பாடிய பாடல்கள் பல.

பொங்க லிட்டு நேத்து நாம்ப
பூசை வைக்கும் போதிலே
தங்க வந்த வெள்ளைக் காரன்
தந்த கேடு நீங்கணும்
எங்க நாடு எங்கள் வளமை
எங்க பெருமை யென்று நம்
சங்க டங்கள் நீங்கி யென்றும்
தரும வாழ்வு வாழவே!

என்பன போன்ற இவர்தம் பாடல் பல குறிப்பிடத்தக்கன.

10. நாட்டுப்புறப் பாடல்கள்:

விடுதலை இயக்கம் பாமர மக்களைப் பாதித்து அது அவர்தம் நாட்டுப்புறப்பாடல்களாய், தெருக்கூத்துப் பாடல்களாய் அவர்களுக்காக எழுதப்பெற்ற திரையிசைப் பாடல்களாய் உருவானது. நாட்டுப்புற மக்களின் தொழிலை எந்த அளவு ஆங்கில அரசு சுரண்டியது என்பதைனைக் கீழ் வரும் நாட்டுப்புறப் பாடல் புலப்படுத்தும்.

ஆங்கில ஆட்சியும் கிராமவீழ்ச்சியும்:

"ஊரான் ஊரான் தோட்டத்தில்
ஒருவன் போட்டானாம் வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லி
காயிதம் போட்டானாம்
வெள்ளைக்காரன்
வெள்ளைக்காரன் பணம் சின்னப்பணம் -
அது
வேடிக்கை செய்யுதாம் வெள்ளிப்பணம்
வெள்ளிப்பணத்துக்கு ஆசைப்பட்டு - நீ
வேஷங் குலைந்தாயே வீராயி"

கட்டபொம்மன் விடுதலைப்போர் முதல்வீரன்

"வானம் பொழியுது பூமி விளையுது
மன்னவன் கும்பினிக் கேன் கொடுப்பேன்"

என்ற கட்ட பொம்மன் முழக்கம் நாட்டுப்புறக் கதைப் பாடலில், கும்மிப் பாடலில் எல்லாம் எதிரொலித்துத் தமிழிலக்கிய வரலாற்றில் இடம் பெற்றதையும் இங்குக் குறிப்பிடலாம்.

ஜாக்சன் துரைக்கும் கட்டபொம்மனுக்கும் நிகழ்ந்த உரையாடலில் கட்டபொம்மனின் உரிமை முழக்கமும் ஜாக்சனின் சீற்றமும் கொந்தளிக்கக் காணலாம்.

ஜாக்சன் : தட்சண பூமி திசைக் காவல் உனக்கு யார்விட்டார் துரை கட்ட பொம்மு?
கட்டபொம்மன் : நம்முட பூமி நமக்கென்று சொல்லியே திசைக்கம்பம் நாட்டினேன் சாகுசனே.
ஜாக்சன் : ஏழு வருசத்துத் தோப்புராய்ப் பணம் ஏன் கொடுக்கவில்லை கட்ட பொம்மு?
கட்டபொம்மன் : வானம் பொழிந்தது பூமி விளைந்தது மன்னவன் காணிக்கை ஏன் கொடுப்பேன்?

கட்டபொம்மன் மறைவுக்குப் பின் ஊமைத்துரை பட்டம் ஏற்றார். அப்போது அவர் உரைத்த சூளுரை விடுதலைப் போரட்டத்தில் ஈடுப்பட்ட இந்தியன் ஒவ்வொருவனும் எடுத்த சூளுரைபோல் விளங்குகிறது.

"இன்றைக்கு இருந்தாலும் நாளைக்கு இருந்தாலும் என்றைக்கு இருந்தாலும் ஒருநாள் இறப்போம் அன்றோ அன்றைக்குச் சாவதை இன்றைக்குப் போரினில்"

"ஆக்கி அமர்வதே பாக்கியமாம்
குண்டுகள் உண்டென உள்ளம் களித்தெழு
கும்பினிக் கும்பல் கொண்டாட்டம் எல்லாம்
பண்டு லங்காபுரி இராவணன் போல்பழி
பட்டே அழிந்திடும் பாஞ்சை முன்னே."

தெருக்கூத்துகளிலும் நாடகங்களிலும் எஸ்.எஸ். விசுவநாத தாஸ், வேலாயுதராஜா முதலானவர்கள் பாடிய பாடல்களையும், அவற்றை இயற்றிய ஆர்.பி.எஸ்.மணி, சங்கரலிங்கக் கவிராயர், தஞ்சை வித்துவான் சுப்புராஜன் முதலானவர்களைத் "தெருப்பாடல்கள்" என்ற தலைப்பில் க.திரவியம் தொகுத்துத் தந்துள்ளது இங்குக் குறிப்பிடத் தகுந்தது. அப்பகுதியில் பழநி வேலுச்சாமிக் கவிராயர் இயற்றிய 31 விடுதலைப் பாடல்களைக் கொண்ட தொகுதிக்குக் கிருஷ்ணசாமி சர்மா எழுதிய முன்னுரையிலிருந்து 'சுப்புரமணிய பாரதியரோடு விடுதலைப் பாடல்கள் என்ற வகையில் எண்ணிப் பார்க்கத் தக்கவர்கள் இருவர். அவர்கள் சேலம் வாசி அர்த்தநாரீஸ்வரர் சர்மா, வேலுச்சாமிக் கவிராயர் என்பவராவர்'. என அறிய இயல்கிறது.

இப்படியே டவுன் பஸ், அரிசனப்பெண் லெட்சுமி(1937), தேச முன்னேற்றம்(1938) முதலிய

திரைப்படங்களில் இடம் பெற்ற பாடல்கள் பல விடுதலை இயக்கச் செல்வாக்கில் உருவான தன்மையைக் காணலாம்.

டவுன் பஸ்

"ஆங்கில துரைபோல ஆடைதான் உடுத்தி
ஆடி நடந்திடும் ஜோடிகளா
அன்னிய மோகந்தான் நம்ப நாட்டுக்கே
இன்னமும் தேவையா சொல்லுங்களேன்"
-கவி.கா.மு.ஷெரீப்.

அரிசனப்பெண் லெட்சுமி

"ஆ என் செய்வேன் கால நவீனம் அநியாயம்
அழிந்தது புராதன கைத்தொழில் நாட்டில்
அதற்குக் காரணமுண்டு
அன்னியர் போட்டி"

தேசமுன்னேற்றம் (1938)

"தீண்டாமைப் பேயதனாலே - மக்கள்
திண்டாடவோ உலகினிலே"
-பாபநாசம் சிவன்

இவ்வாறு தோன்றி வளர்ந்த விடுதலை இயக்கத்திற்குப் பெரிதும் தம்மை ஆட்படுத்திக்கொண்ட கவிஞர்கள் மகாகவி பாரதியார், மதுர பாஸ்கரதாஸ் ஆகிய இருவரையும் குறிப்பிடலாம். ஒரு காலகட்டத்தில் பாவேந்தர் பாரதிதாசனாரின் கவித்திறம் அனைத்தும் தேசீய விடுதலைக்கும், எழுச்சிக்கும் ஒற்றுமைக்குமே உரியதாய் இருந்தது. காந்திக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கனாரும் தேசீய இயக்கத்திற்குத் தன்னை முழுதும் அளித்துக்கொண்ட கவிஞர் பெருமகன் ஆவர். இவர்தம் பாடல்கள் விரிவாக இந்நூலில் இடம் பெறுகின்றன.

I. மகாகவி பாரதியார் பாடல்கள்
(1882-1921)

மகாகவி பாரதியார் அனைவரும் அறிந்த தேசிய கவிஞர். 'நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்' எனத் தம் வாழ்நாளையே விடுதலை பற்றிப் பாடுவதற்காக ஒப்படைத்த உயர்ந்த கவிஞர்.

"சுவைபுதிது பொருள் புதிது வளம்புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை யெந்நாளு மழியாத
மஹாகவிதை"

என்று அவர் பாடியவாறு அவர்கவிதைகள் பொருளில் புதியனவாய், சொல்லில் எளியனவாய், உணர்வில் ஆற்றலுடையனவாய் அமைந்துள்ளன. அவர்பாடிய 267 பாடல்களுள் தேசியம் பற்றியன நாற்பத்தேழு. அவற்றுள், "எனது தாய்நாட்டின் முன்னாட் பெருமையும் இந்நாட் சிறுமையும்" "வந்தே மாதரம்", "நாட்டு வணக்கம்", "எங்கள் நாடு", "சுதந்திரப் பெருமை", "எங்கள் தாய", "ஸ்வதந்திர தாகம்", "துடிக்கின்ற நெஞ்சம", "சுதந்திர தேவியின் துதி", "மாதாவின் துவஜம", "பாரத மாதாதிருப்பள்ளி எழுச்சி", "பாரத தேசம்", "பாரத ஸமுதாயம்", "பாரத நாடு",..... "பாரத மாதா நவரத்ந மாலை", "விடுதலை, விடுதலை, விடுதலை ", "மஹாத்மா காந்தி பஞ்சகம" என்னும் பதினேழு பாடல்கள் இங்கு எடுத்துத் தரப்பெற்றுள்ளன.

1. சுதேசமித்திரனில் 11.4.1906-இல் வெளி வந்துள்ள இந்தப் பாடலே பாரதியாரின் தேசியத் தமிழ்ப் பாடல்களில் முதலாவதாகக் கருதத்தக்கது. பாரத நாட்டின் பழம்பெருமையை உணர்த்திப் புதுமை மோகத்திலிருந்து இந்தியரை மீட்பது இந்தப் பாடலின் நோக்கம் ஆகும்.

எனது தாய்நாட்டின் முன்னாட் பெருமையும் இந்நாட் சிறுமையும்

கண்ணிகள்

புன்னகையு மின்னிசையு மெங்கொளித்துப் போயினவோ
இன்னலொடு கண்ணீ ரிருப்பாகி விட்டனவே! 1

ஆணெலாம் பெண்ணாய் அரிவையரெ லாம்விலங்காய்
மாணெலாம் பாழாகி மங்கிவிட்ட திந்நாடே! 2

ஆரியர்கள் வாழ்ந்துவரும் அற்புதநா டென்பதுபோய்ப்
பூரியர்கள் வாழும் புலைத்தேச மாயினதே! 3

வீமாதி வீரர் விளிந்தெங்கு போயினரோ!
ஏமாறி நிற்கு மிழிஞர்களிங் குள்ளாரே! 4

வேத வுபநிடத மெய்ந்நூல்க ளெல்லாம்போய்ப்
பேதைக் கதைகள் பிதற்றுவரிந் நாட்டினிலே! 5

ஆதி மறைக்கீதம் அரிவையர்கள் சொன்னதுபோய்
வீதி பெருக்கும் விலையடிமை யாயினரே! 6

செந்தேனும் பாலும் தெவிட்டிநின்ற நாட்டினிலே
வந்தேதீப் பஞ்ச மரபாகி விட்டதுவே! 7

மாமமுனிவர் தோன்றி மணமுயர்ந்த நாட்டினிலே
காமுகரும் பொய்யடிமைக் கள்வர்களும் சூழ்ந்தனரே! 8

பொன்னு மணியுமிகப் பொங்கிநின்ற விந்நாட்டில்
அன்னமின்றி நாளு மழிவார்க ளெத்தனைபேர்? 9

2. 'இந்தியா' பத்திரிகையில் 18.5.1907-இல் வெளிவந்துள்ளது. இந்தநாளில் பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய் தீபாந்திரத்திற்கேற்றி அனுப்பப் பெற்றது பற்றிய மஹாஜன சபைக் கூட்டம் குறித்துப் பாரதியார் எழுதிய கட்டுரையும் கருதத்தக்கது -(பாரதி தமிழ் - பக் 117).

வந்தே மாதரம்

(தாயுமானவர் ஆனந்தக் களிப்பு வர்ணமெட்டு)

ராகம் நாதநமக்கிரியை தாளம் - ஆதி

பல்லவி

வந்தே மாதர மென்போம் -எங்கள்
மாநிலத் தாயைவ ணங்குது மென்போம்

சரணங்கள்

ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மமித் தேசத்தி லெய்தினராயின்,
வேதிய ராயினு மொன்றே - அன்றி
வேறுகு லத்தின ராயினு மொன்றே. (வந்தே) 1

ஈனப் பறையர்க ளேனும் - அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவ ரன்றோ?
சீனத்த ராய்விடு வாரோ? - பிற
தேசத்தார் போற்பல தீங்கிழைப் பாரோ?
(வந்தே) 2

ஆயிர முண்டிங்கு ஜாதி - எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி? - ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர் - தம்முட்
சண்டை செய் தாலும் சகோதர ரன்றோ?
(வந்தே) 3

ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம்வந் தாற்பின் னமக்கெது வேண்டும்?
(வந்தே) 4

எப்பதம் வாய்த்திடு மேனும் - நம்மில்
யாவர்க்கு மந்த நிலைபொது வாகும்

முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம் (வந்தே) 5

புல்லடி மைத்தொழில் பேணி - பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை இகழ்ச்சிகள் தீர - இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி
(வந்தே) 6

3. 1908-இல் வெளியான ஸ்வதேச கீதங்கள் என்னும் பாடல் தொகுப்பில் இஃது இடம்பெற்றுள்ளது. 'இந்த மண் எம் முன்னோர் வாழ்ந்தது; எம்முன்னோர் வளர்த்தது; எம் முன்னோர் சிந்தித்துச் செயல் புரிந்தது; மறைந்து கலந்தது'- என்றெல்லாம் கூறி நாட்டுப் பற்றை வளர்ப்பது இந்தப்பாடல்.

நாட்டு வணக்கம்

ராகம்-காம்போதி தாளம்:ஆதி தாளம்.

எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
இருந்தது மிந்நாடே - அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே - அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே - இதை
வந்தனை கூறி மனதி லிருத்தியென்
வாயுற வாழ்த்தேனோ? - இதை
வந்தே மாதரம் - வந்தே மாதரம்
என்று வணங்கேனோ? (1)

இன்னுயிர் தந்தெமை யீன்றுவ ளர்த்தரு
ளீந்தது மிந்நாடே - எங்கள்

அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
யறிந்தது மிந்நாடே - அவர்
கன்னியராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே - தங்கள்
பொன்னுட லின்புற நீர்விளை யாடியில்
போந்தது மிந்நாடே - இதை
(பல்லவி) வந்தே மாதரம்,வந்தே மாதரம்
என்று வணங்கேனோ? (2)

மங்கைய ராயவர் இல்லற நன்கு
வளர்த்தது மிந்நாடே - அவர்
தங்க மதலைக ளீன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே - மக்கள்
துங்க முயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்தது மிந்நாடே - பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்தது மிந்நாடே - இதை
(பல்லவி) வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ? (3)

4. இந்தப் பாடலும் 'ஸ்வதேச கீதங்கள்' என்னும் அந்தத் தொகுப்பில் நான்காவது பாடலாக இடம் பெற்றுள்ளது. இதே பாடல் 'இந்தியா' 14-8-1909-ஆம் நாளிட்ட இதழில் "பிரபுத்த பாரதா" என்ற நாடகப் பகுதியில் இடம் பெற்றுள்ளதென பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி குறிப்பிடுகிறார். பாரத நாட்டில் பண்டைச் சிறப்புப் பலவற்றை உரைக்கிறது இந்தப் பாடல்.

எங்கள் நாடு

ராகம் - பூபாளம்

மன்னு மிமயமலை யெங்கள் மலையே
மாநில மீதது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?

பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே?
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே.
போற்றுவ மஃதை யெமக்கிலை யீடே.

மாரத வீரர் மலிந்தநன் னாடு
மாமமுனி வோர்பலர் வாழ்ந்தபொன்
னாடு,
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையு நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்தநன் னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவ மிஃதை யெமக்கிலை ஈடே.

இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழைய ராகி யினிமண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணி யிழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனி லினிக்கையை
விரியோம்.
கன்னலுந் தேனும் கனியுமின் பாலும்
கதலியும் செந்நெலு நல்குமெக் காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே.
ஓதுவ மிஃதை யெமக்கிலை யீடே.

1. 'ஸ்வதேச கீதங்கள்' என்னும் தொகுப்பில் 12-வது பாடல் இது. 'அடிமை வாழ்வு இழிந்தது, மானுடப் பிறப்பின் மாண்பினை மாய்ப்பது, சாவு இயற்கை அஞ்சாது உரிமைக்காகப் போராடுவோம்' என்பன இப்பாடலின் கருத்துக்கள்.

சுதந்திரப் பெருமை

('தில்லை வெளியிலே கலந்து விட்டாலவர் திரும்பியும் வருவாரோ?' என்னும் வர்ண மெட்டு)

வீர சுதந்திரம் வேண்டிநின் றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ? - என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண் டார்கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ?
(வீர சுதந்திரம்) 1

புகழுநல் லறமுமே யன்றியெல் லாம்வெறும்
பொய்யென்று கண்டாரேல் - அவர்
இகழுறு மீனத்தொண் டியற்றியும் வாழ்வதற்
கிச்சையுற் றிருப்பாரோ?
(வீர சுதந்திரம்) 2

பிறந்தவர் யாவரு மிறப்ப துறுதியெனும்
பெற்றியை யறிந்தாரேல் - மானம்
துறந்தற மறந்தும்பின் னுயிர்கொண்டு.
வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ?
(வீரசுதந்திரம்) 3

மானுட ஜன்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை யுணர்ந்தாரேல் - அவர்
ஊனுடல் தீயினு முண்மை நிலைதவற
உடன்படு மாறுமதோ? (வீரசுதந்திரம்) 4
விண்ணி லிரவிதனை விற்றுவிட்
டெவரும்போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணிலு மினிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ?
(வீரசுதந்திரம்) 5

மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ?
(வீரசுதந்திரம்) 6

வந்தே மாதர மென்று வணங்கியபின்
மாயத்தை வணங்குவரோ?
வந்தே மாதர மொன்றே தாரக
மென்பதை மறப்பாரோ?
(வீரசுதந்திரம்) 7

6. இந்தப் பாடல் 'இந்தியா'-வில் 7.11.1908-இல் வெளிவந்துள்ளது. ஜன்மபூமி என்னும் 1909-இல் வெளியான 'ஸ்வதேச கீதங்களின' இரண்டாம் பாகத்தில் ஐந்தாவது பாடலாக இஃது அமைந்துள்ளது. பாரத நாட்டை பாரத தேவியாக உருவகித்து அன்றிருந்த முப்பது கோடி மக்களும் ஒரே உயிர்த்துவம் உடையவர் என்பதை உணர்த்தி ஒருமைப்பாட்டை உருவாக்க எழுந்தது இந்தப் பாடல்.

எங்கள் தாய்

(அண்ணாமலை ரெட்டி காவடிச்சிந்திலுள்ள "ஆறுமுக வடிவேலவனே" என்ற பாட்டின் வர்ண மெட்டு)

தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவ ளென்றுண ராத
இயல்பினளா மெங்கள் தாய். (1)
யாரும் வகுத்தற் கரியபி ராயத்த
ளாயினு மேயெங்கள் தாய் - இந்தப்
பாருளெந் நாளுமோர் கன்னிகை யென்னப்
பயின்றிடு வாளெங்கள் தாய். (2)

முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடை யாள் - இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை யொன்றுடை யாள். (3)

நாவினில் வேத முடையவள் கையில்
நலந்திகழ் வாளுடை, யாள் - தனை
மேவினர்க் கின்னருள் செய்பவள் தீயரை
வீட்டிரு தோளுடை யாள். (4)

அறுபது கோடி தடக்கைக ளாலும்
அறங்கள் நடத்துவள் தாய் - தனைச்
செறுவது நாடி வருபவ ரைத்துகள்
செய்து கிடைத்துவள் தாய். (5)

பூமியினும் பொறை மிக்குடை யாள்பெரும்
புண்ணிய நெஞ்சினள் தாய் - எனில்
தோமிழைப் பார்முன நின்றிடுங் காற்கொடுந்
துர்க்கை யனையவள் தாய். (6)

கற்றைச் சடைமதி வைத்த துறவியைக்
கைதொழு வாளெங்கள் தாய் - கையி
லொற்றைத் திகிரிகொண் டேழுல காளு
மொருவனை யுந்தொழு வாள். (7)

யோகத்தி லேநிக ரற்றவ ளுண்மையு
மொன்றென நன்றறிவாள் - உயர்
போகத்தி லேயு நிறைந்தவ ளெண்ணரும்
பொற்குவை தானுடையாள். (8)

நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரி வாளெங்கள் தாய் - அவர்
அல்லவ ராயி னவரை விழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடு வாள். (9)

வெண்மை வளரிம யாசலன் றந்த
விறன்மக ளாமெங்கள் தாய் - அவன்
திண்மை மறையினுந் தான்மறை யாணித்தஞ்
சீருறு வாளெங்கள் தாய். (10)

7. 'ஜன்மபூமி' என்னும் ஸ்வதேச கீதங்கள் இரண்டாம் தொகுதியில் பதின் மூன்றாவது பாடலாக வருவது இது. 'இந்தியா'-வில் 19-12-1908-இல் வெளிவந்துள்ளது. 'நாட்டுப்பாட்டு' என்ற புதியதலைப்பில் 1919-இல் வெளியான போது இதன் தலைப்பு

'சுதந்திரம் தாகம்' எனத் திருத்தம் பெற்றுள்ளது. சுதந்திர வீரர் பலர் சிறைபட்டு செக்கிழுத்து வருந்துவது கண்டு, மக்களிடையே எழுந்த சோர்வைப் போக்கி அறவுணர்வைத் தூண்டி அவர்களை ஆக்கவழி நிறுத்தும் கோளுடையது இந்தப் பாடல்).

ஸ்வதந்திர தாகம்

(கண்ணிகள்)

தண்ணீர்விட் டோவளர்த்தோம்? சர்வேசா, இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்; கருகத் திருவுளமோ? 1

எண்ணமெலாம் நெய்யாக, எம்முயிரி னுள்வளர்ந்த
வண்ணவிளக் கிஃது மடியத் திருவுளமோ? 2

ஓரா யிரவருட மோய்ந்து கிடந்தபின்னர்
வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ? 3

தர்மமே வெல்லுமெனுஞ் சான்றோர்சொற் பொய்யாமோ?
கர்ம விளைவுகள்யாங் கண்டதெல்லாம் போதாதோ?4

மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ? 5

எண்ணற்ற நல்லோ ரிதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற் கலங்குவது காண்கிலையோ 6

மாதரையு மக்களையும் வன்கண்மை யாற்பிரிந்து
காத லிளைஞர் கருத்தழிதல் காணாயோ? 7

எந்தாய்நீ தந்த இயற்பொருளெ லாமிழந்து
நொந்தார்க்கு நீயன்றி நோவழிப்பார் யாருளரோ? 8

இன்பச் சுதந்திரநி னின்னருலாற் பெற்றதன்றோ?
அன்பற்ற மாக்க ளதைப்பறித்தாற் காவாயோ? 9

வானமழை யில்லையென்றால் வாழ்வுண்டோ எந்தைசுயா
தீனமெமக் கில்லையென்றால் தீனரெது செய்வோமே? 10

நெஞ்சகத்தே பொய்யின்றி நேர்ந்ததெலாம் நீதருவாய்
வஞ்சகமோ எங்கள் மனத்தூய்மை காணாயோ? 11

பொய்க்கோ உடலும் பொருளுயிரும் வாட்டுகிறோம்
பொய்க்கோ தீராது புலம்பித் துடிப்பதுமே? 12

நின்பொருட்டு நின்னருளால் நின்னுரிமை யாம்கேட்டால்,
என் பொருட்டு நீதான் இரங்கா திருப்பதுவே? 13

இன்றுபுதி தாயிரக்கின் றோமா? முன்னோர்
அன்றுகொடு வாழ்ந்த அருமையெலா மோராயோ? 14

நீயும் அறமும் நிலைத்திருத்தல் மெய்யானால்
ஓயுமுன ரெங்களுக்கிவ் வோர்வரநீ நல்குதியே.

8. நொண்டிச் சிந்தில் அமைந்த இந்தப்பாடல் 13.3.1909-இல் இந்தியாவில் வெளிவந்துள்ளது. மூடநம்பிக்கை, அச்சம் இவற்றால் அல்லலுறும், பிரிந்து வருந்தும் அறிவற்ற அவர்கால பாரத மக்கள் நிலை கண்டு மனம் நொந்து பாடியது.

துடிக்கின்ற நெஞ்சம்

(பாரத ஜனங்களின் தற்கால நிலை)
(நொண்டிச்சிந்து)

நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால். (நெ)

அஞ்சி யஞ்சிச் சாவார் - இவர்
அஞ்சாத பொருளில்லை யவனியிலே;
வஞ்சனைப் பேய்களென்பார் - இந்த
மரத்திலென்பா ரந்தக் குளத்திலென்பார்;
துஞ்சுது முகட்டிலென்பார் - மிகத்
துயர்ப்படு வாரெண்ணிப் பயப்படுவார். (நெ) 1

மந்திர வாதியென்பார் - சொன்ன
மாத்திரத்தி லேமனக் கிலிபிடிப்பார்;
யந்திர சூனியங்கள் - இன்னும்
எத்தனை யாயிர, மிவர்துயர்கள்!

தந்த பொருளைக்கொண்டே - ஜனந்
 தாங்குவ ருலகத்தி லரசரெல்லாம்;
அந்த அரசியலை - இவர்
 அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சமயர்வார்(நெ) 2

சிப்பாயைக் கண்டஞ்சுவார் - ஊர்ச்
 சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார்;
துப்பாக்கி கொண்டொருவன் - வெகு
 தூரத்தில் வரக்கண்டு வீட்டி லொளிப்பார;
அப்பா லெவனோ செல்வான் - அவன்
 ஆடையைக் கண்டுபயந் தெழுந்து நிற்பார்;
எப்போதுங் கைகட்டுவார் - இவர்
 யாரிடத்தும் பூனைகள்போ லேங்கி நடப்பார்(நெ) 3

நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
 நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
கொஞ்சமோ பிரிவினைகள்! - ஒரு
 கோடியென் றாலது பெரிதாமோ?
அஞ்சுதலைப் பாம்பென்பான் - அப்பன்
 ஆறுதலை யென்றுமகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார் - பின்பு
 நெடுநா ளிருவரும் பகைத்திருப்பார். (நெ) 4

சாத்திரங்க ளொன்றும் காணார் -பொய்ச்
 சாத்திரப் பேய்கள்சொல்லும் வார்த்தைநம்பியே
கோத்திரமொன் றாயிருந்தாலும் - ஒரு
 கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார்;
தோத்திரங்கள் சொல்லியிவர்தாம் - தமைச்
 சூதுசெய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்
ஆத்திரங்கொண் டேயிவன்சைவன் - இவன்
 அரிபக்த னென்றுபெருஞ் சண்டை யிடுவார்.(நெ) 5

நெஞ்சு பொறுக்குதில்லையே - இதை
 நினைந்து நினைந்திடினும் வெறுக்குதிடிலையே ?

கஞ்சி குடிப்பதற்கில்லார் - அதன்
காரணங்க ளிவையெனு மறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே - நிதம்
பரிதவித் தேயுயிர் துடிதுடித்துத்
துஞ்சி மடிகின்றாரே - இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே (நெ) 6

எண்ணிலா நோயுடையார் - இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தைகள்போல - பிறர்
காட்டிய வழியிற்சென்று மாட்டிக்கொள்வார்;
நண்ணிய பெருங்கலைகள் - பத்து
நாலா யிரங்கோடி நயந்துநின்ற
புண்ணிய நாட்டினிலே - இவர்
பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார். (நெ)

9. 'ஜன்மபூமி' என்னும் தொகுதியில் பதினைந்தாவது பாடல் இது. சுதந்திர வீரன் ஒருவன் சுதந்திர தேவியிடம் செய்யும் உறுதி மொழி, ஊக்க மொழியாக அமைந்து கற்கும் ஒவ்வொருவரையும் வீறு கொள்ளச் செய்வது இந்தப் பாடல்.

சுதந்திர தேவியின் துதி

இதந்தரு மனையி னீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு இரண்டு மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி யின்னல்
விளைந்தெனை யழித்திட்டாலும்
சுதந்திரத் தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே. 1

நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்

பன்னருங் கல்வி கேள்வி
படைத்துயர்ந் திட்டா ரேனும்
பின்னரு மெண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார். 2

தேவி! நின் னொளிபெ றாத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ? செம்மை
யறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள்வே தங்க ளுண்டோ?
பாவிய ரன்றோ நின்றன்
பாலனம் படைத்தி லாதார்? 3

ஒழிவறு நோயிற் சாவார்
ஊக்கமொன் றறிய மாட்டார்;
கழிவுறு மாக்க ளெல்லாம்
இகழ்ந்திடக் கடையி னிற்பார்;
இழிவுறு வாழ்க்கை தேரார்;
கனவினு மின்பங் காணார்;
அழிவறு பெருமை நல்கும்
அன்னை!நின் னருள்பெ றாதார். 4

வேறு

தேவி! நின்னருள் தேடி யுளந்தவித்
தாவி யுந்தம தன்பு மளிப்பவர்
மேவி நிற்பது வெஞ்சிறை யாயினுந்
தாவில் வானுல கென்னத் தகுவதே. 5

அம்மை யுன்ற னருமை யறிகிலார்;
செம்மை யென்றிழி தொண்டினைச்
சிந்திப்பார்;

இம்மை யின்பங்க ளெய்துபொன் மாடத்தை
வெம்மை யார்புன் சிறையெனல்
வேண்டுமே. 6

மேற்றி சைப்பல நாட்டினர் வீரத்தாற்
போற்றி நின்னைப் புதுநிலை யெய்தினர்;
கூற்றி னுக்குயிர் கோடிகொ டுத்தும்நின்
பேற்றி னைப்பெறு வேமெனல் பேணினர். 7

அன்ன தன்மைகொள் நின்னை யடியனேன்
என்ன கூறி யிசைத்திட வல்லனே?
பின்ன முற்றுப் பெருமை யிழந்துநின்
சின்ன மற்றழி தேயத்திற் றோன்றினேன்! 8
பேர றத்தினைப் பேணுநல் வேலியே!
சோர வாழ்க்கை, துயர், மிடி, யாதிய
கார றுக்கக் கதித்திடு சோதியே!
வீர ருக்கமு தே! நினை வேண்டுவேன்.

10. 'தாயின் மணிக்கொடி'.. என அரசுப்பதிப்பில் இடம்பெற்ற இந்தப்பாடல் 'ஜன்ம பூமி' என்னும் தொகுதியில் நான்காவதாக அமைந்துள்ளது. பாரதநாட்டு மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு நாட்டுக்கொடியைக் காத்து நிற்பது போன்று எதிர்காலப் பாரதநாட்டு அமைப்பைக் கற்பனையில் காட்டுவது இந்தப் பாடல்.

மாதாவின் துவஜம்

(பாரத நாட்டுக் கொடியினைப் புகழ்தல்)

(தாயுமான சுவாமிகள் ஆனந்தக் களிப்பு வர்ணமெட்டு)

தாயின் மணிக்கொடி பாரீர்!- அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!
ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் - அதன்
உச்சியின் மேல்வந்தே மாதர மென்றே

பாங்கி னெழுதித் திகழும் - செய்ய
 பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்! (தா) 1
பட்டுத் துகிலென லாமோ? - அதில்
 பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டு மிகுந்தடித் தாலும் - அதை
 மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப் படலம்
 , (தா) 2
இந்திரன் வச்சிர மோர்பால் - அதில்
 எங்கள் துருக்க ரிளம்பிறை யோர்பால் -
மந்திர நடுவுறத் தோன்றும் - அதன்
 மாண்பை வகுத்திட வல்லவன் யானோ? (தா) 3
கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர் - எங்கும்
 காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பர்க் குரியரவ் வீரர் - தங்கள்
 நல்லுயி ரீந்துங் கொடியினைக் காப்பர் (தா) 4
அணியணி யாயவர் நிற்கும் - இந்த
 ஆரியக் காட்சியோ ரானந்த மன்றோ?
பணிகள் பொருந்திய மார்பும் - விறற்
 பைந்திரு வோங்கும் வடிவமும் காணீர் (தா) 5
செந்தமிழ் நாட்டுப் பொருநர் - கொடுந்
 தீக்கன் மறவர்கள் சேரன்றன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர் - தாயின்
 சேவடிக் கேபணி செய்திடு துளுவர் (தா) 6
கன்னட ரொட்டியரோடு - போரிற்
 காலனு மஞ்சக் கலக்கு மராட்டர்
பொன்னகர்த் தேவர்க ளொப்ப - நிற்கும்
 பொற்புடை யாரிந்து ஸ்தானத்து மல்லர் (தா) 7
பூதல முற்றிடும் வரையும் - அறப்
 போர்விறல் யாவு மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும் - பாரில்
 மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர் (தா) 8

பஞ்ச நதத்துப் பிறந்தோர் - முன்னைப்
பார்த்தன் முதற்பலர் வாழ்ந்தநன் னாட்டார்
துஞ்சும் பொழுதினுந் தாயின் - பதத்
தொண்டு நினைத்திடும் வங்கத்தி னோரும்
(தா) 10

சேர்ந்ததைக் காப்பது காணீர்! - அவர்
சிந்தையின் வீர நிரந்தரம் வாழ்க!
தேர்ந்தவர் போற்றும் பரத நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க!

11. பிப்ரவரி, 1910 கர்மயோகி-இல் காணப்பெறும் இந்தப் பாடல் 1910-இல் வெளியான 'மாதா வாசகம்' என்னும் தொகுப்பில் பத்தாவதாக அமைந்துள்ளது. பாரதியாரின் மூன்றாவது 'கீதநூல்' இஃது என்று திரு எஸ்.ஜி. இராமாநுஜலு நாயுடு குறிப்பிடுவதாக பெ. தூரன் கூறுவர். 'மக்கள் எழுந்தனர் - பாரத மாதவே நீ எழு-' என நாட்டை ஒருசேர விடுதலைப் போருக்கு எழுச்சியுறச் செய்யும் நோக்குடையது இது.

பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி

பொழுது புலர்ந்தது; யாஞ்செய்த தவத்தால்;
புன்மை யிருட்கணம் போயின யாவும்;
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எயழுந்து விளங்கிய தறிவெனும் இரவி;
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்து
நிற்கின்றோம்.
விழிதுயில் கின்றனை யின்னுமெந் தாயே,
வியப்பிது காண்!பள்ளி யெழுந்தரு ளாயே!
புள்ளினம் ஆர்த்தன! ஆர்த்தன முரசம்;
பொங்கின தெங்குஞ் சுதந்திர நாதம்;

வெள்ளிய சங்க முழங்கின கேளாய்!
வீதியெ லாமணு குற்றனர் மாதர்!
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்.
சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றார்;
அள்ளிய தெள்ளமு தன்னையெ மன்னை!
ஆருயி ரே!பள்ளி யெழுந்தரு ளாயே! 2

பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்;
பார்மிசை நின்னொளி காணுதற்
கலந்தோம்;
கருதிநின் சேவடி யணிவதற் கென்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்;
சுருதிகள் பயந்தனை! சாத்திரங் கோடி
சொல்லரு மாண்பின! ஈன்றனை யம்மே!
நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத் தேற்றாய்,
நிர்மலை யேபள்ளி யெழுந்தாரு ளாயே! 3

நின்னெழில் விழியருள் காண்பதற் கெங்கள்
நெஞ்சகத் தாவலை நீயறி யாயோ?
பொன்னனை யாய்வெண் பனிமுடி, யிமயப்
பொருப்பின னீந்த பெருந்தவப் பொருளே!
மன்னத வங்கள்செய் தெத்தனை காலம்
ஏங்குவம் நின்னருட் கேழையம் யாமே?
இன்னமும் துயிலுதி யேலிது நன்றோ?
இன்னுயி ரேபள்ளி யெழுந்தரு ளாயே! 4

மதலைய ரெழுப்பவுந் தாய்துயில் வாயோ?
மாநிலம் பெற்றவ ளிஃதுண ராயோ?
குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ?
கோமக ளேபெரும் பாரதர்க் கரசே!
விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணாய்;
இதமுற வந்தெமை யாண்டருள் செய்வாய்!
ஈன்றவளே! பள்ளி யெழுந்தருள்வாயே! 5

12. 1919-இல் 'நாட்டுப்பாட்டு' என்ற தொகுதியில் முதலில் இடம் பெற்றுள்ளது. 1922-இல் வெளிவந்த பதிப்பில் பல்லவி,சரணங்கள் என்னும் பகுப்பு இடம்பெற்றுள்ளது. புறக்காவலுக்குப் படை, அகக் காவலுக்குக் கல்வி-இவற்றின் அடிப்படையில் அன்பால், அறிவால், பண்பால், பயனால் அமைந்த நாட்டிணைப்பு, ஒருமைப்பாடு இவற்றை அன்றே பாரதியார் எண்ணியிருக்கிறார் என்கிற உண்மையை உணர்வோடு புலப்படுத்துவது இந்தப் பாடல். ஐந்தாண்டுத் திட்டம் பலவற்றுக்கு வித்து பல இங்குக் கிடைக்கிறது.

பாரததேசம்

ராகம்: புன்னாக வராளி

பல்லவி

பாரத தேசமென்று பெயர்சொல்லுவார் -மிடிப்
பயங்கொல்லு வார்துயர்ப் பகைவெல்லுவார்.

சரணங்கள்

வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்-அடி
மேலைக் கடல்முழுதுங் கப்பல்விடுவோம்
பள்ளித் தலமனைத்துங் கோயில்செய்குவோம்-எங்கள்
பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்.
(பாரத) 1

சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்
வங்கத்தி லோடிவரும் நீரின்மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர்செய்குவோம். (பாரத) 2

வெட்டுக் கனிகள்செய்து தங்கமுதலாம்
வேறு பலபொருளுங் குடைந்தெடுப்போம்
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவைவிற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டுவருவோம்
(பாரத) 3

முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே;
மொய்த்து வணிகர்பல நாட்டினர்வந்தே (பாரத) 4
நத்தி நமக்கினிய பொருள்கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே.

சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்.
(பாரத) 5

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தங் கவிதைகொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.
காசி நகர்ப்புலவர் பேசுமுரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்
ராசபுத் தானத்து வீரர்தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கமளிப்போம்.
(பாரத) 7

பட்டினி லாடையும் பஞ்சிலுடையும்
பண்ணி மலைகளென வீதிகுவிப்போம்;
கட்டித் திரவியங்கள் கொண்டுவருவார்
காசினி வணிகருக் கவைகொடுப்போம். (பாரத) 8

ஆயுதம் செய்வோம்நல்ல காகிதம்செய்வோம்;
ஆலைகள் வைப்போம்கல்விச் சாலைகள்வைப்போம்
ஓயுதல் செய்வோம்தலை சாயுதல் செய்வோம்
உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள்
செய்யோம். (பாரத) 9

குடைகள் செய்வோம் உழு படைகள்செய்வோம்
கோணிகள்செய்வோம் இரும் பாணிகள்செய்வோம்

நடையும் பறப்புமுணர் வண்டிகள்செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள்செய்வோம்.
(பாரத) 10

மந்திரங் கற்போம்வினைத் தந்திரங்கற்போம்
வானை யளப்போம்கடல் மீனையளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டுதெளிவோம்;
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரங்கற்போம்.
(பாரத) 11

காவியஞ் செய்வோம் நல்ல காடுவளர்ப்போம்
கலை வளர்ப்போம்கொல்ல ருலை வளர்ப்போம்.
ஓவியம் செய்வோம்நல்ல ஊசிகள்செய்வோம்
உலகத் தொழிலனைத்து முவந்துசெய்வோம்.
(பாரத) 12

சாதிகள் இரண்டொழிய வேறிலையென்றே
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்தமென்போம்
நீதி நெறியினின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர் கீழவர்மற்றோர். (பாரத) 13

13. இந்தப் பாடல் சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் பாடப்பெற்றது. வ.உ.சு. ஐயரின் `தேசபக்தன்' இதழில் வெளிவந்துள்ளது. எந்த வகையான குடியரசு, குடியரசுச் சட்டங்கள் இயற்றவேண்டும் பின்பற்ற வேண்டும், அவற்றின் அடிப்படை நோக்குகள் என்னென்னவாக அமையவேண்டும் என அறிவிப்பது இந்தப் பாடல்.

பாரத சமுதாயம்

பல்லவி

பாரத சமுதாயம் வாழ்கவே - வாழ்க, வாழ்க!
பாரத சமுதாயம் வாழ்கவே! - ஜய ஜய ஜய (பாரத)

அநுபல்லவி

முப்பது கோடி ஜனங்களின் சங்க
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பி லாத ஸமுதாயம்
உலகத்துக் கொருபுதுமை - வாழ்க! (பாரத)

சரணங்கள்

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்க மினியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை யினியுண்டோ- (புலனில்
வாழ்க்கை யினியுண் டோ-நம்மிலந்த
வாழ்க்கை யினியுண்டோ?)
இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு;
கனியுங் கிழங்குந் தானியங்களும்-
கணக் கின்றித் தரு நாடு (இது
கணக் கின்றித் தரு நாடு - நித்தம்
கணக் கின்றித் தரு நாடு - வாழ்க! (பாரத) 1
இனி யொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்.
தனி யொருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை யழித் திடுவோம் - வாழ்க!
(பாரத) 2

"எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்"
என்றுரைத்தான் கண்ண பெருமான்;
எல்லாரு மமரநிலை யெய்துநன் முறையை
இந்தியா உலகிற் களிக்கும்- ஆம்,
இந்தியா உலகிற் களிக்கும்- ஆம்,ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்- வாழ்க (பாரத) 3
எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்-
எல்லாரும் இந்திய மக்கள்

எல்லாரும் மோர்நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!- நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் - ஆம்!
எல்லாரும் இந்நாட்டு மன்னர் - வாழ்க (பாரத) 4

14. பாரதநாட்டின் பண்பு, பயன், நண்பு, நலம் ஆகிய அனைத்தையும் உணர்த்திப் பாரத நாட்டாரை பெருமிதமுறச் செய்து தொய்விலிருந்து, தாழ்வு மனப்பான்மையிலிருந்து அவர்களை மீட்கும் கருத்துக்களை இது வழங்குகிறது.

பாரத நாடு

ராகம்-ஹிந்துஸ்தானி தோடி

பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரத நாடு.

சரணங்கள்

ஞானத்தி லேபர மோனத்திலே - உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே,
கானத்தி லேஅமு தாக நிறைந்த
கவிதையிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 1

தீரத்திலே படை வீரத்திலே - நெஞ்சில்,
ஈரத்திலே யுப காரத்திலே,
சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு
தருவதிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 2
நன்மையிலே யுடல் வன்மையிலே-செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே,
பொன்மயி லொத்திடு மாதர்தங் கற்பின்
புகழினிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 3

ஆக்கத்திலே தொழி லூக்கத்திலே - புய
வீக்கத்திலே யுயர் நோக்கத்திலே,

காக்கத் திறல் கொண்ட மல்லர்தஞ் சேனைக்
கடலினிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 4

வண்மையிலே யுளத் திண்மையிலே - மனத்
தண்மையிலே மதி நுண்மையிலே,
உண்மையிலே தவறாத புலவர்
உணர்வினிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 5

யாகத்திலே தவ வேகத்திலே - தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்தி கொண்டார்தம்
அருளினிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 6

ஆற்றினிலே சுனை யூற்றினிலே - தென்றற்
காற்றினிலே மலைப் பேற்றினிலே
ஏற்றினிலே பய னீந்திடுங் காலி
யினத்தினிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 7

தோட்டத்திலே மரக் கூட்டத்திலே - கனி
யீட்டத்திலே பயி ரூட்டத்திலே
தோட்டத்திலே யடங்காத நதியின்
சிறப்பினிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 8

15. ஒன்பது மணிகள் கொண்டமைந்த மாலை போன்று வெண்பா, ஆசிரியம், வஞ்சி, கலிப்பா என்னும் நான்கு வகை பா, பாவினம் பயில பாரத நாட்டுச் சிறப்பு, செயல் குறித்துப் பல செய்திகளைக் கூறுவது இந்தக் கவிமாலை.

பாரத மாதா நவரத்ன மாலை

காப்பு

வீரர்முப் பத்திரண்டு கோடி விளைவித்த
பாரதமா தாவின் பதமலர்க்கே - சீரார்
நவரத்ன மாலையிங்கு நான்சூட்டக் காப்பாம்
சிவரத்ன மைந்தன் திறம்

வெண்பா

திறமிக்க நல்வயிரச் சீர்திகழு மேனி
அறமிக்க சிந்தை; அறிவு - பிற நலங்கள்
எண்ணற் றனபெறுவார் "இந்தியா" என்றநின்றன்
கண்ணொத்த பேருரைத்தக் கால். 1

கட்டளைக் கலித்துறை

காலன் எதிர்ப்படிற் கைகூப்பிக்
கும்பிட்டுக் கம்பனமுற்
றோலமிட் டோடி மறைந்தொழி
வான்; பகை யொன்றுளதோ?

நீலக் கடலொத்த கோலத்தி
னாள்; மூன்று நேத்திரத்தாள்
காலக் கடலுக்கோர் பாலமிட்
டாள் அன்னை காற்படியே. 2

எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்

அன்னையே, அந்நாளில் அவனிக் கெல்லாம்
ஆணிமுத்துப் போன்றமணி மொழிக ளாலே
பன்னிநீ வேதங்கள், உபநிட தங்கள்

பரவுபுகழ்ப் புராணங்கள், இதிகா சங்கள்:
இன்னும்பன் னூல்களிலே யிசைத்த ஞானம் -
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனை
யிந்நாள்?
மின்னுகின்ற பேரொளிகாண்! காலங்கொன்ற
விருந்துகாண்! கடவுளுக்கோர் வெற்றி
காணே. 3

(ஆசிரியப்பா)

வெற்றி கூறுமின்! வெண்சங் கூதுமின்!
கற்றவ ராலே உலகுகாப் புற்றது.
உற்றதிங் கிந்நாள்! உலகினுக் கெல்லாம்
இற்றைநாள் வரையினும், அறமிலா மறவர்,

குற்றமே தமது மகுடமாக் கொண்டோர்,
மற்றை மனிதரை யடிமைப் படுத்தலே
முற்றிய அறிவின் முறையென் றெண்ணுவார்;
பற்றை யரசர் பழிபடு படையுடன்
சொற்றை நீதி தொகுத்துவைத் திருந்தார்
இற்றை நாள்;

பாரி லுள்ள பல நாட்டினர்க்கும்
பாரத நாடு புதுநெறி பழக்க
லுற்றிதிங் கிந்நாள் உலகெலாம் புகழ
இன்ப வளஞ்செறி பண்பல பயிற்றுங்
கவீந்திர னாகிய ரவீந்திர நாதன்
சொற்றது கேளீர்! - "புவிமிசை யின்று
மனிதர்க் கெல்லாந் தலைப்படு மனிதன்
தர்மமே யுருவாம் மோஹன தாஸ்
கரம் சந்த் காந்தி" யென் றுரைத்தான்.
அத்தகைய காந்தியை அரசியல் நெறியிலே
தலைவனாக் கொண்டு புவிமிசைத் தருமமே
அரசிய லதனிலும், பிறஇய லனைத்திலும்
வெற்றி தருமென வேதஞ் சொன்னதை
முற்றும் பேண முற்பட்டு நின்றார்
பாரத மக்கள். இதனாற் படைஞர்தஞ்
செருக்கொழிந் துலகி லறந்திறம் பாத
கற்றோர் தலைப்படக் காண்போம் - விரைவிலே
(வெற்றி கூறுமின்; வெண்சங் கூதுமின்!) 4

தரவு கொச்சகக் கலிப்பா

ஊதுமினோ வெற்றி! ஒலிமினோ வாழ்த்தொலிகள்!
ஓதுமினோ வேதங்கள்! ஓங்குமினோ! ஓங்குமினோ!
தீதுசிறி தும்பயிலாச் செம்மணிமா நெறிகண்டோம்
வேதனைக ளினிவேண்டா; விடுதலையோ
திண்ணமே. 5

(வஞ்சி விருத்தம்)

திண்ணங் காணீர்! பச்சை
வண்ணன் பாதத் தாணை;
எண்ணங் கெடுதல் வேண்டா
திண்ணம், விடுதலை திண்ணம். 6

கலிப்பா

"விடுத லைபெறு வீர்விரை வாநீர்
வெற்றி கொள்ளுவீர்" என்றுரைத் தெங்கும்
கெடுத லின்றிநந் தாய்த்திரு நாட்டின்
கிளர்ச்சி தன்னை வளர்ச்சிசெய் கின்றான்.
"சுடுத லுங்குளி ரும்உயிர்க் கில்லை;
சோர்வு, வீழ்ச்சிகள், தொண்டருக் கில்லை;
எடுமி னோஅறப் போரினை" யென்றான்
எங்கோ மேதக மேந்திய காந்தி 7

(அறுசீர் விருத்தம்)

காந்திசேர் பதும ராகக் கடிமலர் வாழ்ஸ்ரீ தேவி
போந்துநிற் கின்றா ளின்று பாரதப் பொன்னா டெங்கும்
மாந்தரெல் லாருஞ் சோர்வை அச்சத்தை மறந்து விட்டார்
காந்திசொற் கேட்டார், காண்பார் விடுதலை கணத்தி
னுள்ளே. 8

(எழுசீர்க்கடி நெடிலாசிரிய விருத்தம்)

கணமெனு மென்றன் கண்முனே வருவாய்
பாரத தேவியே, கனல்கால்
இணைவிழி வால வாயமாஞ் சிங்க
முதுகினி லேறிவீற் றிருந்தே.
துணைநினை வேண்டு நாட்டினர்க் கெல்லாந்
துயர்கெட விடுதலை யருளி
மணிநகை புரிந்து திகழ்திருக் கோலங்
கண்டுநான் மகிழ்ந்திடு மாறே 9

16. அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய மூன்று நிலைகளிலும் விடுதலை வேண்டும். எல்லோருக்கும் ஆண், பெண் இருபாலருக்கும், உயர்ந்தோர்

தாழ்ந் தோர் ஆகிய இரு நிலையினர்க்கும் ஏழை செல்வர் என்னும் இரு பிரிவினர்க்கும் சம உரிமை, சமநிலை, சமமதிப்பு விடுதலைபெற்ற பாரத நாடு வழங்க வேண்டும் என்று பாரதியார் கருதினார். அந்தக் கருத்தே இந்தப் பாடலாக உருவாகியுள்ளது.

விடுதலை

ராகம்: பிலஹரி

விடுதலை! விடுதலை! விடுதலை!
பறைய ருக்கு மிங்கு தீயர்
புலைய ருக்கும் விடுதலை;
பரவ ரோடு குறவ ருக்கு
மறவ ருக்கும் விடுதலை!
திறமை கொண்ட தீமை யற்ற தொழில்பு ரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி, ஞான மெய்தி வாழ்வமிந்த நாட்டிலே 1

ஏழை யென்றும் அடிமை யென்றும் எவனு மில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்ப திந்தி யாவில் இல்லையே
வாழி கல்வி செல்வ மெய்தி மனமகிழ்ந்து கூடியே,
மனிதர் யாரு மொருநிகர் - ஸமான மாக வாழ்வமே. 2

மாதர் தம்மை யிழிவு செய்யு மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குள்ளே
தாத ரென்ற நிலைமை மாறி யாண்களோடு பெண்களும்
சரி, நிகர், ஸமான மாக வாழ்வ மிந்த நாட்டிலே 3

17. காந்தி அடிகளார் பாரத நாட்டுச் சுதந்திர இயக்கத்தில் கால்வைத்த போதே அவரால் பாரத நாடு பெறப்போகும் விடுதலையை, வெற்றியைப் பற்றி முதன் முதல் தெளிவாக, திண்ணமாகப் பாடிய பாரதநாட்டுக் கவி பாரதியார்தான் என்பதை நிலைநாட்டும் பாடல் இது. காந்தியைப் பற்றிய சரியான கணிப்பு இங்குக் காணப்பெறுகிறது.

மஹாத்மா காந்தி பஞ்சகம்

வாழ்கநீ! எம்மான் இந்த
  வையத்து நாட்டி லெல்லாந்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி,
  விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
  பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
  மஹாத்ம! நீ வாழ்க; வாழ்க!

அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
  விடுதலை யார்ந்து செல்வம்
குடிமையி லுயர்வு, கல்வி,
  ஞானமுங் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
  படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
  புவிக்குளே முதன்மை யுற்றாய்.

(வேறு)

கொடியவெந் நாக பாசத்தை மாற்ற
  மூலிகை கொணர்ந்தவ னென்கோ?
இடிமின்னல் காக்குங் குடைசெய்தா
  னென்கோ?
  என்சொலிப் புகழ்வதிங் குனையே?
விடிவிலாத் துன்பஞ் செயும்பரா தீன
  வெம்பிணி யகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாச் சாலவு மெளிதாம்
  படிக்கொரு சூழ்ச்சி நீ படைத்தாய்!

தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
  பிறனுயிர் தன்னையுங் கணித்தல்;
மன்னுயி ரெல்லாங் கடவுளின் வடிவம்
  கடவுளின் மக்களென் றுணர்தல்;

இன்பமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றாங்
கிழிபடு, போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனிற்
பிணைத்திடத் துணிந்தனை பெருமான்!

பெருங்கொலை வழியாம் போர்வழி
யிகழ்ந்தாய்;
அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்றுநீ யறிந்தாய்;
நெருங்கிய பயன்சேர் "ஒத்துழையாமை"
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்கநல் லறத்தே

18. தசாங்கம் என்பது அரசர் ஒருவருடைய பெயர், நாடு, நகர், ஆறு முதலிய பத்து உறுப்புக்களைப் பத்து வெண்பாக்களில் பாடுகின்ற ஒருவகை சிற்றிலக்கியமாகும். இங்குப் பாரத தேவியை அரசியாக வைத்து அவளுடைய நாடு, நகர், ஆறு முதலிய உறுப்புகளைப் பத்து வெண்பாக்களில் பாடி பாரதியார் போற்றியிருக்கிறார். இந்தப் பாடல் 10-10-1908 இல் இந்தியா பத்திரிக்கையில் வந்துள்ளது. பின்னர் 'ஜன்ம பூமி' (1909) 'நாட்டுப்பாட்டு' (1919) என்னும் பாரதியார் கவிதைத் தொகுதிகளில் இடம் பெற்றுள்ளது.

பாரத தேவியின் திருத்தசாங்கம்

(நேரிசை வெண்பா)

நாமம்

(காம்போதி)

பச்சை மணிக்கிளியே பாவியெனக் கேயோகப்
பிச்சை யருளியதாய் பேருரையாய் - இச்சகத்திற்
பூரணமா ஞானப் புகழ்விளக்கை நாட்டுவித்த
பாரதமா தேவியெனப் பாடு. 1

நாடு
(வஸந்தா)

தேனார் மொழிக்கிள்ளாய்! தேவியெனக் கானந்த
மானாள்பொன் னாட்டை யறிவிப்பாய் - வானாடு
பேரிமய வெற்புமுதற் பெண்குமரி யீறாகும்
ஆரியநா டென்றே யறி 2

நகர்
(மணிரங்கு)

இன்மழலைப் பைங்கிளியே யெங்க ளுயிரானாள்
நன்மையுற வாழு நகரெதுகொல் - சின்மயமே
நானென் றறிந்த நனிபெரியோர்க் கின்னமுது
தானென்ற காசித் தலம்

(ஆறு)
(சுருட்டி)

வண்ணக் கிளி! வந்தே மாதரமென் றோதுவரை
யின்னலறக் காப்பாளி யாறுரையாய் - நன்னர் செயத்
தான்போம் வழியெல்லாந் தன்மமொடு பொன்விளைக்கும்
வான்போந்த கங்கையென வாழ்த்து. 4

மலை
(கானடா)

சோலைப் பசுங்கிளியே! தொன்மறைக னான்குடையாள்
வாலை வளரு மலைகூறாய் - ஞாலத்துள்
வெற்பொன்றும் மீடிலதாய் விண்ணில் முடிதாக்கும்
பொற்பொன்று வெள்ளைப் பொருப்பு. 5

ஊர்தி
(தன்யாசி)

சீருஞ் சிறப்புமுயர் செல்வமுமோ ரெண்ணற்றாள்
ஊரும் புரவியுரை தத்தாய்- தேரிற்
பரிமிசையூர் வாளல்லள் பாரனைத்து மஞ்சும்
அரிமிசையே யூர்வா ளவள். 6

படை
(முகாரி)

கருணை யுருவானாள் காய்ந்தெழுங்காற் கிள்ளாய்
செருநரைவீழ்த் தும்படையென் செப்பாய்
பொருபவர்மேற்
றண்ணளியான் வீழாது வீழிற் றகைப்பரிதாந்
திண்ணமுறு வான்குலிசம் தேறு.

முரசு
(செஞ்சுருட்டி)

ஆசை மரகதமே! யன்னைதிரு முன்றிலிடை
யோசை வளர்முரசம் மோதுவாய் - பேசுகவோ
சத்தியமே: செய்க தருமமே யென்றொலிசெய்
முத்திதரும் வேத முரசு. 8

தார்
(பிலஹரி)

வாரா யிளஞ்சுகமே வந்திப்பார்க் கென்றுமிடர்
தாராள் புனையுமணித் தார்கூறாய்! - சேராரை
முற்றாக் குறுநகையான் முற்றுவித்துத் தானொளிர்வாள்
பொற்றா மரைத்தார் புனைந்து. 9

கொடி
(கேதாரம்)

கொடிப்பவள வாய்க்கிள்ளாய் குத்திரமுந் தீங்கு
மடிப்பவளின் வெல்கொடிதான் மற்றென்?
அடிப்பணிவார்
நன்றாரத் தீயார் நலிவுறவே வீசுமொளி
குன்றா வயிரக் கொடி. 10

19. பாரத நாட்டு வீரம், வெற்றி, தத்துவம், இலக்கியம், கொடை, தியாகம் முதலிய சிறப்புகளைப் புலப்படுத்துவது இந்தக் கவிதை. வினா-விடைப்

போக்கில் அமைந்து கருத்துத் தெளிவும் உணர்ச்சிச் சிறப்பும் பொருந்தியுள்ளது.

பாரத மாதா

தான தனந்தன தான தனந்தன
தானனத் தானா னே.

முன்னை யிலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடைவில்? எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின் வில். 1

இந்திர சித்தன் இரண்டுதுண் டாக
எடுத்தவில் யாருடைவில்? - எங்கள்
மந்திரத் தெய்வதம் பாரத ராணி
வயிரவி தனனுடை வில் 2

ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள்
உலகின்பக் கேணி யென்றே மிக
நன்றுபல் வேதம் வரைந்தகை பாரத
நாயகி தன்திருக் கை. 3

சித்த மயமிவ் வுலகம் உறுதி நம்
சித்தத்தில் ஓங்கிவிட்டால் - துன்பம்
அத்தனையும் வெல்ல லாமென்று சொன்னசொல்
ஆரிய ராணியின் சொல். 4

சகுந்தலை பெற்றதோர் பிள்ளைசிங் கத்தினைத்
தட்டி விளையாடி நன்
றுகந்ததோர் பிள்ளைமுன் பாரத ராணி
ஒளியுறப் பெற்றபிள் ளை. 5

காண்டிவ மேந்தி உலகினை வென்றது
கல்லொத்த தோளெவர்தோள்? - எம்மை
ஆண்டருள் செய்பவள் பெற்று வளர்ப்பவள்
ஆரியர் தேவியின் தோள். 6

சாகும் பொழுதில் இருசெவிக் குண்டலம்
தந்ததெ வர்கொடைக்கை? சுவைப்
பாகு மொழியிற் புலவர்கள் போற்றிடும்
பாரத ராணியின் கை. 7

போர்க்களத் தேபர ஞானமெய்க் கீதை
புகன்றது தெவருடை வாய்? பகை
தீர்க்கத் திறந்தரு பேரினள் பாரத
தேவி மலர்த்திரு வாய். 8

தந்தை யினிதுறத் தானர சாட்சியும்
தையலர் தம்முறவும் - இனி
இந்த உலகில் விரும்புகி லேனென்ற
தெம்மனை செய்த வுள்ளம். 9

அன்பு சிவம்உல கத்துயிர் யாவையும்
அன்பினிற் போகுமென்றே - இங்கு
முன்பு மொழிந்துல காண்டதோர் புத்தன்
மொழியெங்கள் அன்னை மொழி. 10

மிதிலை எரிந்திட வேதப் பொருளை
வினவும் சனகன்மதி - தன்
மதியினிற் கொண்டதை நின்று முடிப்பது
வல்லநம் அன்னை மதி. 11

தெய்விகச் சாகுந் தலமெனும் நாடகம்
செய்த தெவர்கவிதை? - அயன்
செய்வத னைத்தின் குறிப்புணர் பாரத
தேவிய ருட்க விதை. 12

20. "போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்" என்று அரசுப் பதிப்பில் அமைந்த இந்தப் பாடல் அடிமைப் பாரதத்தின் நொய்மை, கீழ்மை, தன்மானமின்மை, ஒற்றுமையின்மை ஆகியவற்றைச் சாடியும்; வருகின்ற விடுதலை பெற்ற பாரதத்தின்

ஆற்றல், அழகு, தெளிவு, பெருமிதம், வெற்றி, ஒற்றுமை ஆகியவற்றைப் போற்றியும் அமைந்துள்ளது. பாரதி காலத்துப் பாரத நாட்டின் அவல நிலையும் அவர் கற்பனையில் கண்ட சுதந்திர பாரதத்தின் பெருமிதமும் இந்தப் பாடலில் அமைந்து விளங்கக் காணலாம்.

நிகழ்கின்ற ஹிந்துஸ்தானமும் வருகின்ற ஹிந்துஸ்தானமும்

போகின்ற பாரதத்தை சபித்தல்

வலிமை யற்ற தோளினாய் போ போ போ
மார்பி லேஒ டுங்கினாய் போ போ போ
பொலிவி லாமு கத்தினாய் போ போ போ
பொறியி ழந்த விழியினாய் போ போ போ
ஒலிய ழந்த குரலினாய் போ போ போ
ஒளியி ழந்த மேனியாய் போ போ போ
கிலிபி டித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மை யென்றும் வேண்டுவாய் போ போ
போ 1

இன்று பார தத்திடை நாய்போலே
ஏற்ற மின்றி வாழுவாய் போ போ போ
நன்று கூறி லஞ்சுவாய் போ போ போ
நாணி லாது கெஞ்சுவாய் போ போ போ
சென்று போன பொய்யெலாம் மெய்யாகச்
சிந்தை கொண்டு போற்றுவாய் போ போ போ
வென்று நிற்கு மெய்யெலாம் பொய்யாக
விழிம யங்கி நோக்குவாய் போ போ போ 2

வேறு வேறு பாஷைகள் - கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ
நூறு நூல்கள் போற்றுவாய் - மெய் கூறுந்
நூலி லொத்தி யல்கிலாய் போ போ போ

மாறு பட்ட வாதமே ஐந்நூறு
வாயில் நீள ஓதுவாய் போ போ போ
சேறு பட்ட நாற்றமும் - தூறுஞ்சேர்
சிறிய வீடு கட்டுவாய் போ போ போ 3

ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ
தரும மொன்றி யற்றிலாய் போ போ போ
நீதி நூறு சொல்லுவாய் - காசொன்று
நீட்டி னால்வ ணங்குவாய் போ போ போ
தீது செய்வ தஞ்சிலாய் - நின்முன்னே
தீமை நிற்கி லோடுவாய் போ போ போ
சோதி மிக்க மணியிலே - காலத்தால்
சூழ்ந்த மாசு போன்றனை போ போ போ 4

வருகின்றை பாரதத்தை வாழ்த்தல்

ஒளிப டைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டி ரங்குவாய் வா வா வா
ஏறுபோல்ந டையினாய் வா வா வா 5

மெய்மை கொண்ட நூலையே - அன்போடு
வேத மென்று போற்றுவாய் வா வா வா
பொய்மை கூற லஞ்சுவாய் வா வா வா
பொய்மை நூல்க ளெற்றுவாய் வா வா வா
நொய்மை யற்ற சிந்தையாய் வா வா வா
நோய்க ளற்ற உடலினாய் வா வா வா
தெய்வ சாப நீங்கவே - நங்கள் சீர்த்
தேச மீது தோன்றுவாய் வா வா வா 6

இளைய பார தத்தினாய் வா வா வா
எதிரி லாவ லத்தினாய் வா வா வா
ஒளியி ழந்த நாட்டிலே - நின்றேறும்
உதய ஞாயி றொப்பவே வா வா வா
களையி ழந்த நாட்டிலே முன் போல
களைசி றக்க வந்தனை வா வா வா
விளையு மாண்பு யாவையும் - பார்த்தன்போல்
விழியினால்வி ளக்குவாய் வா வா வா 7

வெற்றி கொண்ட கையினாய் வா வா வா
விநய நின்ற நாவினாய் வா வா வா
முற்றி நின்ற வடிவினாய் வா வா வா
முழுமை சேர்மு கத்தினாய் வா வா வா
கற்ற லொன்று பொய்கிலாய் வா வா வா
கருதி யதியற் றுவாய் வா வா வா
ஒற்று மைக்கு ளுய்யவே - நாடெல்லாம்
ஒரு பெ ருஞ்செ யல்செய்வாய் வா வா வா 8

II மதுர பாஸ்கரதாஸ் பாடல்கள்
(1892 - 1952)

"காந்தியோ பரம ஏழை சன்யாசி" என்ற தம் பாடலால் 1915 - இல் தமிழகம் வந்த காந்தியையே சிரிக்கவைத்த மதுர பாஸ்கரதாஸ் தலையாய தேசீய கவிஞர்களுள் ஒருவர். தேச பக்தி, ஒற்றுமை, தன்னல மறுப்பு, தேச பக்தர்கள் - என்னும் பொருள்பற்றிப் பாடல்கள் பாடியுள்ளார். இவரது இயற்பெயர் வெள்ளைச்சாமி என்பதாகும். இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் என்னும் இவர் நூல் 1925 இல் 1928 இல் இருமுறை வெளிவந்துள்ளது. இவர் பாடல்கள் தெருக்கூத்து, நாடகம் தேசியக்கூட்டங்கள் ஆகியவற்றில் பாடப்பெற்று மக்களிடையே பெரிதும் தேசீய உணர்வை ஊட்டின. பாரதியார் பாடல் மக்களை அணுகுவதற்கு முன்னேயே பாஸ்கரதாஸ் பாடல்கள் பாமர மக்களை ஆட்கொண்டு விட்டன. இசைத் தட்டுவாயிலாகவும் இவர் பாடல்கள் தமிழகம் எங்கும் முழக்கமிட்டன. அந்தப் பாடல்களுள் அனைவர் வாயிலும் அன்று அன்றாடம் பயின்றுவந்த "பஞ்சாப் படுகொலை", "கொக்குப் பறக்குதடி", "சத்யம் என்றும் தளராத நாடு", "சுய ஆட்சி" என்னும் நான்கு பாடல்கள் இங்கு எடுத்துத்தரப் பெற்றுள்ளன.

1. பஞ்சாப் படுகொலை 1919 இல் நிகழ்ந்தது. விடுதலை முழக்கமிட்டுத் திரண்ட பஞ்சாப் மக்களை ஈவு இரக்கமின்றி டயர் என்னும் ஆங்கிலத் தளபதி சுட்டுக் கொன்றான். இந்தியா எங்கும் அந்தக் கொடுமையைக் கண்டு மக்கள் குமுறினர். அந்தக் குமுறலின் எதிரொளியாக மதுர பாஸ்கரதாஸ் பின்வருமாறு பாடினார். இந்தப் பாடல், தெருக்கூத்துகளிலும், நாடக மேடைகளிலும், சொற்பொழிவு நிகழும் இடங்களிலும் அன்று பாடப்பெற்றது!

பஞ்சாப் படுகொலை

பஞ்சாப் படுகொலை பாரினில் கொடியது
பழிபாவ முடையது (பஞ்சாப்)
அஞ்சாப் பெரும் வஞ்சகன் அறமுறை தவறிய
கொடியவன் "டயர்' செய்த (பஞ்சாப்)

ஆயிரம் ஆயிரம் மக்களை "டயர்'கை
ஓயுமட்டும் சுட்டுக்கொன்று குவித்தான் (பஞ்சாப்)
கண்ணீர் விட்டுக் கதறிக் கதறித்
தண்ணீர் இன்றிச் சாய்ந்து மடிந்தனர் (பஞ்சாப்)

தப்பி ஓட வழியற்ற மக்களைத்
தயவு தாட்சண்யம் சிறிதும் இன்றித்
துப்பாக்கியில் குண்டு தீரும் மட்டும்
சுட்டேன் சுட்டேன் சுட்டேன் என்ற
அற்பக் கொலைகாரப் பாவி டயர் தனக்கு
அளித்தனர் வீரவாள் பரிசாய் லண்டனில்
அநியாயம் அநியாயம் அடக்கு முறையே
அடக்கு முறையே ராஜாங்கம் நடத்துமுறையே
(பஞ்சாப்)

2. அன்று பல இடங்களில் பல இளைஞர்களால் ஆங்கிலேயேரை மறைமுகமாகக் கேலி செய்வதற்குப் பயன்பட்ட பாடல் கொக்குப் பறக்குதடி பாப்பா"- என்னும் கவிஞர் தாஸின் பாடலாகும். குழந்தைக்குக் கொக்கு பற்றிக் கூறுவது போல ஆங்கிலேயரின் வஞ்சகத்தை எடுத்துரைத்து மக்கள்பால் விழிப்புணர்வை அன்று வளர்த்த பாடல் இது.

கொக்குப் பறக்குதடி

கொக்குப் பறக்குதடி பாப்பா - அதைக்
கோபமின்றிக் கூப்பிடடி பாப்பா!
மக்களை ஏமாற்றும் கொக்கு - அதன்
மமதை அழியவேண்டும் பாப்பா!
தேம்ஸ் நதிக்கரையின் கொக்கு அங்குத்

தின்ன வழியில்லாத கொக்கு - மது
மாமிச வெறிபிடித்த கொக்கு - நம்
மக்களை ஏமாற்றவந்த கொக்கு...

3. 'சத்யம் என்றுமே தளராத நாடு' என்னும் தாஸுடைய பாடல் பாரத நாட்டின் சிறப்பு, ஆங்கிலேயரின் தன்னல நோக்கு, சுதேசியம் ஆகிய கருத்துக்களைப் பாடுகிறது.

சத்தியம் என்றும் தளராத நாடு

சத்யமென்றுமே தளராத நாடு - இந்து
தேசம் தனைப் புகழ்ந்து பாடு - நல்ல
வித்யானுகூல முள்ள நாடு - இதில்
விளையும் பற்பல சொர்ணமேடு (சத்யம்)

ஆங்கிலேயர் தேடி வந்த நேசம் நம்மை
ஆளநேரிட்டதவர் நேசம் - இனி
ஏங்கி யிருப்பதுவும் மோசம்- இன்னம்
ஏன் வரவில்லை இந்தியர்க்கு ரோசம் (சத்யம்)

கற்புடைய மாதர்களின் மேலே - விழக்
கண்டோமே அந்யநாட்டுச் சேலை - அவர்
விற்பனை குறையும் அதனாலே - அதை
விளங்கிக் கதர் உடுத்தல் மேலே (சத்யம்)

4. சாதிபேதம், பொருளாதார ஏற்றத் தாழ்வு இவற்றால் எழும் சண்டை சச்சரவை நீக்கி, விடுதலை வேட்கையுடைய தலைவர்கள் அனைவரும் காந்தியின் தலைமையை ஏற்று ஒன்றுகூடிப் போரிட்டால் சுய ஆட்சிபெறும் வாய்ப்புண்டு என்று உணர்த்துவது இந்தப்பாட்டு.

சுய ஆட்சி.

சாதி பேதத்தோடு சம்பத்தின் பேதந்
        தனை யினித்தான் போக்கி - ஒரு
தாய் வயிற்றில் வந்த சேயரைப்போல் பெருந்
        தன்மையை யுண்டாக்கி - தேசத்
தொண்டரடி நோக்கி - உண்மை.

ஓதிய தேசத் தலைவரெல்லோரும்
        ஒருங்குடனே கூடி - நல்ல
உத்தம காந்தியின் சத்திய மொழியை
        நத்தியின்பந் தேடி நின்றால் - சுய
ஆட்சி மாட்சிக் கதுமிக நலமே

III பாவேந்தர் பாரதிதாசனார் பாடல்கள்

புரட்சிக் கவிஞர் என்று மக்கள் வழங்கிய பெயரும் பாவேந்தர் என்று அறிஞர் அளித்த பேரும் விரும்பித் தானே வைத்துக்கொண்ட பாரதிதாசன் என்ற பெயரும் கொண்ட தமிழாசிரியர் கனகசுப்புரத்தினம் சிறந்த கவிஞர். சமுதாய இயக்கங்களுக்கு ஏற்பத் தன் தமிழ்க் கவிதைத் திறனைப் பயன்படுத்தி மக்கள் முன்னேற்றத்துக்குப் பாடுபட்ட சமுதாயக் கவிஞர் அவர். தொடக்க காலத்தில் பக்திப் பாடல் பல இயற்றி வந்த அவர், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் பிரெஞ்சு அறிஞர் கருத்துக்களாலும் தம்மைச் சுற்றி எழுந்த விடுதலை இயக்கத்தாலும் காந்தீய செயல் முறைகளாலும் பாரதியார் தொடர்பாலும் பெரிதும் ஈர்க்கப்பட்டு விடுதலை உணர்வுடைய பாடல்பல இயற்றலானார்.

"தேர்நின்ற வீதிச் செயபேரிகை முழங்கப்
போர்நின்ற வீரர்குலம் பூத்தநிலம் - பார் நின்று
அடல் வளர்த்துப் பாரதநற் புத்திரன்நான் ஆக
உடல்வார்த்த நாடு என் உயிர்" -

எனப் பாரதத்தைத் தன் உயிராகக் கருதிய தேசியக் கவிஞர் இவர். இவர் பாடிய தேசியப் பாடல்கள் பல சிந்துப்பா வகையைச் சார்ந்துள்ளன. தெய்வீகத்தையும் தேசியத்தையும் இணைத்துப் பாடும் பாங்கும் இவர்பால் காணப்பெறுகின்றது. பாரதியார் மறைவுக்குப் பின்னரும் சில ஆண்டுகள் அவர் இடத்தை ஈடுசெய்வது போல தேசியப் பாடல் பல தொடர்ந்து கி.பி. 1923 வரை இவர் பாடிவந்துள்ளார். அவையெல்லாம் 'தேச சேவகன்' என்னும் இதழில் வந்துள்ளன. இவர் பாடிய தேசியப் பாடல்கள் இருபதுக்கும் மேல் உள. இங்கு "தெய்வீகத் தாய்நாடு" "தொண்டரைச் சேர்த்தல்", "சக்திக்கு விண்ணப்பம்", "திட்டம்" "பாரத சமூக மன்றம் (காங்கிரஸ்) சொல்லுகிறது," "பாரத தேவி தனது மாணவர்களுக்குக் கூறுவது" "காந்தியடிகளும் கதரும்" என்னும் எட்டு பாடல்கள் இடம் பெறுகின்றன.

1. பாரத தேவி வாழ்த்து 'முல்லைக்காடு' என்னும் பாவேந்தர் பாரதிதாசன் பாடல் தொகுதியில் காணப்படுகிறது. முப்பது கோடி முனிவர், வீரர்களைப் பெற்றவள் பாரத தேவி என்றும், அவள் எல்லா வளங்களும், நலங்களும் பெற்றவள் என்றும் இந்தப் பாடலில் குறிப்பிடுகிறார்.

பாரததேவி வாழ்த்து

அகவல்

பொன்னிறக் கதிர்விளை நன்செயிற் புத்தொளி
வடிவமர் அன்னாய் நின்னெழில் வாழ்க!
கனுவகல் கரும்பின் இனியநற் சாறும்
கதலியும் செந்நெலும் உடையைநீ வாழ்க!
தென்றலின் குளிரும் தேன்சுவைப் பழமும்
நன்றியல் சோலை நலத்தினாய் வாழ்க!
வானுயர் பனிமலை வண்புனற் கங்கையென்
றுலகெலாம் உரைக்கும் பெரும்புகழ் உடையைநீ!
முப்பது கோடியர் முனிவராய் வீரராய்ப்
பெற்றிடும் தேவிநீ வீறுகொள் பெற்றியாய்
கலிப்பகை வென்றே தலைநிமிர் குன்றளாய்,
கடையுகம் முற்றினும் திறல்கெடாக் காளிநீ!
அறமெனும் வயிரக் குலிசத் தோளுடை
அன்னை நீ வாழ்க! அன்னை நீ வாழ்கவே!

2. பாரத நாட்டைத் தெய்வத் திருநாடகவும், தம் தாய் நாடாகவும் கொண்டு அதன் சீர் சிறப்பு களையெல்லாம் தொகுத்துத் தருகிறது. இந்தப் பாடல்.

தெய்வீகத் தாய்நாடு

நாதந்தி னாதந்தி
நாதந்தி னாதந்தி
நாதந்தி னாதந்தி - தந்தி னாதந்தி
நாதந்தி னாதந்தினா

கலை கற்ற தாய் செல்வ
நிலை பெற்ற தாய் காடு
மலை பெற்றதாய் எங்கள் தாய் - எனிற் பாரதத்தாய்
புலையற்ற தெய் விகத்தாள்

யோகத்தின் தாய் கொள்கை
வேகத்தின் தாய் செய்யும்
யாகத்தின் தாய் எங்கள் தாய் - எனிற் பாரதத்தாய்
ஏகத்தின் தெய் விகத்தாள்

சாந்தத்தின் தாய் நல்ல
மாந்தர்க்குத் தாய் நீதி
வேந்தர்க்குத் தாய் எங்கள் தாய் - எனிற் பாரதத்தாய்
வாய்ந்திட்ட தெய்விகத்தாள்

அன்புக்குத் தாய் தோளின்
வன்புக்குத் தாய் வேண்டும்
இன்பத்தின் தாய் எங்கள் தாய் - எனிற் பாரதத்தாய்
சம்பத்தின் தெய்விகத்தாள்.

வென்றிக்குத் தாய் கீதத்
தென்றற்குத் தாய் நீத
மன்றுக்குத் தாய் எங்கள் தாய் - எனிற் பாரதத்தாய்
தன்னொத்த தெய்விகத்தாள்.

அமருக்குத் தாய் வெற்பின்
இமயத்தின் தாய் ஆறு
சமயத்தின் தாய் எங்கள் தாய் - எனிற் பாரதத்தாய்
நமையீன்ற தெய்விகத்தாள்.

தீரர்க்குத் தாய் ஞான
வீரர்க்குத் தாய் கற்பின்
நாரியர் தாய் எங்கள் தாய் - எனிற் பாரதத்தாய்
சீருள்ள தெய்விகத்தாள்.

நீதத்தின் தாய் தெய்வ
கீதத்தின் தாய் நாலு
வேதத்தின் தாய் எங்கள் தாய் - எனிற் பாரதத்தாய்
போதங்கொள் தெய்விகத்தாள்.

நீதிக்குத் தாய் நாலு
சாதிக்குத் தாய் உண்மை
போதிக்குந் தாய் எங்கள் தாய் - எனிற் பாரதத்தாய்
காதல்செய் தெய்விகத்தாள்
சீதைக்குத் தாய் இவர்
மாதுக்குத் தாய் நல்அ
சோதைக்குத் தாய் எங்கள் தாய் எனிற் பாரதத்
தாய்
நீதங்கொள் தெய்விகத்தாள்
புத்தர்க்குத் தாய் தேர்ந்த
பக்தர்க்குத் தாய் கோடி
சித்தர்க்குத் தாய் எங்கள் தாய் எனிற் பாரதத்தாய்
வித்தகத் தெய்விகத்தாள்.
வங்கர்க்குத் தாய் சீனச்
சிங்கர்க்குத் தாய் வன்தெ
லுங்கர்க்குத் தாய் எங்கள் தாய் எனிற் பாரதத்தாய்
இங்குற்ற தெய்விகத்தாள்
நாரதன் தாய் நற்ப
கீரதன் தாய் சோழ
சேரனின் தாய் எங்கள் தாய்
வீரங் கொள் தெய்விகத்தாள்.
கம்பர்க்குத் தாய் காளி
நம்பர்க்குத் தாய் மற்ற
சம்பத்தின் தாய் எங்கள் தாய் எனிற் பாரதத்தாய்
இம்பர்க்குத் தெய்விகத்தாள்.
விசயற்குத் தாய் கண்ணன்
இசை பெற்ற தாய் கீதை
ரசமுற்ற தாய் எங்கள் தாய் - எனிற் பாரதத்தாய்
வசையற்ற தெய்விகத்தாள்.
அணி பெற்ற தாய் பொன்னின்
மணி பெற்ற தாய் அத்தன்
துணை பெற்ற தாய் எங்கள் தாய் - எனிற்
பாரதத்தாய்
இணை யற்ற தெய்விகத்தாள்.

3. நாட்டு விடுதலை இயக்கத்துக்குத் தொண்டர் பலர் சேரவேண்டுமென அறைகூவி அழைக்கிறது இந்தப் பாடல். நாட்டின் பண்டைய சிறப்பும் அயல் ஆட்சியால் வந்த கேடும் குறிப்பிட்டு ஒன்றுபட்டு உரிமைக்குப் போராட வேண்டும் என்று அழைக்கிறது இந்தப்பாட்டு.

தொண்டரைச் சேர்த்தல்

(ஸ்ரீகுணங்குடி மஸ்தான் "போவோம் குணங்குடிக் கெல்லோரும் - புறப்படுங்கள்" என்று பாடிய மெட்டில் இதனைப் பாடித் தொண்டர்கள் மற்றும் பாரதப் புத்திரர்களைத் தொண்டர் படையிற் சேரக் கேட்க வேண்டும்.)

பல்லவி

சேர்வீர் தொண்டர் படைக்கெல்லோரும் – அரை
நொடியில் (சே)

அநுபல்லவி

பாரீர் நமக்கு வந்த கேடு! - பொறுக்கவில்லை
வாரீர் இதனை அடியோடு கல்ல எம்மோடு

சரணங்கள்

இன்பம் பொலிந்த திருநாட்டை - நவமணிகள்
ஈன்றார் குவித்து வைத்த வீட்டை - மறவர் குலம்
என்றும் மலிந்திருக்கும் காட்டை - இணையுலகில்
இல்லா விதம் கிடைத்த தேட்டைப் பிறர்தளைத்த
வன்மை விலங்க கலப்பூட்டை - யுடைத்துக்காட்டச்
(சே)

கண்ணன் வழிப் பிறந்த சாதி - நமக்கருந்த
கஞ்சியன்று வயிற்றிற் பாதி - பிணிவகைகள்
நண்ணி வருத்துவது மீதி - அடிமையென
நம்மைப் பிடித்திட்டவி யாதி - தொலைந்ததென்று
விண்ணும் அதிர் சங்கை யூதிப் -"பராக்" கென்றோதிச்
(சே)

காளையருச்சுனனி றந்தான் - அறம்புரந்த
கண்ணன் நம்மைவிட்டுப்ப றந்தான் - சிபியு மிந்த
வேளைதனி லின்றிம் றைந்தான் - எனினும் அவர்
தோளே நமக்குமென்றறிந்தோம் - உடன்பிறந்தோம்
(சே)

வாழ்வே மிகச் சிறிய நேரம் - இதற்கிடையில்
மானம் இழப்பதுவி காரம் - உயிர் கொடுத்தும்
தாழ்வை யகற்றுவது வீரம் - நமதுரிமை
தாங்கி நடத்தல் சமு சாரம் - அரைவயிற்றுக்
கூழோடிறப்பது வி சாரம் - அதிக கோரம் (சே)

சாரைச் சிற்றெறும்பெனக் கூடிச் சிங்கங்களென்னச்
சள்ளைக் கலிப்பகையைச் சாடி - இழந்த பழம்
பேரை நமது தலை ஆடி உடன் பிறந்தும்
பேதம் கொள்ளும் வரை நாடி - வாய்மையெனும்
போரை நடத்த இன்று கோடிக் கணக்கி லோடிச் (சே)

4. அச்சம், சிறுமை இவை இல்லா நல்ல உள்ளம் வேண்டும். தன்னல மறுப்பால் உணவும் உறைவிடமும் தந்த இந்தப் பாரதத்தாயை அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்பது இந்தப் பாடல் கருத்து. பக்தர்கள் பாமரர்கள் நாள்தோறும் பயிலும் காவடிச் சிந்தில் இந்தப் பாடல் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. காவடி எடுத்து ஆடும்போது பழைய பாடல்களுக்கு ஈடாக இந்தப் புதிய தேசீயப் பாடல்களை இளைஞர் பாட வேண்டும் என்பது பாவேந்தர் எண்ணம்.

சக்திக்கு விண்ணப்பம்

(காவடிச் சிந்து)

தேசத்திலே இந்த நேரத்திலே நல்ல
தீரரை ஆக்கிடுவாய் - இன்றே அச்சப்
பேய்தன்னைப் போக்கிடுவாய் - எங்கள்
பூசையெல்லாம் உனதாக்கி எமை அண்டும்
பேதமை நீக்கிடுவாய்.

நீசத்திலே அரை வீச மெங்கள்
நினைப்பில் வராதவிதம் - நன்றே உன்றன்
நேசம் உண்டாக்கு நிதம் - கொண்ட
ஆசை தணிந்திடக் கேட்பதெல்லாம் அடி
அன்னையுன் தண்டைப் பதம்

தன்னுயிர் நீத்தும் பிறர்க்கிதம் தேடிடும்
தன்மை எமக்குருள்வாய் அம்மா எங்கள்
வன்மை புயத்தமர்வாய் - எங்கள்
இன்னல் தவிர்க்கும் குலத்தெய்வமே நெஞ்சில்
ஏக்கம் தவிர்த்திடுவாய்.

பண்ணும் சமூக நினைப்புக்கு மாறான
பாவிகள் சாகட்டுமே அல்லாமல் இனி
நேர்மையி லேகட்டுமே - அடி
இன்னும் பொறுக்க வென்றால் தகுமோ இக்கண்
எம்முயிர் போகட்டுமே.

உண்ணக் கொடுத்தவளே எங்களுக்கு நல்
லூரகம் கொடுத்தவளே! இங்கே யறம்
பண்ணப் படைத்தவளே! எமக்
கெண்ணம் எவ்வாறந்த வண்ணம் செயல் செய்யும்
திண்மை கொடுத்திடுவாய்

தண்ணமுதைப் பிறன் "தீ" என்று சொல்லென்னில்
சந்தோஷமா யுரைப்பார் - சமூகம்வ
ருந்திடத் தாம் நகைப்பார் - இவர்
பண்ணிடு மோசங்கள் உன்னருளோ இந்தப்
பாரினை ஈன்றவளே?

5. 6-3-1923ல் தேச சேவகன் என்னும் பத்திரிக்கையில் வெளிவந்த இந்தப் பாடல் கவிஞர் கற்பனையில் பாரததேவி தோன்றித் தன் திட்டத்தை உரைத்ததாகவும் அதனால் ஏழை பணக்காரர், ஆண்டான் - அடிமை ஆகிய வர்க்க பேதம் ஒழிந்து வறுமை மறைந்து வளமான பாரதநாடு தோன்றும் என்றும் பாவேந்தர் இந்தப் பாட்டில் உரைக்கிறார்.

தேவியின் திட்டம்

பாதரதத் தேர்வந்து இன்பநிலை சேரப்
பாய்க மனக்குதிரை
சோர்வினை அச்சத்தை இட்டு மதிப்பதில்
தூளி படுத்திடுக
வீரியின் சாட்டையடா அடடேயினி
வீன் கதை போக்கிடுவீர்
ஆரிய நாடு சுகம் பெற இன்னும்
அரை க்ஷணம் உள்ள தென்றாள்.
பாய்க மனக்குதிரை அட டேயிது
பக்குவ காலமடா!
வாய்மை யிருப்பதில் தேவியின் இன்னருள்
வந்து கிடைத்ததடா.
போய்த் தொடுவோம் அந்த விண்ணை அமுதத்தைப்
பூமிக்கெலாந் தருவோம்.
தாய் கொடுத்தா ளிந்தச் சத்திய வேல் என்று
தாரணி ஆண்டிடுவோம்.
ஏழைகள் கையிருப் புள்ளவர் என்னும்
இரட்டையைக் கொன்றிடுவோம்
கூழுக் கொடுத்தன் அழும்படி ஆண்டிடும்
கோலை முறித்திடுவோம்
வாழ்வுக்கு நேரம் அரை ஷணமாம் என்று
மங்கை குறித்து விட்டாள்
ஊழையும் அன்னை மடித்திடுவாள் இனி
ஓடுக இன்பத்திலே.

6. காங்கிரஸ் கட்சி அன்று விடுதலைக்குப் போரிட்ட தலையாய பெரும்பாலும் இந்தியர் அனைவரும் இணைந்த ஒரு கட்சியாக இருந்தது. அதன் கொள்கைகளும், செயற்பாடுகளும் விடுதலைக் கொள்கைகளாக, செயற் பாடுகளாக இந்தியா எங்கும் ஆளுமை செய்தன. அந்த ஆளுமைவழி நின்று பாவேந்தரும் ஒற்று

மை, தன்னலமறுப்பு இவற்றை ஏற்றுக்கொண்டு இந்திய விடுதலைப் போரில் ஈடுபடவேண்டும் என்று இந்தப் பாடலில் கூறுகிறார். காவடிச் சிந்தில் அமைந்த சென்ற பாடல் இளைஞரைக் கருத்தில் கொண்டதுபோல் கும்மிமெட்டில் அமைந்த இந்தப்பாடல் பெண்களுக்கு உரிமை உணர்வு ஊட்ட வேண்டும் என்பதை நினைவிற் கொண்டது எனலாம்.

பாரத சமூக மன்றம் (காங்கிரஸ்) சொல்லுகிறது

(கும்மி மெட்டு)

நட்ட நடுவினில் ஈனத்தனம் - இந்த
நாட்டினில் வந்துகு டிபுகவே
இட்டது செய்யென்று நானுரைத்தால் அதை
ஏற்க மறுத்தனர் பற்பல பேர்.

இட்டது சட்டமெனப் பிறரால் - இன்று
ஏவப் படுவதை ஒப்புகின்றார்
சட்டமென்றே ஒரு தெய்வமில்லை - ஒரு
சமூகம் ஒப்புதல் சட்டமடா!

பஞ்சின் நுணுக்கமும் இன்னும் சிலச் சில
பக்குவம் நானன்று சொன்னதுண்டு
மிஞ்சி விட்டீரதை மிஞ்சிவிட்டீர் என்றும்
மிஞ்சி விடாதவர் மிஞ்சி விட்டீர்.

நெஞ்சி லிருக்குது தேசப்பணி - இந்த
நேரத்தில் மாயை மறைக்கு தென்றீர்!
அஞ்சிக் கிடப்பதில் ஆசையெனில் - உங்கள்
ஆண்மைக் குடிக்குள்ள ஆண்மையெங்கே?

"கள்ளை அகற்றுதல்" தேசக்கலை - கற்றல்
காட்டிய மற்றும் சிறுபணிகள்
கொள்ளப் படாதனவோ? இவை - கொண்டிடுதல்
குந்தகம் வந்துபு குந்திடுமோ?

எள்ளும் கடைசி வருஷம் வரை - மிச்சம்
இல்லையென் றாக்கிய கொத்தடிமை
தள்ள எண்ணவிடில் சாதல்நன்று கெட்ட
சாவை எதிர்ப்பவர் சாதல் நன்று

மண்ணிற் குழைத்த பசுக்குலம் போல் - நதிப்
பள்ளத்திலோடும் சலத்திரள்போல்
கிண்ணத்திலிட்ட மணித்திரள்போல் - இனிக்
கேடடைந்த பல கோடியினர்

கண்ணிய மெண்ணி ஒரேமனதாய் - ஒரு
காரியமாயின் அரைநொடியில்
பண்ணிவிட் டால் இந்தப் பார்மதிக்கும் இந்தப்
பாரத நாட்டினைப் பார்மதிக்கும்.

7. கல்வி, அயல்நாட்டினர் மேன்மை கூறித்தம் தாய்நாட்டின் சிறப்புரைக் காது போயிற்று. அயல்மொழிக் கல்வி, அயலவர் நாகரிகம், இவற்றின் வயப்பட்டு இந்தியக்குழந்தைகள் தாய்மொழி அறிவின்றி, சிந்திக்கும் திறனின்றி, தாய்நாட்டுப் பற்றின்றி அடிமையில் தம்மை மறந்து போயினர். அந்த அடிமை உறக்கத்திலிருந்து எழுந்து உரிமைப்போரில் ஈடுபட அவர்க்குத் தாய்நாட்டின் சிறப்புக்கூறி, அடிமை வாழ்வின் குறை, கொடுமை கூறித் தாய்மொழிக் கல்வியின் இன்றி யமையாமைகூறி அமைகிறது இந்தப் பாடல்.

பாரத தேவி தனது மாணவர்களுக்குக் கூறுவது

கண்ணிகள்

என்னா ருயிராக
யான் பெற்றேன் உம்மையெல்லாம்
அன்னையென் றென்னை
அறியீரோ மாணவரே

பாரதப்பே ரோங்கிடவே
பாரிலுமைப் பெற்றிருந்தும்
நீரதையென் ணாதிருக்க
நேர்மையுண்டோ மாணவரே

அடிமையுற்ற அன்னை
அரசுபெற உங்களினற்
கடமையின்ன தென்றுதான்
கருதினிரோ மாணவரே
அன்னைக்குப் புத்தியாரும்
ஆக்கமும் நற்கீர்த்தியுநீர்
இன்னே தர நினைத்தால்
யார் தடுப்பார் மாணவரே?

புத்தறிவும் தெய்வப்
பொது நோக்கும் வாடாது
மொய்த்த இளம் பருவம்
முனைகருகிப் போகாதீர்

மாசற்ற நெஞ்சம்
மறையா இளமாண்பு
தேசத்திற் கன்றிச்
சிதடருக்கோ மாணவரே?

விழிக்குங்கா லுங்கள்
வெறுந்தேசம் காணினு நீர்
பழக்கிவரும் கல்வியிலே
பாரதத்துக் காவதுண்டோ?

சாங்கால மட்டும்
சலித்துப் புடைத்தாலும்
ஆங்கிலத்தில் உம்நிலைமை
ஆய்வதுண்டோ மாணவரே?

வெள்ளியர்கள் என் செல்வம்
வேட்டமிட்டார் நீங்களதை

அள்ளிச் செப்பம் செய்ய
அக்கலையைக் கற்றீரோ
தட்டிக் கொடுத்துப் பின்
தம் நடத்தைக்குட் படுத்திப்
பட்டப் பரிசு தரும்
பாவனையிலே துணர்வீர்?
அயலார் வெறும் பாஷை
ஆய்வதனால் உங்களின் சாண்
வயிறு நிறையு மென்ற
வார்த்தையில்தான் உண்மையுண்டோ?
முப்பது கோடிப் பெயர்கள்
முற்றும் பிறர் பாடம்
ஒப்பித் தாலன்றி
யுணவின்றிச் சாவீரோ?

8. டண், டண், டண் - என்று பறை கொட்டிச் செய்திகளைச் சொல்வது போல வீரச் சுவை ததும்ப சுற்றும் சுற்றும் சுற்றும்; கொட்டு - கொட்டு - கொட்டு எனக் காந்தியடிகளையும் கதரையும் போற்றி, பாரத நாட்டின் சிறப்பையும் கூறி அமைகிறது இந்தப் பாடல்.

காந்தியடிகளும் கதரும்

(பறை முழக்கம்) சுவை: வீரம்

"அன்னியர் நூலைத் தொடோம்" என்ற சேதி
அறைந்திடடா புவி முற்றும் எங்கள்
அறுபது கோடித் தடக்கைகள் ராட்டினம்
சுற்றும் - சுற்றும் - சுற்றும்
இன்னும் செல்லாது பிறர்செய்யும் சூழ்ச்சிகள்
என்று சொல்லிப் புயம் தட்டு - அட
யானையின்மேல் வள்ளுவா சென்று நீபறை
கொட்டு - கொட்டு - கொட்டு

இன்னல் செய்தார்க்கும் இடர் செய்திடாமல்
இராட்டினம் சுற்றென்று சொல்லும் - எங்கள்
ஏதமில் காந்தியடிகள் அறச்செயல்
வெல்லும் - வெல்லும் - வெல்லும்.

கன்னலடா எங்கள் காந்தியடிகள் சொல்
கழறுகின்றேன் அதைக் கேளே - "நீவிர்
கதரணிவீர் உங்கள் பகைவரின் வேரங்குத்
தூளே - தூளே - தூளே

பால்நுரை போலப் பருத்தியுண்டு சொந்தப்
பாரத தேசத்தில் எங்கும் எனில்
பண்டைமுதல் இழை நூற்பதிலே யாம்
சிங்கம் - சிங்கம் - சிங்கம்

வானம் புனல் சுடர் நாணும்படி உடை
வர்ணமும் சொர்ணமுங் கொண்டு - பெரும்
வையம் களித்திட நெய்யும் திறம்எமக்
குண்டு - உண்டு - உண்டு

ஆன இந் நாட்டினைச் சந்தையென் றாக்கிய
அந்நியர் போக்கையும் கண்டோம் எனில்
ஆக்கந் தருவது சக்கரம் ஆம் எனக்
கொண்டோம் - கொண்டோம் - கொண்டோம்

பானல் விழியுடையாளெங்கள் தாயிந்தப்
பாரினை யாள்பவள் என்றே நெஞ்சில்
பாயும் எழுச்சிக் கனல் சொன்னதாகச் சொல்
நன்றே - நன்றே - நன்றே

IV காந்தீயக் கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை பாடல்கள்

"சிந்தையினால் வாக்கதனால் செய்கை தன்னால்
தேசத்திற் கோயாது தொண்டு செய்தோன்;
முந்துமன்பே உருவாக வந்த மூர்த்தி
மூதறிஞன் காந்திமகான் வழியைப் பற்றிச்
செந்தமிழ் நாட்டாஸ் தானக் கவிஞனாகிச்
சீரோங்கு ராமலிங் நண்ப!
சந்தமும் இவ்வுலகில் வாழச் செந்தில்
சண்முகனை வேண்டிநிதம் போற்றுவேனே."

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாராட்டுக்கு உரியவர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை; காந்தீயமும் தேசீயமும் இவர்தம் இருகண்கள். முதன்முதல் உரிமைபெற்ற தமிழக ஆஸ்தான கவிஞரான சிறப்பு இவர்க்கே உரியது. இவர் பாடல்களில், "கத்தியின்றி ரத்தமின்றி" "என்னுடைய நாடு" "இந்தியத் தாய் புலம்பல்", "நம் சுதந்திரம்", "இளைஞரின் சபதம்", "கொடி பறக்குது" "சாந்தி தரும் கொடி" என்னும் ஏழு பாடல்கள் இங்கு இடம் பெறுகின்றன.

1. வடநாட்டில் காந்தி அடிகள் தலைமையில் உப்புச் சத்தியாக்கிரகம் தண்டி யாத்திரையாகத் தொடங்கிற்று. அதனை ஒட்டி தென்னகத்தில் இராஜாஜி வேதாரணிய யாத்திரையில் ஈடுபடலானார். காந்தியத்தில் கனிந்த கவிஞர் அப்போது எழுதிய வழிநடைப் பாட்டே இது. கவிஞரை உலகிற்கு நன்கு அறிமுகப்படுத்திய பாடலும் இதுவே.

கத்தியின்றி ரத்தமின்றி

கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது

சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்! (கத்தி) 1

ஒண்டி அண்டிக் குண்டு விட்டிங்
குயிர்ப றித்த லின்றியே
மண்ட லத்தில் கண்டி லாத
சண்டை யொன்று புதுமையே! (கத்தி) 2

குதிரை யில்லை யானை யில்லை
கொல்லும் ஆசை யில்லையே
எதிரியென்று யாரு மில்லை
எற்றும் ஆசை யில்லதாய் (கத்தி) 3

கோப மில்லை தாப மில்லை
சாபங் கூறல் இல்லையே
பாப மான செய்கை யொன்றும்
பண்ணு மாசை யின்றியே (கத்தி) 4

கண்ட தில்லை கேட்ட தில்லை
சண்டை யிந்த மாதிரி
பண்டு செய்த புண்ணி யந்தான்
பலித்த தேநாம் பார்த்திட ! (கத்தி) 5

காந்தி யென்ற சாந்த மூர்த்தி
தேர்ந்து காட்டும் செந்நெறி
மாந்த ருக்குள் தீமை குன்ற
வாய்ந்த தெய்வ மார்க்கமே (கத்தி) 6

2. விடுதலை நம் பிறப்புரிமை - பாரதநாடு நம் பாட்டன் சொத்தது - நமக்கே உரியது. கன்னியகுமரி தொட்டு இமயம் மட்டும் ஒரே அமைப்பாக இறைவன் படைத்தளித்தது இந்தப் பாரதம். அஞ்சற்க; விடுதலை திண்ணமாய் அடைவோம் என்னும் கருத்தில் எழுந்தது இந்தப்பாடல்.

என்னுடை நாடு

"இந்திய நாடிது என்னுடை நாடே"
என்று தினந்தினம் நீயதைப் பாடு;
சொந்தமில் லாதவர் வந்தவர் ஆள
தூங்கிக் கிடந்தது போனது மாள;
வந்தவர் போனவர் யாரையும் நம்பி
வாடின காலங்கள் ஓடின தம்பி!
இந்தத் தினம் முதல் "இந்திய நாடு
என்னுடை நாடெ"ன்ற எண்ணத்தைக் கூடு. 1

கன்னி இமயக் கடலிடை நாடு
கடவுள் எமக்கெனக் கட்டிய வீடு;
என்ன முறையி(து) ஏனிதை வேறு
இன்னொரு நாட்டினர் ஆள்வது கூறு;
சொன்னவர் கேட்டவர் யாரையும் நம்பிச்
சோர்ந்து கிடந்தது தீர்ந்தது தம்பி!
என்னுடைய நாட்டினை நானிருந் தாள
இந்தத் தினம்முதல் எண்ணுவன் மீள. 2

தன்னுடை வேலையைத் தான்செய்வ தாலே
தப்புவந் தாலும் சுதந்தரம் மேலே;
இன்னொரு யாருக்கும் இதிலென்ன கோபம்?
என்றன் உரிமை சொன் னாலென்ன பாபம்?
அன்னியர் ஆள்வதில் நன்மைவந் தாலும்
அடிமையின் வாழ்வது நரகம்எந் நாளும்;
என்னுடை வீட்டுக்கு நான் அதிகாரி
என்பது தான்சுய ராச்சிய பேரி. 3

பாரத நாடென்றன் பாட்டன்றன் சொத்து
பட்டயத் துக்கென்ன வீண்பஞ்சா யத்து?
யாரிதை வேறோர் அன்னியர் ஆள?
அஞ்சிக் கிடந்தது போனது மாள;
'வாரவர் போறவர்' யாரையும் நம்பி
வாடின காலங்கள் ஓடின தம்பி!

வீரமும் தீரமும் வெற்றுரை யாமோ?
விடுதலை வேண்டுதல் விட்டிடப் போமோ? 4

'முத்தமிழ் நாடென்றன் முன்னையர் நாடு;
முற்றிலும் சொந்தம் எனக்கெ'னப் பாடு;
சற்றும் உரிமையில் லாதவர் ஆளச்
சரிசரி யென்றது போனது மாள;
பக்தியின் அன்பினில் பணிபல செய்வோம்;
பயப்பட்டு யாருக்கும் பணிந்திடல் செய்யோம்;
சத்தியம் சாந்தத்தில் முற்றிலும் நின்றே
சடுதியில் விடுதலை அடைவது நன்றே. 5

3. வேற்றவர் வரவால் வீடு உரிமையிழந்த கதைவழி, வேற்றவர் வரவால் நாடு அடிமைப்பட்ட கொடுமையை நயமாக, பாமரர்க்கும் புரியுமாறு தெளிவாக இந்தப் பாடலில் நாமக்கல் கவிஞர் புலப்படுத்துகிறார்.

இந்தியத் தாய் புலம்பல்

காலக் கதியடியோ
கைவிரித்து நான்புலம்ப
ஆலம் விதையெனவே
அளவிறந்த மக்கள்பெற்றும்
ஞாலத்தில் என்னைப்போல்
நலிந்தா ளொருத்தியுண்டோ?
நீலக் கடலுலகில்
நீடித்தும் பிள்ளைகளால்
கோல மிழந்துநிலை
குலைந்துருகி வாடுகின்றேன்! 1

மெத்தப் பகட்டுடையாள்
மேற்கத்திப் பெண்ணொருத்தி
'அத்தை' யெனக் கூவியென்றென்
ஆசார வாசலிலே
தத்தித் தடுமாறித்
தலைவணங்கி நின்றிருந்தாள்.
"புத்தம் புதியபெண்ணே
போந்தகுறை என்னசொல்லு
சித்தங் கலங்காதே
சின்னவளே" என்று சொன்னேன். 2

வெள்ளைத் துகிலுடுத்து
வெட்டிருந்த பட்டணிந்து
கள்ளக் குறிசிறிதும்
காட்டா முகத்தினளாய்
அள்ளிச் செருகிவிட்ட
அழகான கூந்தலுடன்

பிள்ளை மொழிவதெனப்
பின்னுகின்ற சொற்பேசி
மெள்ளத் தலைகுனிந்தே
மெல்லியலாள் நின்றிருந்தாள். 3

"எங்கிருந்தே இங்குவந்தாய்?
என்னகுறை பெண்மணியே?
சங்கிருந்த வெண்ணிறத்தாய்!
சஞ்சலத்தால் வந்ததுண்டோ?
இங்கிருந்தே உள்ளதைநீ
என்னுடைய மக்களுடன்
பங்கிருந்து கொள்வாய் நீ
பயமொழிவாய்" என்று சொல்லி
இங்கிதம்நான் சொன்னவுடன்
இருதாளும் மண்டியிட்டு. 4

குன்றி உரைகுழறிக்
குளிரால் நடுங்கினள் போல்
சின்னஞ் சிறுகுரலால்
சிந்தை மிக நொந்தவளாய்
"உன்னுட னேபிறந்தோன்
ஊரைவிட்ட ஆரியனாம்
முன்னம் உனைப்பிரிந்து
மேல்நாடு மேவினவன்
அன்னவன் புத்திரிநான்
அத்தைநீ சித்தம்" என்றாள். 5

"நெஞ்சம் கலங்காதே
நீயெதற்கும் அஞ்சாதே
தஞ்ச முனக்கிருப்பேன்
தையலே மெய்யிதுகாண்;
கொஞ்சும் இளமையினில்
குறையுனக்கு வந்ததென்ன?

பஞ்சை யெனத்தனியே
        பட்டணத்தை விட்டுவந்தாய்
வஞ்சி யிளங்கொடியே
        வந்துபசி யாறுகென்"றேன். 6

சற்றுத் தலைநிமிர்ந்தாள்
        தையலவள் புன்சிரிப்பை
உற்ற முகத்தினொடும்
        உள்ளம் குளிர்ந்தவள்போல்
சுற்றி அயல்பார்த்துச்
        சொன்னபடி என்னுடனே
முற்ற மதனைவிட்டு
        முன்கட்டில் வந்துநின்று
தத்தியதன் மேல்நடக்கத்
        தயங்கினவள் போல்நின்றாள். 7

"தாவில்லை உள்ளேநீ
        தாராள மாய்வரலாம்
வா" என்று சொன்னவுடன்
        வல்லியவள் மெல்லவந்தாள்;
தூவெள்ளை யானஅவள்
        துணியும் அணியிழந்தும்
தாவள்ய மானஅந்தத்
        தையலவள் மெய்யழகில்
கோவென்று கூட்டமிட்டென்
        குழந்தைமார் கூடிவிட்டார் 8

ஆனபடி என்னுடனே
        அன்னமந்தக் கன்னிவர
மேனியவள் ஆடையெல்லாம்
        வாடையொன்று வீசியது.
"ஏனிஃ திளங்கொடியே!
        என்ன?" என்று கேட்டதற்கு

"மீனுணவும் ஊனுணவும்
மெத்தஉண்ட தத்தையரே
தேனுங் கனிகாய் என்
தேசத்தில் கொஞ்சம்" என்றாள். 9

சொல்லி முகஞ்சுளித்தாள்
சோக மதைமாற்றி
கொல்லைச் சிறுவீட்டிற்
கொண்டவளைச் சென்றிருத்தி
மல்லிகை முல்லைமலர்
மணமிகுந்த நன்னீரால்
அல்லி நிறத்தவளை
அங்கமெல்லாம் நீராட்டி
மெல்லத் துவட்டி விட்டு
மெய்யழகு செய்துவைத்து 10

தக்க உடைகொடுத்து
டாக்காவின் சல்லாவால்
மிக்க விலையுயர்ந்த
மிகமெலிந்த ஆடையினால்
ஒக்க அவளைமிக
ஒய்யாரம் செய்துவிட்டுப்
பக்கம் உடனிருத்திப்
பரிந்தே விருந்துமிட்டேன்
துக்கம்மிக ஆறியவள்
துதித்தாள் மிகவும் என்னை. 11

என்னுடைய மக்களுடன்
என்வீட்டுத் தாதியரும்
இன்னும் பணியாட்கள்
எல்லோரும் பக்தியுடன்
என்ன சிறுகுறையும்
ஏதுமவட் கில்லாமல்

சொன்னபடி எல்லாரும்
சோடாச உபசாரம்
பண்ணியந்தப் பெண்மணியைப்
பார்த்து வந்தார் நேர்த்தியுடன் 12

அஞ்சி அடக்கமுடன்
அத்தையென்ற பக்தியுடன்
வஞ்சி யிளங்கொடியாள்
வாழ்ந்திருந்தாள் வீட்டில்என்றன்
குஞ்சு குழந்தையெல்லாம்
கோதையவள் தன்னிடத்தில்
கொஞ்சி விளையாடிக்
குலவி மகிழ்ந்திருந்தார்
நெஞ்சம் மிகக்களித்து
நிம்மதியாய் நானிருந்தேன். 13

இந்தவிதம் என்வீட்டில்
என்னுடைய மக்களினும்
சொந்தம்மிகக் கொண்டாடிச்
சொன்னபடி கேட்டுவந்தாள்
வந்திருக்கும் நாளையிலே
ஒருநாள் அருகில்வந்து
"எந்தனுடை ஊரின்மேல்
ஏக்கமின்று வந்ததனால்
உன்றனுடை உத்தரவில்
ஓலைவிட ஆசை" என்றாள். 14

"என்ன தடை இதற்கே?
எழுதுவாய்" என்று சொன்னேன்.
சொன்னவுடன் என்றனுக்குத்
தோன்றா மொழிகளிலே
கன்னியவள் தன்னவர்க்குக்
காகிதமும் போட்டு விட்டாள்.

பின்னைச் சிலநாளில்
பெண்ணவளின் தன்னினத்தார்
அண்ணனென்றும் தம்பியென்றும்
அக்கமென்றும் பக்கமென்றும் 15

வந்தார் பலபேர்கள்
வந்தவரைச் சொந்தமுடன்
தந்தே னிடமவர்க்கும்
தக்க விருந்துமிட்டேன்
சந்தேகம் நானவர்மேல்
சற்றும் நினைக்காமல்
அந்தோ! இருந்துவிட்டேன்
அந்தஒரு காரணத்தால்
நொந்தேன் நிலைதவறி
நோவேன் விதியினையே. 16

அன்னவர்கள் கொண்டுவந்த
அழகாம் பலபொருள்கள்
மின்னுகின்ற கண்ணாடி
மினுக்குகின்ற பொம்மைகளும்
இன்னும் மயக்குகின்ற
என்னென்ன வோபொருள்கள்
என்னுடைய மக்களுக்கே
எடுத்துக் கொடுத்தவளாய்க்
கன்னி யவள்சிரிக்க
களித்துவிட்டார் மக்களெல்லாம். 17

நாளுக்கு நாளதன்மேல்
நலிந்தபடி என்வீடு
மேலுக்கு மேலாக
மிகவும் பயந்தவள்போல்
'பாலுக்குங் காவலொடு
பூனைக்கும் தோழன்' என்றே

தோல்நிற்க உள்ளிருந்த
சுளைமறைத்த கொள்கையெனக்
கோல்செய்த என்வாழ்வைக்
குலைத்துவிட்டாள் மெல்லமெல்ல. 18

என்ன உரைத்தாளோ!
ஏதுமருந் திட்டாளோ!
அன்னைதந்தை தெய்வமென்றே
ஆரா தனைபுரிந்த
என்னுடைய மக்களென்னை
ஏறெடுத்தும் பார்ப்பதில்லை;
சொன்னபடி கேட்பதில்லை;
'தூ'வென்றும் 'போ' வென்றும்
கன்னியவள் மோகத்தால்
காலால் எனை உதைப்பார். 19

கொண்ட சமயம்விட்டார்
குலதெய்வப் பூசைவிட்டார்
பண்டைப் பெருமையுள்ள
பக்திகளும் விட்டொழிந்தார்;
கண்டபடி உண்டுடுத்துக்
கண்டபடி யாய்க்களித்துப்
பெண்டொருத்தி தன்மயக்கில்
பெற்றஎன்னை யும்இகழ்ந்து
சண்டையிட்டுத் திரிவார்நான்
தவங்கிடந்த மக்களெல்லாம். 20

4. பெற்ற சுதந்திரத்தைப் பேணி வளர்த்து உலக ஒருமைப்பாட்டுக்கும் உரிமைப் பாட்டுக்கும் பாரதத்த வராகிய நாம் உழைக்க வேண்டும் என்று இந்தப் பாடலில் கவிஞர் உணர்த்துகிறார்.

நம் சுதந்திரம்

சுதந்தரம் அடைந்தோம் என்ற
சுகங்களை அடையு முன்னால்
எதிர்ந்தன எதிர்பா ராத
இடர்பல சகித்து வென்றோம்
முதிர்ந்துள யுத்த வேகம்
முற்றிலும் மறைந்து போகும்
விதந்தனில் நமது நாட்டின்
சுதந்தரம் உதவ வேண்டும். 1

அரும்பெரும் காந்தி யண்ணல்
அற்புத அறிவு சேர்ந்த
பெருந்திறல் காங்கி ரஸ்தன்
பெருமையிற் குறைந்து போகக்
குறும்புகள் வளர்ந்தி டாத
குறியுடன் கொள்கை காத்து
விரும்பிடும் ராம ராஜ்ய
சுதந்தரம் விளங்க வேண்டும் 2

அதிகார மோக மின்றி
ஆதிக்கத் தாக மின்றிச்
சதிகார எண்ணம் சேராச்
சமதர்ம உணர்ச்சி யோடு
துதிபாடி நாட்டை வாழ்த்தும்
தொண்டர்கள் சூழ்ந்து நிற்கும்
நிதியாக காங்கிரஸ் நின்று
சுதந்தரம் நிரக்க வேண்டும். 3

காந்தியை மறந்தி டாமல்
கருணையைத் துறந்தி டாமல்
சாந்தியிற் குறைந்தி டாமல்
சத்தியம் இரிந்தி டாமல்

மாந்தருக் கறிவு காட்டும்
மாபெரும் சோதி யாக
நேர்ந்துள நமது நாட்டின்
சுதந்தரம் நிலைக்க வேண்டும். 4

பாரினில் ஒருநா டேனும்
நம்மிடம் பகைகொள் ளாமல்
சீரிய முறையில் ராஜ
நீதியின் செம்மை காத்துப்
போரிட நினைப்பா ருண்டேல்
புலிகண்ட மான்போல் அஞ்சத்
தீரமாய் நமது நாட்டின்
சுதந்தரம் திகழ வேண்டும். 5

ஆயுத வெறிகள் மிஞ்சி
அழிவுக்கே முனைந்து நிற்கும்
தீயன குறிகள் கண்டே
உலகெலாம் திகைக்கும் துன்பை
நாயகன் காந்தி தந்த
நன்னெறி தன்னைக் காட்டும்
தாயகம் நமது நாட்டின்
சுதந்தரம் தடுக்க வேண்டும். 6

5. காந்தீயம்தான் நாட்டை வளர்க்கும்; உலகை காக்கும் உரிமைபெற்ற பாரத இளைஞர்கள் இதனை உணர்ந்து, ஒருமைப் பாட்டுடன் உழைக்கவேண்டும். இதுவே இன்றைய இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டிய சபதம்.

இளைஞரின் சபதம்

'எந்தத் தேசம் எந்தக் குண்டை
எந்த நாட்டிற் போடுமோ'
என்று மக்கள் உலகில் எங்கும்
ஏங்கும் இந்த நாளிலே

இந்த நாடு பெற்றெ டுத்த
        இளைஞர் யாரும் கூடுவோம்;
இன்ப மாக மனிதர் வாழ
        ஏற்ற மார்க்கம் நாடுவோம்;
சொந்த ஞானத் தெளிவு கொண்டு
        வந்த நம்சு தந்தரம்
சுத்த மாக நின்று சாந்த
        சத்தி யத்தைக் காக்கவே
தந்து போன இந்த நாட்டின்
        தந்தை யாகும் காந்தியைத்
தாழ்ந்து போற்றி உலக முற்றும்
        வாழ்ந்தி ருக்கப் பண்ணுவோம். 1

இமயம் தொட்டுக் குமரி மட்டும்
        இங்கி ருக்கும் யாவரும்
இந்தி யாவின் மக்க ளென்ற
        சொந்தம் காணச் செய்குவோம்.
சமயம் என்றும் ஜாதி என்றும்
        சண்டை யற்று வாழவும்
சமதை யாக மொழிகள் யாவும்
        சலுகை பெற்று வளரவும்
அமைதி யாக தேசசேவை
        அச்ச மின்றி ஆற்றுவோம்;
அவதி மிக்க ஏழை மக்கள்
        வறுமை போக மாற்றுவோம்;
நமது நாடு உலகி னுக்கு
        நல்ல மார்க்கம் காட்டவே
நாங்கள் என்றும் பணி புரிந்து
        வெற்றி மாலை சூட்டுவோம். 2

முன்னி ருந்த நமது நாட்டின்
        முனிவர் கண்ட ஞானமே

முற்று மிந்த உலகினுக்கும்
        உற்ற நன்மை யானது.
என்ன துன்பம் எந்த வேளை
        எங்க டுத்த போதிலும்
எந்தை காந்தி தந்த சாந்த
        மந்திரத்தை ஓதுவோம்;
தன்ன லம்ம றந்து நாட்டின்
        நன்ன லத்தைத் தாங்கவும்
தரணி தன்னில் யுத்தம் என்ற
        இரணப் பேச்சு நீங்கவும்
மன்ன னிந்த பரத நாட்டின்
        மகிமை காக்கும் ஜவஹர்லால்
மாசி லாத சேவை செய்து
        பேசும் நீதி தவறிடோம். 3

6. 'வருந்தி, தியாகம் பல செய்துபின் வாய்த்தது நம் தேசியக் கொடி. இதனை எந்தத் துயர்வரினும் இழப்பு நேரினும் தாங்கிக்கொண்டு காப்பது உரிமை பெற்று வாழும் நம் கடன்' என உணர்த்துகிறார் கவிஞர் இந்தப் பாடலில்.

கொடி பறக்குது

பல்லவி

கொடிபறக்குது கொடிபறக்குது
        கொடிபறக்குது பாரடா!
கோணலற்ற கோலில்எங்கள்
        கொடிபறக்குது பாரடா!

சரணங்கள்

சிறைகிடந்து துயரடைந்த
        தேசபக்தர் நட்டது
தீரவீர சூரரான
        தெய்வபக்தர் தொட்டது.
முறைகடந்து துன்பம்வந்து

மூண்டுவிட்ட போதிலும்
முன்னிருந்து பின்னிடாமல்
காக்கவேண்டும் நாமிதை! (கொடி) 1

வீடிழந்து நாடிழந்து
வினையிழந்த நாளிலும்
விட்டிடாத தேசபக்தர்
கட்டிநின்று காத்தது;
மாடிழந்து கன்றிழந்து
மனையிழக்க நேரினும்
மானமாக நாமுமிந்தக்
கொடியைக்காக்க வேண்டுமே (கொடி) 2

உடலுழைத்துப் பொருள் கொடுத்தும்
உயிரும் தந்த உத்தமர்
உண்மையான தேசபத்தர்
ஊன்றிவைத்த கொடி இது;
கடல் கொதித்த தென்னமிக்க
கஷ்டம்வந்த போதிலும்
கட்டிநின்று விட்டிடாமல்
காக்கவேண்டும் நாமிதை! (கொடி) 3

மனமுவந்திங் குயிர்கொடுத்த
மானமுள்ள வீரர்கள்
மட்டிலாத துன்பமுற்று
நட்டுவைத்த கொடியிது!
தனமிழந்து கனமிழந்து
தாழ்ந்துபோக நேரினும்
தாயின்மானம் ஆனஇந்தக்
கொடியையென்றும் தாங்குவோம்!
(கொடி) 4

7. கவிஞர் இந்தியத் தேசியக் கொடி பற்றிப் பாடிய இரண்டாவது பாடல் இது. இந்தப் பாடலில் நம் கொடியின் இயல்பு, அது உணர்த்தும் உண்மை,

பிறநாட்டுக் கொடிகளிலிருந்து கொள்கையில் அது வேறுபடும் பாங்கு ஆகிய வற்றை இன்றைய பாரதத்தார் மற வாது நினைத்துப் போற்ற வேண்டும் எனக் கவிஞர் இப்பாடலில் கூறுகிறார்.

சாந்தி தரும் கொடி

கற்புடைப் பெண்கட் கெல்லாம்
கணவனே தெய்வ மென்பார்;
சொற்பொருள் அறிந்தோர்க் கெல்லாம்
சொன்னசொல் தெய்வ மென்பார்;
மற்பெரும் வீரர்க் கெல்லாம்
மானமே தெய்வ மாகும்;
நற்பெயர் நாட்டிற் காக்கும்
நமக்கிந்தக் கொடியே தெய்வம். 1

அன்னிய கொடிக ளெல்லாம்
அரசியல் ஒன்றே பேசிப்
பொன்னியல் போக வாழ்வின்
பொதுநலம் தனையே கோரும்;
என்னுடைப் பரத நாட்டின்
இக்கொடி இந்த வாழ்வின்
பின்னையும் அறிவு தேடும்
பேரின்பம் தனையும் பேசும். 2

பிறநாட்டுக் கொடிக ளெல்லாம்
பிறநாட்டைப் பிடிக்க எண்ணி
மறம்நாட்டி மக்கள் தம்மைச்
சண்டையில் மடியச் செய்யும்;
அறம்நாட்டி உலகை யாண்ட
அரியநம் கொடியோ, மூன்று
நிறம்காட்டி நிலையா யுள்ள
நீதியே ஓத நிற்கும். 3

பச்சையாம் நிறத்தினாலே
பசுமையாம் அன்பை யூட்டும்;
நிச்சயம் வெள்ளை அந்த
நிமலமாம் உண்மை நீட்டும்;
துச்சமிவ் வுலக மென்னும்
துறவினைக் காவி சொல்லும்;
அச்சமில் குடிசைக் கூலி
அதிலொரு ராட்டை காட்டும். 4

தருமமே குறியாக் கொண்டு
தனக்கென்று எதையும் வேண்டாக்
கருமமே கடனென் றோதிக்
கருணையின் வழியே காட்டி
வருமமும் வஞ்சம் நீக்கும்
வாழ்க்கையை வகுத்துப் பேசும்
பெருமைநம் கொடியைப் போலப்
பிறிதொரு கொடியும் உண்டோ! 5

இந்திய மகனே! இந்த
இணையிலாக் கொடியைக் காத்தல்
முந்தியுன் முன்னோர் தந்த
அறமெலாம் முடிப்ப தாகும்
எந்தஓர் நாட்டிற் கேனும்
எதிரியாய் எடுத்த தல்ல
சந்ததம் உலகுக் கெல்லாம்
சாந்தியைத் தரவே யாகும். 6

V இந்திய விடுதலை இயக்கம் பற்றிய மேடை நாடகப் பாடல்கள்

இங்குள்ள பாடல்கள் 1920களில் பாடப் பட்டவை; வெளிவந்தவை. கிராமபோன் இசை தட்டு களிலும் பிற சிறுபிரசுரங்களிலும் கண்டு இவற்றைத் தொகுத்துவைத்தவர் குழிபிறை எஸ்.ஆர்.எம்.எஸ். இலட்சுமணன் அவர்கள். இவர் விடுதலைப் போராட்ட வீரராய்த் திகழ்ந்து, இந்திய அரசின் உதவித் தொகை பெற்றுவந்தவர். இவர் தொகுத்துவைத்துள்ள கைப் பிரதிப் பாடல்கள் இருநூறுக்கும் மேற்பட்டவையாகும். அவற்றுள் 41 பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

பாஸ்கரதாஸ், விசுவநாத தாஸ், சதாசிவதாஸ், கே.பி. சுந்தராம்பாள் முதலிய மேடை நாடக நடிகர்களும் பிற இசை மேதைகளும் இவற்றை நாடெங்கும் பரப்பிப் பாடிவந்துள்ளனர். இசைத்தட்டுகளாக இசைத்துள்ளனர். மேலூர் முஹதீன் அப்துல் காதிறு, தஞ்சை எஸ்.ஆர்.சுப்பையன் போல, சுதந்திர வேட்கை கொண்டு பாடியவர்களையும் பார்க்கின்றோம்.

காந்தியடிகளின் ஒத்துழையாமைத் தத்துவம், அன்னியத் துணி மறுப்பு, மது ஒழிப்பு, கதராடையின் சிறப்பு போல்வன பாடப்பட்டுள்ளன. பாரத தேவி வணக்கம், வந்தேமாதர முழக்கம் பல பாடல்களில் இடம் பெறுகின்றன. மகாத்மா காந்தி, பண்டித மோதிலால் நேரு, லோகமான்ய கங்காதர திலகர், லாலா லஜபதிராய், இரவீந்திர நாத் தாகூர், சித்தரஞ்சன் தாஸ், தாதாபாய் நவுரோஜி, அலி சகோதரர்கள் இராஜாஜி போலும் இந்திய விடுதலை இயக்கத் தலைவர்களைப் புகழ்ந்து பாடும் பாடல்கள் உள்ளன. கள்ளிக் கோட்டையில் கைதாகி, கண்ணனூர்ச் சிறையில் வாடிய நால்வரைப் பற்றிப் பாடிய பாஸ்கரதாஸ் பாட்டு புதிய செய்தியாகும்.

பஞ்சாப் படுகொலை முதல், வரலாறு மறந்துவிட்ட செய்திகள்வரை பல இப்பாடல்களால் அறியப்படுகின்றன.

இவை பாரதியார் காலத்தும் அவர் மறைவுக்குச் சற்றுப் பின்னரும் பாடப்பட்டவை. பாரதியாரை விடுதலை இயக்கப் பெருங் கவிஞராக்கிய பின்னணியை, இப்பாடல்களால் அறிய முடிகிறது. தமிழ் மக்களிடையே சுதந்திர வேட்கை சுடர்விட்டு வீசியதையும் இவற்றால் அறிய முடிகிறது.

- **தமிழண்ணல்**

1

காந்திப் பாட்டு

இராகம் - சிந்துபைரவி தாளம் - ஆதி

காந்தியோ பரம ஏழை சன்யாசி
கருதும் சுதந்திர ஞான விசுவாசி
நாட்டின் விவசாயச் சுதேசி
சமத்துவச் சுதந்திரம் சாற்றும் உபதேசி

(காந்தியோ ...)

சார்ந்த சோதரரின்தாய் தந்தைபோலே
தரணியில் அவதாரம்செய் தார் இக்காலே
ஆழ்ந்த கருத்துடைய ராட்டினத்தாலே நம்
அடிமையகற்ற வந்தார் அன்பாய் முன்னாலே

(காந்தியோ...)

மாசிலாத அவர் மார்க்கத்தில் சேர்வோம்
மடமைக்கதிகத் தியாகஞ் செய்வோம்
துஞ்சிடாமல் வந்து கூடிடுவோம்
கொடிய பஞ்சப்பிணியைக் கொன்றின்பம் பூண்போம்

(காந்தியோ...)

(கொடுமுடி மிஸ் கே.பி. சுந்தராம்பாள் பாடிய இசைத்தட்டுப் பாட்டு.) (1934)

2

கதர்ப் பாட்டு

பல்லவி

கதர்க் கப்பல்கொடி தோணுதே
கரம் சந்திர மோகனதாஸ் காந்தி இந்தியா சுதேச
(கதர்க்...)

அனுபல்லவி

அதற் கப்பால் ஞானவாசம்
ஆகிய பாரத தேசம்
இதற்குள் சீவப்பிரகாசம்
இனி நமக்கே சந்தோசம் (கதர்க்...)

சரணம்

மானிட சிப்பிக்குள்ளே
மகாத்மா ஒரு முத்துப் போலே
ஞானவடிவம் கொண்டு
நம்மைக் காக்க வந்ததாலே
லௌகீகம் விட்டால்
வைதீகம் பெற்றால்
மெய்த்தேகம் நாம்
நன்றாய்க்கொள்வோம் நாகரீகம் (கதர்க்...)

பஞ்சத்தைப் பஞ்சால் வெல்வோம்
படையை உடையால் கொல்வோம்
மஞ்சத்தை விட்டகல்வோம்
மார்க்கத்திலே முயல்வோம்

மறை நோக்கும் இந்த
முறை யேற்கும் மகாத்மா
உரைகாக்கும் நம்
மனைமக்கள் மானங்காக்கும்

பேதைக் குடியகற்றகல்
பிறர் பெண்மேல் இச்சைகொள்ளல்
மேதைகள் ஜாதித்தீண்டல்
விமோசன மாம்பமேந்திரன்

விந்தைக் காவல் மகாத்மா
சிந்தைக் கோவில் தாய்
தந்தை வாழ்வில் தமிழ்
வேற்சாமி சொற் கடல் தீவில் (கதர்க்...)

(எஸ்.எஸ். விசுவனாத தாஸ் பாடிய இசைத்தட்டுப் பாட்டு) (1934)

3

காந்தியின் சிந்தனை

பல்லவி

ஆழ்ந்த யோசனை செய்தார் - மகாத்மா காந்தி
ஆத்ம சக்தியைக் காட்டினார் - அன்னியர்கட்கு
ஆத்ம சக்தியைக் காட்டினார்

அனுபல்லவி

கரை காணா ஆத்மா கருத்துள் மகாத்மா
கருத்தை விளக்கிக் காட்டினார் - கவர்மெண்டோடு
கடித மூலமாய்ப் பேசினார் (ஆழ்ந்த...)

தொகையறா

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்திரண்டாம் ஆண்டு
செப்டம்பர் இருபதிலே
தாழ்ந்தநம் சகோதரர்க்குத் தனித்தொகுதி வேண்டாம்
கூட்டுத்தொகுதி வேண்டுமென
காந்தி உண்ணாவிரதம் பூண்டார்

பாட்டு

பட்டினி என்றதுமே பதைத்துப் பாரதமக்கள்
பிரார்த்தனை செய்ய லுற்றார் சர்வேசுவரனை
பிரார்த்தனை செய்ய லுற்றார்!

தொகையறா

தாழ்த்தப் பட்ட மக்களுக்குத் தனித்தொகுதி வேண்டும்
கூட்டுத் தொகுதி வேண்டாமென
கரைபுரண்டெதிர்த்தாரே அம்பேத்கார் தருமசீலராம்
காந்திஜியைத் தரிசித்துமே
கூட்டுத் தொகுதிக்கே கையொப்பமிட்டார்
தென்னாட்டுக் காந்தியென
தியாகங்கள் பலசெய்த திரு ராசகோபாலச்
சாரியார்நம்
காந்திய உண்ணா விரதமதை ஓதியே மக்கள்
ஓட்டுப்போட வேண்டு மென்றார்

பாட்டு

ஒற்றுமைப் பட்டாரே மக்கள் உத்தமதியாகியாம் காந்தி
சித்தங் களிக்கவென்று திறந்தார் கோயிலைத
தீண்டாதார்க்கு என்றே (ஆழ்ந்த..

(கே.பி. சுந்தராம்பாள் பாடிய இசைத்தட்டு) (1934)

4

கைராட்டை சுற்றுவோம்

பல்லவி

நம்பிக்கை கொண்டெல்லோருங்
கைராட்டை சுற்றுவோம்!
கைராட்டை சுற்றுவோம் - சுய
நாட்டைப் பற்றுவோம் நம்பிக்கை-

அனுபல்லவி

இராணுவ பலம் நமக்கேது கதர்
இராமபாணம் இதுபோது நம்
நடையொடு பகைவர்கள்
அடியொடு மடிகுவர் நாளுந்தப்பாது தினம்
நம்பிக்கை

பல்லவி எடுப்பு

காந்தி முனிவர் திருவாக்கியம் தனை
கருதுவ ததனையே யோக்கியம் நாளும்
கங்கணம் அணிகுவர் மங்கள் பாஸ்கரன்
சங்கீத பாக்கியம் தினம் நம்பிக்கை.

(பாஸ்கரதாஸ் பாடியதென்ற முத்திரையுள்ள இப்பாடலை கே.பி. சுந்தராம்பாள் இசைத்துள்ளார்.) (1934)

5.

தாழ்த்தப்பட்ட மக்கள்

பல்லவி

தாழ்த்தப்பட்ட சோதரரைத் தாங்குவாருண்டோ?
தாங்குவாருண்டோ? மண்ணில் ஓங்குவாருண்டோ?
தாழ்த்த ...

அனுபல்லவி

வீழ்த்தப்பட்டு வாடுகின்றார் வெம்பியே திண்டாடுகின்றார்
பாழ்த்தமனப் பாவியர்செய் பாதகத்தாலே .
பாதகத்தாலே இந்த மேதினிமேலே
தாழ்த்த...

தொகையறா

இருக்கவும் இடமில்லை நிற்கவும் நிழலில்லை
எனநொந்து வாடி யழுகிறார்
இல்லம் ஒன்றில்லாது அல்லலே வடிவாய்
ஏங்கியே ஏங்கி விழுகிறார்.
நெருக்கவும் பண்ணையார் குடிக்கவும் நீரின்றி
நிட்டூரத்தால் கதருறார் - கொஞ்சம்
நெஞ்சிரக்க மற்ற வஞ்சகக் கொடியரை
நினைந்துதான் நெஞ்சு பதருறார்
கருக்கவும் உடம்பினைப் பெருக்கவும் வியர்வைநீர்
கஷ்டக் கண்ணீர் வடிக்கிறார் - அவர்கள்
காலமெல்லாம் உழைத்திங்கு கூலிபெற மாட்டாது
கலங்கி நித்தமும் துடிக்கிறார்

இருக்கவும் பொறிகள் போல் அடக்கவும் உணர்வில்லை
தீயவர்களால் நலிகிறார்
செத்திடவும் ஒண்ணாது நித்த அடிமைகளாய்
தீண்டாமையால் நலிகிறார்

அனுபல்லவி

பள்ளுப் பறையர் எண்ணும் பாமரரைக் காக்க உண்ணும்
கொள்கையிலும் புண்ணியந்தான் குவலயம்மீது
குவலயம் மீது வேறு கூறுவீர் ஏது தாழ்த்த ...

(எஸ்.எஸ். விசுவனாத தாஸ் இசைத்தட்டு "பண்டித மோதிலால்" என்ற மெட்டு) (1934)

6

தேயிலைத் தோட்டத்திலே

தேயிலைத் தோட்டத்திலே பாரத
சேய்கள் சென்றுசென்று மாய்கின்றார் ஐயையோ
- தேயிலை

ஓயாது நாள்முழுதும் பல
ஊழியம் செய்து உடம்பெல்லாம் நோகுறார்
நோயால் வருந்துகின்றார்
நோக்கும் சவுக்கடி தாங்குகிறார் ஐயையோ
- தேயிலை

காசாசைப் பேய் பிடித்த மட்டிக்
கங்காணியர் கூடி மங்கைகளைக் கெட்ட
நேசத்திற்கே இழுக்கும் அந்த
நிர்ப்பந்தத்தை மனம் ஒப்பத்த குந்ததோ
- தேயிலை

கட்டத் துணியுமில்லை அந்த
கானலிலே புள்ளி மானைப்போல் அலைந்து
நட்டுவாக் காளிபூரான் பாம்பு
அட்டை கடித்து அலறிப் புலம்புகிறார்
- தேயிலை

சோற்றுக்கு வற்றுகிறார் சிப்பிச்
சுண்ணாம் பரிசியை உண்பதற்குப் பொல்லா
நாற்றமடிக்குதையே அங்கு
நம்பிச் சென்றவர்கள் துன்பக் கதையெல்லாம்
- தேயிலை

சொல்லத்தரம் அல்லவே அந்த
சூதுக்காரர் ஒரு பேதியில் போகாரோ
நல்லதொழில் இல்லையா சொந்த
நாட்டினிலே பயிர் போட்டுப் பிழைத்திட
- தேயிலை

வெள்ளைக்காரர் மீதே குற்றம்
எள்ளத்தனையுமில்லை எல்லாம் நம்இந்திய
கள்ளக் கருப்பர்களே இதில்
கங்காணியாய் நின்று காணிக்கை வாங்குகிறார்
- தேயிலை

பெற்றவர்க்கே தெரியும் ஏழைப்
பிள்ளையருமை பிறர் அறிவார்களோ
சற்றும்மனம் இரங்கா பாழும்
சண்டாளர் கொண்டுபோய் திண்டாடவைக்கிறார்
- தேயிலை

செந்தமிழ்ச் சுந்தரனார் இந்த
சேதி உரைப்பதை ஆதரிப்பீர் பெரும்
இந்து சகோதரரே நமக்கு
இன்னும் தெரிந்தில்லை அன்னியர் செய்திடும்
தந்திரவித்தையாலே மனம்
சார்ந்து கிடந்து ஏமாந்து வருந்துகிறார்.
இந்து சகோதரரே! - தேயிலை

(எம்.ஆர். வாசவாம்பாள் இசைத்தட்டு சுந்தரனார் பாடியதாகப் பாடலில் குறிப்புள்ளது) பண்: புன்னாகவராளி (1934)

7

கோபால கிருஷ்ண கோகலேயும் தேசாபிமானிகளும்

பல்லவி

தேசாபிமானிகளே! உண்மை தெய்வீக ஞானிகளே! தமிழ்
பாஷாபிமானிகளே! ஜென்ம பாரத தியானிகளே!!

அனுபல்லவி

தீதற்றிடு தாதாபாய் மந்திரமீதுற்றிடு மாதரதந்திர
திலகப் பிரபுக் கருமை கென்னதடை
செகத்தில்மிகுந்த சுகத்தைவகித்த
மகத்துவமனைத்தும் பறிக்கச் சகித்த
தியாகனாம் யூகமே நிரம்பிய யோகனாம் கோகலே
விரும்பும்
தேசா...

தொகையறா

ஆசாரம்தனை விடுத்து ஆங்கிலத்தைப் படித்தோம்
அயல்நாட்டு நடையுடையை ஆசையும் பிடித்தோம்
கூசாமல் மதுவகையைக் குடல்நிறையக் குடித்தோம்
கொடியருடன் கைகோர்த்துக் குளிர்நிலவில் நடித்தோம்
நேசானு கூடி தெய்வச் சிந்தனையைத் தடுத்தோம்
நெஞ்சாரப் பொய்யுரைத்து நீதியைவம்பாய் எதிர்த்தோம்
காசாசையால் பலதுர்க் காரியங்களை முடித்தோம்
கடையரென்று நம்மின் சிலரைக் கடிந்து விழுந்தடித்தோம்

பாட்டு

கண்டதே காட்சி கொண்டதே கோலம்
என்றிது நாள் கழித்தோம்
கைத்தொழில் வர்த்தகம் யுத்தமுறை
துறை காணாமல் விழித்தோம் தேசா ...

(எஸ்.எஸ். விசுவனாத தாஸ் இசைத்தட்டில் பாடியது அரிச்சந்திரா நாடகத்தில் பாடப்பட்டதால் அரிச்சந்திரன் தேசியப்பாட்டு என அழைக்கப்பட்டது) (1934)

8

தேசபந்து சித்தரஞ்சன் தாஸ்

இராகம்: இந்துஸ்தான் தோடி தாளம்: ஏகம்

பல்லவி

இந்துநேச வங்கதேச பந்துவை இழந்தனம்
என்ன காலமென்று ஓலமிட்டுமே தளர்ந்தனம் இந்து..

அனுபல்லவி

சென்றாரே மடந்தை வாழும் தீரசித்த ரஞ்சனன்
சீர்மிகுந்த பாரதத்தாய் திலக நேத்திர அஞ்சனன்

ஈடிலாத் தங்கம்
எதிரிக்கோர் சிங்கம்
கிரீடிபோல் அங்கம்
கீர்த்திப்பிர சங்கம்

கேட்டபேர், கண், ணீர் வடிக்க
நாட்டுளோர் மனந் துடிக்க இந்து..

தொகையறா

ஆயிரத்து எண்ணூற்று யெழுபது நன்னவம்பர் ஐந்து
தேதி தன்னில்
அரும்பூபன் மோகனதாஸ் புத்திரராய் அவதரித்து
அரிய கல்வி
நேயமுடன் இருபதாம் வயதினிலே நேர்ந்ததிரு
நாமம் ஓங்க
நிருதர்வளர் சீமையிலே படித்துச் சட்டமுறைகளை
நன்னீதி வாய்ந்தே
தூயகுண தாதாபாய் பார்லிமெண்டில் இடம்பெறவே
துணையாய் நின்றார்
இந்து முஸ்லீம் சோதரரை இகழ்ந்த ஜான் மக்லீனைத்
தண்டிக்கச் செய்தார்.
தேசமெல்லாங் கொண்டாடும் அரவிந்தர் கோஷின்கேஸ்
தனை ஜெயித்தார் மற்றும்
தேசபக்தர் கேஸ்களில் தர்மவக்கீல் எனவுழைத்தார்
தெய்வம் போலே

பாட்டு எடுப்பு

அந்தத் தியாகமூர்த்தி வாழ்வும் போச்சே
அங்கம் வெந்து சாம்ப லாச்சே! இந்து...

தொகையறா

கண்ணியவான் தந்தைபட்ட பதினாறு லட்சமணிக்
கடனைத் தானாய்
திண்ணமுடன் சம்பாதித்து அனைவருக்கும்
பாக்கியின்றித் தீர்த்துப், பின்னும்
எண்ணியதோர் பொருள்திரட்டித் தானம் ஈந்து
ஒத்துழையா இயக்கம் போன்ற
புண்ணியவான் ஆஸ்தியெல்லாம் பொதுநலத்திற்கே
கொடுத்தார் புதுமைதானே

பாட்டு எடுப்பு

உடல் இறந்தால் மீண்டும் பிறந்து நாட்டில்
சிறந்த தொண்டு புரிவேன் என்ற இந்து...

தொகையறா

வங்காள ஆள்தூக்கிச் சட்டமது தொலையாத
வருத்தத்தாலே
இங்காரும் கவனிப்பாரில்லையெனப் பொன்னுலகில்
ஏகிச் சத்துரு
சங்காரக் கடவுளுக்கும் கோகலேய்க்கும் திலகருக்கும்
தாதாபாய்க்கும்
பொங்காமற் பொங்கி முறையிடப் புகுந்தாரென்று
மனம் பொறுப்போமையா

பாட்டு எடுப்பு

பூவில் பாஸ்கரன் சொல் லேந்தி
நாவிற் கூறு வோமே சாந்தி இந்து ...

(பாஸ்கரதாஸ் பாட்டு ஆர்மோனியம் கே.எஸ். தேவுடு அய்யர் இசைத் தட்டில் பாடியது.) (1934)

9

பாரததேவி வாழ்த்து

பல்லவி மகுடம்

வளம் பொருந்தும் பாரத தேவியை
வந்தேமாதரமென வாயார வாழ்த்தி நில்லுங்கள்
மனமுவந்து வாயார வாழ்த்தி நில்லுங்கள்!

அனுபல்லவி மகுடங்கள்

மஞ்சுமி குஞ்சுப வஞ்சலி மிஞ்சியே வந்தே ...
மடமகற்றிடுமன நடுநிலைப் படஜெய வந்தே ...
மண்ணிலேபல் புண்ணியமாகும் பண்ணும்பாவம்
நண்ணிடாது வந்தே ...
மகிழுற் றிகலற் றகமெய்த் திகழுற வந்தே ...

சரணம்

உளம்புனிதமுற உத்தம மந்திரம்
உசிதவான்களிடம் உலவும் நிரந்தரம்
விளம்பவதிசய மிகவுறை தந்திரம்
மேலுமாட்சியனு கூலநீட்சியொருக்
காலுந் தாட்சியிலை யால் சுயாட்சிபெற
மேன்மேலும் சித்தம் வையுங்கள் சதாசிவன்சொற்
பண்ணோதும் பத்தி வையுங்கள் வளம் ...

[ஏ.எஸ்.சதாசிவதாஸ் பாடியது] (1922)

10

ராஜி உடன்படிக்கை

கண்ணிகள்

ராஜிஉடன் படிக்கை
முக்கியநட வடிக்கை
தேசக்குடி படைக்கே
நன்மைதரும் படிக்கே

தொகையறா

வைசிராயின் மாளிகையில்
வார்த்தை பேசிய நேர்த்தியாம் ராஜி ...

பாட்டு

சாந்தம் மிகுந்த காந்தி வகுத்த
சாத்துவீக சட்ட மறுப்பையும்
தடுக்கும் சர்க்கார்
அடக்கு முறையின்
தாண்டவத் தையும் நிறுத்தியே
உபபுவரி ஒழித்தார்
ஒப்பியது மதித்தார் - அதிகார வர்க்கம்
காங்கிரசைத் தாங்கிநின்ற
கைதிகளை விடுவித்தனர் ராஜி ...

['கந்தா காருண்யனே' என்ற மெட்டில் பி.எஸ். சிவபாக்கியம் பாடிய 'ஒடியன்' இசைத்தட்டு] *(1934)*

11

ஞான பண்டித மோதிலால் நேரு

இராகம் : கமாஸ் தாளம்: ஏகம்

பல்லவி

ஞான பண்டித மோதிலால்
நம்மைப் பிரிந்தார்- ஞான

அனுபல்லவி

ஆனந்த பவன அரண்மனை ராஜபோகன்
ஆதி சொரூப ராணி மோகன் அருமைத் தியாகன் ஞான
சகலமும் துறந்தார் சன்னியாசம் நிறைந்தார்
ஜவகர்லாலையும் மறந்தார் ஐயோ இறந்தார் ஞான
பாரதமாதா பயின்ற நம் மேதா பாஸ்கரசாமி சதா
கொண்டாடும் தாதா ஞான

[வி. அபயாம்பாள் பாடிய இசைத்தட்டு. மதுரை பாஸ்கரதாஸ்.]

12

கைராட்டினக் கதரின் மகிமை

கண்ணிகள்

கண்ணபிரான் என்னவேஇக் காசியில் அவதாரம் -
கொண்டு
தேசியவுப காரம் - செய்து பூஜிதவுப சாரம் - பெறும்
காந்திமகான் கட்டளையைக் கைக்கொளக் கெம்பீரம்

நுண்ணியகை ராட்டினாலே நூற்றநூலைக் கொண்டு -
அயம்
போற்றுவாலைத் துண்டு - முதல் காற்றைப்போல முண்டு
- வரை
நூதனமாய் நெய்தனர்ம னோபலத்தாற் பண்டு

எண்ணரிய ஆண்டுகளாய் எங்களின் முன்னோர்கள்
- சுதே
சங்களைவிட்டார்கள் - நவீனங்களிற்பட்டார்கள் - சதா
இதரநாட்டுத் துணிகளிலே இச்சையாய்க் கெட்டார்கள்

இந்நிலந்தன் னிற்கடிவந் தேறியதே பஞ்சம் - நிலை
மாறியதே கொஞ்சம் - இனிவேறுளதோ தஞ்சம்
- எனும்
ஏழைகளே அதிகமாக இகழ்ந்ததேபிர பஞ்சம்

நந்நகரத் தேவிளையும் நல்லதோர் பருத்தி - தனைச்
சல்லிசாய் விருத்தியிலாமல் ஏதோ கரத்தி - லீந்து
நாள்முழுதும் கொண்டு செல்வார் லண்டனாம் புரத்தில்

சொற்பவிலைப் பஞ்சதனைச் சூக்குமமாம் ஆலைதனில்
போக்கியதனாலே உண்டாக்குகிறார் நூலை-பின்
தொந்தரையில்லாமலந்த யந்திரங்களாலே
உற்பத்திசெய் கின்றார்கள்பல் உன்னதமாம் துணிகள்-
பார்க்க
நன்னிறமாம் அணிகள் - தோற்கும் - மின்னும் ஒன்பான்
மணிகள் நம்பர்

ஒன்றிரண்டு அல்லவேபு கன்றிடவன் பணிகள்
விற்பனைக்கு நூலும்துணியும் மீண்டுங்க கப்பலேறி -
கடல்
தாண்டிப்பல் வேறிடத்தில் நீண்ட கப்பல் மாறி - மாறி
வேண்டியமட்டுங் கொடுக்க ஈண்டிருக்கும் நேரில்

கற்பனையாய்க் கூலிமுதல் கப்பல்வண்டிச் சத்தம் - கட்டுங்
கப்பம்வரை மொத்தம் - நன்றி ஒப்புமாறு சுத்தம் - ஆகக்
கணக்குக் காட்டிச் சரக்கின்விலையில் கலக்குகிறார் நித்தம்
செப்படியோ நம்முன்னோர்கள்செய்த தொழில் போலே
- பஞ்சைக் கையிராட்டி னாலே நூற்று நெய்தலேநம்
வேலை - எனச்
சித்தம் ஒரு மித்து இவ்விதஞ் செய்குவோம் இந்நாளே
இத்தகைய கைத்தொழிலால் இல்லை பஞ்சக் குமுக்கு -
இனி
நல்ல செல்வம் - நமக்கு எல்லாம் - வல்ல இறை விதமக்கு
பணி
எல்லோரும் புரிந்திணங்கச் சொல்லியடிப்போம் தமுக்கு
சத்தார்த்த சதாசிவன் சாற்றுந் தமிழ்ச் சங்கீதம் - துதி
போற்றிடப் பிரசாதம் - நல்கி - யேற்றும் மாதா
போதம் கண்டு
சந்ததமும் வந்தேமாதர மந்திரநல் லாதம்!

[ஏ.எஸ்.சதாசிவதாஸ் இயற்றியது. கொச்சிமலை குடகுமலை என்ற குறம் வர்ணமெட்டு 1922]

13

இந்திய மக்களுக்கு விண்ணப்பம்

கண்ணிகள்

இந்தியத்தாய் மக்களுக்கே இன்று தினமே - யான்
இயம்பிடுவேன் நேயம் பெருகும் விஞ்ஞாபனமே!
நந்தேயக் கதராடையை அணிந்து கொள்ளுங்கள் - இதர
நாட்டுடையின் நாகரீகத்தை நாளும் கைவிடுங்கள்!
சிந்தையிற் பாரத மாதாவைச் சிந்தித்திருங்கள்! யாதும்
சீரிலாமது பானம் விலக்கித் திடமுற்றிருங்கள்!

சந்ததமும் சற்குணத்தைச் சார்ந்து கொள்ளுங்கள்! நம்
சகோதர வாஞ்சையுடைத்துத் தானே விள்ளுங்கள்!
சந்தோசம் துன்பம் இரண்டிலும் சமமாய் நில்லுங்கள்! -
புதி
தாகவுகந்த அயல் நாகரீகத்தைக் கடிதில் வெல்லுங்கள்!
செந்தமிழ்ச் சதாசிவகீதமே தினமும் கேளுங்கள் - மிகு
செருக்கிசைந்த வித்துவமகற்றியே சீரையாளுங்கள்! இனிப்

பந்தம் மிகுந்த நம் பாக்கியம் பரி
பாலிக்க வந்த சிலாக்கியம் சுய
சிந்தனை தந்ததே யோக்கியம் வரச்
செபிக்கும் மந்திரம் வாக்கியம்! புகழ்
வந்தேமாதரம்! வந்தேமாதரம் வந்தேமாதரம்
மகாத்மா காந்திக்கு ஜேய் ஜேய் ஜேய் (நம்
இந்திய...

[*ஏ.எஸ். சதாசிவதாஸ் இயற்றியது - 1922*]

14

பண்டித மோதிலால் நேரு கையறுநிலை

இராகம் : இந்துஸ்தான் தோடி *தாளம்: ஆதி*

பல்லவி

பண்டித மோதிலால் நேருவைப் பறிகொடுத்தோமே!

அனுபல்லவி

பறிகொடுத்தோமே நெஞ்சம் பரிதவித்தோமே!

சரணம்

எண்டிசை எல்லாம் புகழ்ந்த
ஏழைகளுக்கு அன்பு தந்த
பண்டிதரே உமது தேகம் பரகதியாச்சே
பரகதியாச்சே எங்கள் பலமெல்லாம் போச்சே! பண்டித...

தொகையறா

ஆயிரத்து எண்ணூற்று அறபத்து ஓராண்டு
மேமாதம் அவதரித்து
தூயகுண சத்திரிய துரைராஜ சிங்கமெங்கும்
துணையாய் நின்று
தாயகத்தில் அன்புருகும் தவயோகி காந்திமகான்
தான் தவிக்க
மாயவுடல் மறைந்ததையோ மகனான ஜவர்லால்
மனங்கொதிக்க கொதிக்க

பாட்டு

தேவர்களும் உமையழைத்து
சிங்காதனத்தில் வைத்து
பூவுலக வாழ்வைவென்ற புண்ணிய மூர்த்தி
புண்ணியமூர்த்தி எங்கும் புகழுதே கீர்த்தி பண்டித ...
பிப்பிரவரி தேதி யாறில்
பிரபுடீகா உமது திரோகம்
எப்படி லட்சுமணபிரியில் இறந்த மாயமே
இறந்த மாயமே தருமம் தீர்த்த தியாகமே பண்டித ...

(கொடுமுடி மிஸ் கே பி சுந்தராம்பாள் இசைத்தட்டு "தாயிடத்தில் அன்பிலாத" என்ற மெட்டு.) (1934)

15

ராட்டுப் பாட்டு

இராகம்: தேசிகதோடி தாளம்: சாப்பு

கவிக்குஞ்சரம் என்னும் பெருங்கவிஞர் ஒருவர் பாடிய சுதந்திரப் பாடல்கள், 1920களில் நாடுமுழுவதும் பரவி மக்களால் பாடப் பெற்று வந்துள்ளது. கைராட்டினத்தை மட்டும் அவர் சிறப்பித்துப் பாடியவை மிகப் பல பாடல்கள் ஆகும். 1925 யில் வெளியிடப் பெற்ற அவற்றிலிருந்து சில பாடல்கள் கீழே தரப்படுகின்றன.

பல்லவி

இந்தியா ராட்டை ஓட்டுவோம்
சொந்தமாய் நாட்டை மீட்டுவோம்

அனுசரணம்

செந்தமிழ்க் கீதம்பாடி
தேவி செய் சகாயம் நாடி
சந்ததம் நூலைத் தேடி
தாகமாக ஏக போக மாய் (இந்தியா...

வேங்கடங்கன்னி யாகுமரி
மேவி வரு வோம் காவிரி
ஓங்குகங்கை யோரந்திரிந்
தோடி யேநீ ராடி யாடியே (இந்தியா...

சத்தியம் போற்றும்நாடு
சாரதாகண் ணோக்கும்நாடு
உத்தமர் வாழும்நாடு
ஓவியச்சஞ் சீவி யாகிய (இந்தியா ...

கற்புமிகுந் தோங்கும் நாடு
காவலர்கொண்டாடும் நாடு
அற்புதவை தீகநாடு
ஆக மபு ராண மேவிய (இந்தியா...

வீரர்கு பேரர்நாடு
மேலுலகம் போற்றும் நாடு
பாரத மாதா நாடு
பாவ மேயிலாத ஜீவக (இந்தியா...

சகலசௌ பாக்கிய நாடு
தரும சொரூப நாடு
புகழ்சேர் புண் ணிய நாடு
போக பூமி யாகிய யோக (இந்தியா ...

சஞ்சலமில் லாததொண்டு
சாத்மீக நோக்கங்கொண்டு
குஞ்சரசங் கீதம் விண்டு
கோரி டுஞ்சு யாட்சி மீறிட (இந்தியா ...

(நன்னிபியாராரே என்ற மெட்டு.) (1925)

16

ஆடு ராட்டே

பல்லவி

ஆடு ராட்டே சுழன்
றாடு ராட்டே சுய
ஆட்சியுதிக்குதென்று ஆடுராட்டே

வாடும் பயிர்க்குமாரி பெய்வதேபோல்
வறுமைப் பிணிகெடுக்க மானிடர்பால்
நாடுஞ் சுதந்தரக்கொ டியைத் தூக்கி
நானிலஞ் சற்றினேனென் றாடுராட்டே ஆடு ...

எட்டுக் கால் வாசலிது கொண்டவீடு
இந்து முஸ்லீம்கள் செய்யும் அன்பினோடு
கட்டுப்பட்டே இலகும் பாரததேவி
கைக்குபகாரி என்று ஆடுராட்டே ஆடு ...
சுதேசியத் தொண்டு என்னும் வாசியிழுத்து
சுதந்திரத் தாகமென்னும் யோகம்மதித்து
விதேசியப் பஞ்சியான பேச்சைஅடக்கி
விளையாட வந்தேனென் றாடுராட்டே ஆடு...

முப்பத்து முக்கோடிமுகச் சங்கநாதம்
முழங்கத் தினம் பவனி செய்வினோதம்
செப்பத் தரமல்லவே யாருக்குமது
தேசிபுதுமைதானென்று ஆடுராட்டே ஆடு...

ஒத்துழையாமை என்னும் தேரிலேறி
ஓங்கும் சுயாட்சி என்னும் வீடு கோரி
சத்தியம் என்னுந்திரு வீதி தங்கி
சாத்துவீகங் கொண்டேனென்று ஆடுராட்டே
ஆடு...

பஞ்சாப் படுகொலைக்குப் பரிகாரம்
பார்த்துக் கொடுக்குமோர் உபகாரம்
நெஞ்சினில் நினைந்து வீடுதோறும்
நின்றாட வந்தேனென்று ஆடுராட்டே ஆடு ...

கள்ளு சாராயத்தைக்கு டித்தேநொந்து
கவலைவறுமைபிணி யால் மெலிந்து
தள்ளப்படு நரகஞ் சாராதேயென்று
சங்கந் தொனித்தேனென்று ஆடுராட்டே ஆடு...

நாடுபறி கொடுத்துக் கண்ணீர்விட்டு
நாளுஞ் சுதந்தரத்தாய் சோகப்பட்டு
வாடுங் குறைதவிர்த்துக் காக்கவேவல்ல
மகிமைபிறந்ததேயென்று ஆடுராட்டே ஆடு ...

சீமைத் துணியைப் போக்கும் சித்தமே கொண்டு
தினமும் கதர்த்துணி அணிந்தே நின்று
தேமிகும் குஞ்சரசங் கீதம்பாடி
ஜெயித்து வருவேனென்று ஆடுராட்டே ஆடு ...

[*தன்வலியைத் தாரணிக்குணர்த்தெனப் பணித்தல் என மகுடமிட்டு, கவிக்குஞ்சரபாரதி இப்பாடலை எழுதியுள்ளார். 'ஆடுபாம்பே' என்ற பாம்பாட்டிச் சித்தர் பாட்டுமெட்டு. இராகம் செஞ்சுருட்டி தாளம் - ஏகம். (1925)*]

17

பாரதமாதா பள்ளியெழுச்சி

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஏகம்

கண்ணிகள்

கூடுஞ்சு தேசியக்
கோழியும் கொக்கரக்
கோவெனக் கூவுதடி நாம்

கோருஞ்சு யாட்சியாம்
சூரியனை இருள்
கொள்ளைய டிக்குதடி (கூடுஞ்...

சாத்வீக மாகிய
மாமகளே தொண்டர்
சங்கமு ழங்குதடி - இனி

தாட்டீக மாகவே
ராட்டினம் நூற்றிடத்

தானேயெ ழுந்திரடி (கூடுஞ்...

வந்தேமா தரச்சு
தந்தர வீதியில்

வந்தார்ம கான்காந்தி - நல்ல
வக்கணை மிக்கந
யக்கவிக் குஞ்சரம்
வாழ்த்துங்கொ டியேந்தி (கூடுஞ்...

[கவிக் குஞ்சரபாரதி பாட்டு. கொஞ்சுங் கிளிமொழி வஞ்சியே நாமினி என்ற பாட்டு மெட்டு. *(1925)*]

18

இந்து சகோதரரே

(கண்ணிகள்)

இந்துச கோதரரே ஏகாதிபத்தியரே
வந்தேமாதர மென்றோத மாறாச் சுதேசியரே

மதிப்பீர் நம் நாட்டை - சுற்றித்
துதிப்பீர் கைராட்டை

தேசிய முடிவுக்குள்ள கீர்த்தி இதற் கல்லாமல்
ஜோசியம் வேறுமுண்டோ துரிதமாய் நாமெல்லோரும்

சுழற்றியே வருவோம் - கதர்த்
துணியையே அணிவோம்!

தாய்நாடு பசித்திருக்கச் சற்றுங்கவலையின்றிப்
போய்நாளும் புறணிபேசிப் பொல்லாங் கிழுப்பதென்கொல்

போற்றுவீர் ராட்டை - தொழில்
காட்டுவீர் நாட்டே

பாரத தேவிபெற்ற பாலரல்லால் நமக்குள்
தாரதம்யம் தொடுக்கும் சாத்திரந் தள்ளித் தேசச்

சரித்திரம் படிப்பீர் - உள்ள
தரித்திரம் கெடுப்பீர்

மகாமேரு முகம்மதலி மௌலானா சௌகதலி
சகவாசக் காந்திமகான் சாற்றுஞ் சன்மார்க்கப்பட்டு

சலனம் விட்டிடுவீர் - நாளும்
தமிழைக் கற்றிடுவீர்

தேவி சுதந்தரத்தைப் பாவிக்கும் மந்திரத்தை
கூவ வல்லார்க்கு வேறு கோருவதேது முண்டோ

குறிப்பீரப் பதத்தை - நாளும்
உரைப்பீரிச் சகத்தை

சாத்மீகச் சமுத்திரத்தில் சந்தோசமாய்க்குளிக்க
ஆத்மார்த்த ஞானத்துறை அடைந்தால் நமக்குப் பயம்

அவனியி லேது இதைக்
கவனமாய் ஓது

நம்நாட்டு நாகரிகம் நாட்டிற் குடியிருக்க
இந்நாள்எல்லோருங்கூடி ஏத்துங்கை ராட்டினத்தை

இசையுடன் சுற்றுவீர் - கதர்
உடையையே கட்டுவீர்!

பலகோடி திரவியத்தைப் பாவிக்கும் ராட்டினத்தை
நலமாகத் தினஞ்சுழற்றி நாகரிகம் பெற்றோங்க

நாட்டுங் குஞ்சரனார் கவி
கேட்டுடன் படுவீர்!

('பாரத மாதா பெற்ற பாலர்களே நமக்கு' என்ற பாட்டுமெட்டில் கவிக் குஞ்சர பாரதி பாடியது) (1925)

இந்து தேசாபிமானிகள் பற்றி மதுர பாஸ்கரதாஸ் பாடிய பாடல்கள்

மதுர பாஸ்கரதாஸ் அவர்கள் 1921க்கு முன் பாடிய இப்பாடல்கள், மாகவிஞர் சுப்பிரமணிய பாரதிக்குப் பின்புலமாயிருந்த அக்கால நிலைமையை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. இப்பாடல்கள் பல நூற்றுக் கணக்கில் கிடைத்துள்ளன. இவை பாரதியாரை உருவாக்கிய சூழலை நமக்கு விளக்குவதோடு, அப் பெருங்கவிஞனின் பாடல்களுக்கு நிகரானவையாகவும் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து பன்னிரண்டு பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்துப் படித்துப் பார்ப்போம்.

19

பாரதமாதா துதி

இராகம் : கல்யாணி — தாளம்: ரூபகம்

பல்லவி

பாரத தேவியே - கண்
பாராய் ஆசி தாராய் மேவியே (பாரத)

அனுபல்லவி

தாரதம்மியம் பொருந்தும் காரணி
தரும ரூப சௌ பாக்கிய பூரணி
மாரதப் புவிக் கினிய வாரணி
மாட்சியாய்ச்சு யாட்சிப் பேரணி

சரணம்

தேவர் முனிவ ருனக்குச் சேயே
தேசபக்தரின் சிறந்த தாயே
மூவர் புகழ, முழங்கு வாயே

முன்பு நம்புந் தென்பு நீயே (பாரத)
ஓவியத் தமிழ் மதுரப் பூமி
உண்மைத் தொண்டனாம் பாஸ்கரசாமி
காவியஞ்செயப் பெறச்செய்வாமி
கான ஞானமான நேமி (பாரத)

[பாஸ்கரதாஸ் பாடியது. 1921]

20

வந்தேமாதர மந்திரம்

இராகம் : தேசிகம். தாளம்; ரூபகம்

பல்லவி

வந்தேத மாதரமே வாழ்வுக் கோராதரமே (வந்தே

அனுபல்லவி

சந்தேகமில்லையினிச் சார்வோம் சகோதரமே (வந்தே

சரணம்

நந்தேயமக்கள் பெறும் நன்மைக் கிதுமந்திரம்
நாடோறும் சொல்லப் பாவ நாசமாகுந் தந்திரம்
இந்துமுசல்மான்களுக் கீந்திடுஞ் சுதந்திரம்
எங்கும் பேரிகை கொட்டும் மங்கள நிரந்தரம்

ஈடில்லா மகிரிஷியின் வாக்கும் - மற்றும்
கூடியே அடிமைத்தனம் போக்கும் - இன்று
நாடியே பெருளைவச மாக்கும் - இதில்
நம்பும் நவசக்தி பலம் நோக்கும்.
நாவினிக்க நீடும்
நமக்குத் துறை தேடும்
பாவினிக்கப் பாடும்
பாஸ்கரன்கொண்டாடும் - மந்திரம் (வந்தே

[பாஸ்கரதாஸ் பாட்டு (1921)]

21

உதவி மறுத்தலியக்க வாழ்த்து

இராகம் : தேசிகபியாக். தாளம்: ரூபகம்

(காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தை வாழ்த்திப் பாடியது.)

பல்லவி

ஒற்றுழையாத தருமம் புவிக்கு
ஓது காந்தி நாதனருமைச் சாதுதேர்ந்த வேதமருமம் (ஒற்று

அனுபல்லவி

சற்றுமே மனம் தயங்கி டாதிதைக்
கற்றிட என் சிரமம் - நமக்
காக வகுத்துக் கணித்த உத்தமர் பணித்த தத்துவம் பிணித்த கிரமம் (ஒற்று...

தொகையறா

மகாநாடு கூடியே தீர்மானம் செய்ததால்
வாழ்த்தியே சிரசில் வைப்போம்
மாறாத கட்டளை மீறாததிட்டமாய்
மகான் சொன்ன வறுதி நிற்போம்

பாட்டுத் தொடர் - அனுபல்லவி எடுப்பு

மதுர பாஸ்கரனே - தமிழ்
மாசறப்புகழ் தேசபக்தசு தேசிநித்தியம் பேசு சத்தியம் (ஒற்று..

(பாஸ்கரதாஸ் பாட்டு) (1921)

22

சுவாமி விவேகானந்தர் துதி

இராகம்: தேசிக கமாஸ். தாளம்: ஆதி

(பல்லவி)

சுவாமி விவேகானந்த - சகலமத சித்தாந்த - சுவாமி

(அனுபல்லவி)

தரும ராம கிருஷ்ண மோன
பரமஹம்ஸ சிஷ்ய ஞான - சுவாமி

சரணம்

தாய்நாட்டுச் சொக்கத் தங்கம்
மேல்நாடெங்கும் பிர சங்கம்
செய்த சிங்கம்

தன்மனந்தான் நிறுத்தி
மும்மலப்பேய் துரத்தி
சென்மமே சீர் திருத்தி
தவம்புரிந்தார்

தருமராம கிருஷ்ணமோன பரமஹம்ச சிஷ்யஞான சுவாமி

செந்தமிழ்ச் சேதுபதி
தினமுங்கொண்டாடித் துதி
சேர்ந்தநிதி

தித்திக்கும் பாஸ்கரன்சொல்
பத்திக்கும் இந்தியரின்
விருந்திக்கும் அவதரித்த
திருமூர்த்தி

தருமராம கிருஷ்ணமோன பரமஹம்ஸ சிஷ்ய ஞான - சுவாமி

[பாஸ்கரதாஸ் இயற்றியது. (1921)]

23

சுயராச்சிய தவமாமுனி

இராகம்: தேசிகம். தாளம் - ஆதி

பல்லவி

காந்தியே கரம் சந்திர மோகனதாஸ் (காந்தி)

அனுபல்லவி

கவனாதிப நவநாயக சுயராச்சிய தவமாமுனி (காந்தி)

சரணம்

வாய்ந்திடும் பாரதநாட்டு மக்களுக்கோர் ஆதரன்
வழங்குஞ்சத்தி யாக்கிரகம் மாறிடாத் தராதரன்
வணிகசீதரன் - ஆதி
மனுவின் சோதரன் - நீதி
வகுத்தான்வழி தொகுத்தான் மொழி
புகுத்தாய்வதில் மிகுத்தான்புகழ் (காந்தி)

பொறுமையான இந்தியாவின் வறுமைநீக்கும் புண்ணியன்
புத்தரேசு மகம்மதுவை ஒத்தஞானகண்ணியன்
புனித தண்ணியன் - இந்து
மனித நண்ணியன் - நல்ல
பூமாதுடன் பாமாதுங்கண்
டாமோதிக்கும் சீமான்ஜெய (காந்தி)

திருமதுர பாஸ்கரன் தினம் பணியும் சிங்கமே
தேசநன்மைக்காக எங்கும் செய்குவான்பிரசங்கமே
தேடுந் தங்கமே - சபை
கூடுந்துங்கமே - ஜெகத்
தியாககுண யோகநல்வி
வேக நமக்காக வந்த (காந்தி)

[பாஸ்கரதாஸ் பாட்டு (1921)]

24

தாதாபாய் நௌரோஜி

இராகம்: தேசிக தோடி தாளம்: ஆதி

பல்லவி

தாதாபாய் நௌரோஜி (தாதா)

அனுபல்லவி

தந்தாராதர வந்தேமாதர (தாதா)

சரணம்

மாதா பிதா குருவாய்
வணங்குந் தெய்வத் திருவாய்
மாட்சிமையுறும் இந்தியருஞ்சுய
ராச்சியம் பெறும் மந்திரம் ஓதிய (தாதா)

தொகையறா

தேசாபிமானிகளின் தலைவராய் அவதாரம்
செய்ததோர் செல்வச் சீமான்
செகமெல்லாம் புகழ்கின்ற ரிஷியான கலியுகச்
சித்தவை ராக்கிய பூமான்

பாட்டு - மேற்படி சரணத் தொடர்

பக்தர் கொண் டாடுஞ்சிங்கம்
பத்தரை மாற்றுத் தங்கம்
பாமணங் கமழ்ந்திலங்கும் பாஸ்கர
சாமி செந்தமிழ்க் குகந்த சிற்குண (தாதா)

[பாஸ்கரதாஸ் இயற்றியது (1921)]

25

லோகமான்ய பாலகங்காதர திலகர்

இராகம்: தேசிக தோடி — தாளம்: ஆதி

பல்லவி

இந்திய தேசபக்தன்
என்றென்றும் லோகமான்யத் திலகர் (இந்திய)

அனுபல்லவி

செந்திருமகள் வாசன் -சு
தேசவிரதப் பாசன்-புகழ்
சிகாமணி நேசன்
தெய்வம் போற்பிரகாசன்-ராஜ
தேசபக்தன் (இந்திய)

பூமிக்கோரு திலகம்
புண்ணிய சொரூபத் திலகம் - கமழ்
பாமிக்க நவில் திலகம் - நம்
பாஸ்கரத் திலகம் - தமிழ்த் தேசபக்தன் (இந்திய)

[பாஸ்கரதாஸ் (1921)]

26

கவிச்சக்கரவர்த்தி இரவீந்திரநாத தாகூர்

இராகம்: தேசிகதோடி; தாளம்: ஆதி.

பல்லவி

இரவீந்திரநாத் - தாகூர் ரம்ய நன்னீத (இரவீ

அனுபல்லவி

கவீந்திரகீதன் ஆங்கிலத்தில் கற்கண்டொக்கும் வாக்கியன்
கலைமகள் தலைமகன் எனுஞ்சிலாக்கியன்
இந்துக் கன்பின் பாக்கியன் (இரவீ

நவீனசித்த தேசபக்த ராஜசிங்க வீரன்
நாம்பெறு சுதேசமக்கள் நம்புதீரன்
சாஸ்திர ஞான தாரன் (இரவீ

சத்தியாக்கிரக ஒத்துழையாத் தத்துவ விசேஷன்
தந்த "சர்பS' பட்டந்தன்னையெறிந்த ரோஷன்
சாது சுங்க வாசன் (இரவீ

வித்தியாச மின்றியாரும் விரும்பிடும் விவேகன்
வெற்றிசேர் பாஸ்கரன்பாடி மெச்சும்யூகன்
மேலும் இச்சைத்தியாகள் (இரவீ

[பாஸ்கரதாஸ் (1921)]

27

பல்லவி

கவிச்சக்கரவர்த்தி இரவீந்திர நாதனே
பாரதமாது
கண்ணான சங்கீதனே (கவி

அனுபல்லவி

புவிக்கு நல்லாதரன் புனிதர் சகோதரன்
போற்றிடும் வந்தேமாதரன் (கவி

சரணம்

பஞ்சாபி லஞ்சாப்படு கொலையைக் கண்டனை
பகரும்பிற சண்டனைப்
பாஸ்கரன் வாக்கின் பண்பார் தொண்டனைப்
பயமற நயமுற செயம் பெற
பணிதற்கேது தண்டனை (கவி

28

அலி சகோதர்கள்

இராகம்: இந்துஸ்தான் தோடி; தாளம்: ஆதி;

பல்லவி

சுதேச மகம்மதலி சோதர ஷவுக்கத்தலி (சுதேச

அனுபல்லவி

இதோப தேசஞ் சொலி
இசையல்லாகு அக்பரொலி

சரணம்

மாதாபிமான சித்தர்
மாறாத தேச பக்தர்
வாஞ்சைக் கிலாபத்தின் போர்
தாம் செய்யும் ஜீவன் முக்தர் (சுதேச

தொகையறா

அஞ்சாத இந்திய மாதாவின் நேத்திரம்
ஆகவே வந்த புண்ணியர்
அவனிமேல் நமக்காகச் சிறையேகி மீண்டோர்
அவதார புருஷ கண்ணியர்

மேற்படி சரணத் தொடர்

உயர்தவக் காந்தி செப்பும்

உதவி மறுத்தல் ஒப்பும்
உண்மைத் தொண்டன் பாஸ்கரன்
ஓங்கும் செயல் பரப்பும் (சுதேச

[பாஸ்கரதாஸ் - (1921)]

29

(கள்ளிக்கோட்டையில் கைது செய்து கண்ணனூர்ச் சிறைக் கூடமாகிய தேசீய மறைக்கூடம் வசிக்கும் மகான்கள் நால்வர் துதி யாகுப்சேன், மாதவ நாயர், கோபால் மேனன், மொஹிதீன் கோயர்)

இராகம்: சிந்துபைரவி தாளம்: சாப்பு

பல்லவி

பாரத யாகுப்சேன் மாதவநாயர்
பகர் கோபால் மேனன் மொஹிதீன்கோயர் (பாரத

அனுபல்லவி

கேரளக் கள்ளிக்கோட் டைக்கண்ண னூர்ச்சிறைக்
கேகிய யூகத் தியாக நேயர் (பாரத

தொகையறா

காந்தி மகான் சொன்ன
கட்டளைப் பிரகாரமே
சாந்தி சகா வென்னும்
சாத்மீகப் பிரச்சாரமே

சரணத் தொடர்

கடமையைச் செலுத்திடக் கருதுபன்யாசம்
தடைபுரிந் தடையச் செய்தார் சிறைவாசம்

மேற்படி பல்லவி எடுப்பு

காரணமில்லாத தோரணைச் சட்டமே
தாரணியிற் கொட்டுந் தம்பட்டமே (பாரத

தொகையறா

சுயாச்சியமில்லாத வகையினால் இவ்விதத்
துன்பத்தில் ஆழுகின்றோம்

செயராச்சியமிந்தியா சீக்கிரம் பெறவிதே
திருட்டாந்தம் நேர்ந்ததென்றோம்

மேற்படி சரணம்

சுதந்தரத்துடனவர் நால்வரை நமக்கே
சுகமுடன் தரவந்தே மாதரத் தமுக்கே

மேற்படி பல்லவி எடுப்பு

தூங்காம லெங்கும் முழங்குது பாஸ்கரப்
பாங்கான சந்தப் பதக் குமுக்கே (பாரத

[பாஸ்கரதாஸ் - *(1921)*]

30

சேலம் சக்கரவர்த்தி ஸ்ரீமான்

இராசகோபாலாச்சாரியார்

இராகம்: இந்துஸ்தான் தோடி; *தாளம்: ஆதி*

பல்லவி

இராஜகோபால பேர்சித்தி - நம் சக்கரவர்த்தி (இராஜ

அனுபல்லவி

பூஜாபலம் பொருந்தி
புவிக்குள் எங்குந் திருந்தி
ஆசாரமோங்க வருந்தி
அறைந்தான் முந்தி (இராஜ

கோமான் பரதபாலன்
குறையகற்றிடும் லோலன்
கூறுஞ்சுதே சானுகூலன்
கொஞ்சும் வாய்ச் சாலன் (இராஜ

ஓது மகாத்மா காந்தி
உதவி மறுத்தல் ஏந்தி
உலகப் பெருங்கடல் நீந்தி
உகப்பான் சாந்தி (இராஜ

வேதவிப்பிரச் சிங்கம்

வித்துவத் தத்துவத் துங்கம்
கீத பாஸ்கரமெய்த் தங்கம்
கீர்த்திப்பிர சங்கம் (இராஜ

[பாஸ்கரதாஸ் - (1921)]

31

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு

இராகம்: இந்துஸ்தான் தோடி; தாளம்: ஆதி

பல்லவி

மிஸ்டர் வரதராஜுலு விகிதபக்தர் - தேச
சுகிர்த பக்தர்

அனுபல்லவி

பெஸ்டுபன்யாசர் பிரியவித்வாசர்
அஷ்டதிசைபுகழும் அரியபக்தர் - பூவிற்
குரிய பக்தர்
அன்பு ததும்பிடுஞ் சம்பிரத மம்புகல் (மிஸ்டர்

ஒத்துழையாமை உபகார நேர்மை
சத்திய விரதம் மேலாய்ச் சார்ந்த பக்தர் - யோகம்
வாய்ந்த பக்தர்
தண்டமி ழார்பிர சண்டபத்தி ராதிபர் (மிஸ்டர்

பிரபலக் கீர்த்தி பிரசங்க நேர்த்தி
முரசெனமுழக்கிடு மோன பக்தர் - பிர
தான பக்தர்
முத்தமிழ்ப் புவிமது ரைத்தகை மைமிகும் (மிஸ்டர்

திடசித்தஞானி, தேசாபிமானி
செப்புஞ்சதாசிவன்பா திகழும் பக்தர் - எங்கும்
புகழும் பக்தர்
தித்தித் திடுமமு தொத்திடும் மொழி (மிஸ்டர்

[ஏ.எஸ். சதாசிவதாஸ் - (1921)]

32

ஜெய ஜெய வாழ்த்து

இராகம்: பார்சி; தாளம்: ஏகம்

கண்ணிகள்

ஜெய ஜெய வந்தே மாதரம்
சீர் பெற்றிடு நற் சோதரம்
பயமின்றிக்குவ லயமதுபெறப்
பதகலையுரை திலகமணிக்கு
ஜேய் ஜேய் ஜேய் (ஜெய)

உத்தம சற்குண தேசபக்தர்
ஒத்துழையாமையின் தளகர்த்தர்
சத்திய தத்துவம் எத்திசையுஞ் சொலும்
தர மோகனதாஸ் கரம் சந்த் காந்தி
ஜேய் ஜேய் ஜேய் (ஜெய

சாமியாம் விவே கானந்தர்
சமயஸ்தாபன பந்தர்
பூமி முழுதும் தோமிலாதுநற்
போதமீயும் தாதா பாய் நௌரோஜிக்கு
ஜேய் ஜேய் ஜேய் (ஜெய)

லாலா லஜபதி ராய்க்கும்
நமதபி மான நேயர்க்கும்
சீலம்மிகுந்திடும் பாரதியாருக்கும்
செப்புஞ் சதாசிவ செந்தமிழ் தனக்கும்
ஜேய் ஜேய் ஜேய் - (ஜெய)

[ஏ.எஸ். சதாசிவதாஸ் (1921)]

33

ஒன்றுபட்டு நிற்போம் வாரீர்!

இராகம்: இந்துஸ்தான் தோடி; தாளம்: ஆதி;

பல்லவி

பாரினிலே புகழ் பாரத புத்திரரே தேச
பக்த மித்திரரே (பாரினிலே

அனுபல்லவி

ஊரினிலே பஞ்சம் ஓங்குவதைப் பாரு
ஒன்றுபட்டு நேரில் நின்று தொட்டு வாரீர் (பாரினிலே

தொகையறா

வஸ்திரத்தில் பலகோடி மதுவகையில் பலகோடி
வருடந்தோறும் நாம்
இந்நிலைப்போல் செலுத்துகிறோம் கேவலமே
கீழ்நாடென்றே நாம்
எத்தனைநாள் படுத்திருப்போம் இனியேனும்
நித்திரைவிட்டெழவேண்டாமோ

பாட்டு

கதருடுத்திடில் வெற்றி சுதந்திரமே
எதிர்காணும் மந்திரமே
முத்தமிழ் பாஸ்கர வித்துவ முற்றுமே
மூட்டைதூக்கிடாமல் ராட்டை சுற்றுவோமே (பாரினிலே)

[பாஸ்கரதாஸ் - (1928)]

34

சுயராச்சியம் அதிக தூரமில்லை

இராகம்: இந்துஸ்தான் பியாக், தாளம்: ஆதி

பல்லவி

சுயராச்சியம் அதிக தூரமில்லை தெரிவீர்
துணிந்து மதுவிலக்கைத் துணைக் கொள்வீர் (சுய

அனுபல்லவி

துயரான இந்துதேச சோதர சோதரிகாள்
தூய மகாத்மா காந்தி சொல்லை அறிவீர் (சுய

தொகையறா

பஞ்சமா பாதகம் ஐந்து மூன்றில்
பலகலை யுணர்ச்சி செய்த பாழான குடியே
பகர்மத்தியான வேளை பகற்சூதாடும் குடியே

பாட்டு

தேசத்திற்கே வுழைக்கத் தேகமெடுத்த காந்தி
நேசத்துட னுரைத்தார் ராட்டை கையேந்தி (சுய

தொகையறா

பாசத்துடன் நூல்நுற்றுப் பத்து கைத்தறியிலிட்டு
நாம் தரிப்போம் நூலால் பலவகைத் தினுசுப்பட்டு

பாட்டு

புவனமதி விலகும் பூமான் மகாத்மா காந்தி
போதிக்கும் புத்திகளை உணர்ந்திடுவீர்
முன்னோர் பெயரைக் கெடுத்த மூடக்குடியை விட்டு
முன்னேறப் பாஸ்கரன்சொல் முழங்கிடுவீர் (சுய

[பாஸ்கரதாஸ் - (1928)]

35

பஞ்சாப் படுகொலை

பல்லவி

பஞ்சாப் படுகொலை
பாரிற் கொடியது பழிபாவமுடையது (பஞ்சாப்...

மகுடங்கள்

அஞ்சாப் பெருவம்பென அறநிலை தப்பிய சிறியவன் வேலை
படைக்களத்தினால் துடைக்கலாமென
மடக்கருத்துடன் இடக்கலாமிரு (பஞ்சாப்...

தாயும் தந்தையும் சேயினிழந்ததாய்
போய்க்கரைதனி லேயும் முன்னிட (பஞ்சாப்...

இரத்த ஆறு பெருக்கெடுத்திட
சித்தப்பிரமையைக் கொள்ளும் (பஞ்சாப்...

இந்தியர்கள் வருந்தி அலைந்திட
நொந்து கலங்கிட அந்தோ செய்தது (பஞ்சாப்

கற்புக்கரசிகள் பொற்பழிந்திட
கற்பழித்தது செப்பத் துயருறும் (பஞ்சாப்...

கண்ணீர் விட்டுக் கதறிக்கதறித்
தண்ணீர்கேட்டுச் சாய்ந்து மடிந்தனர்
(பஞ்சாப்...

இழுத்துக் கை நகங்களிலே ஊசி
அழுத்தித் தள்ளிட அறைந்து அறைந்த (பஞ்சாப்...

படுக்கச் சொல்லி கைமணிக்
கட்டுகளை ஒடிக்கக் கட்டிவரப் பிடித்து (பஞ்சாப்...

நம்நாட்டு நேசர் தோட்டந்தன்னிலே
வாட்டியே கொள்ளும் சேட்டையான(பஞ்சாப் ...

இந்தியரே இந்தப் படுகொலை நின்றிட
மந்திரமே செய்து சுகங்களையே பெற்றிடும்
(பஞ்சாப்...

(இயற்றியவர் பெயர் பாடலில் இடம் பெறவில்லை. 'காட்சி கண் காட்சியே' என்ற வர்ண மெட்டில் சந்தம் அமைய, அன்று பலராலும் இப்பாடல் பாடப்பட்டு வந்துள்ளது. (1928)

36

பாரத மாதா துதி

இராகம்: இந்துஸ்தான் தோடி தாளம்: ஆதி)

ஜெய பாரததேவி நீயே - கண்
பார்த்தருள் புரிவாயே - அறியாப்
பாலனாம் உன் - சேயே பாவணியும் தாயே
பாவணியும் தாயே பாவணியும் தாயே
- ஜெய பாரத

புவி தாரதம்மியம் உனக்கிலையா - கை
தாங்கியாள மலையா - எனன்பு
தகுதியற்ற நிலையா - தாமதமென் தொலையா
தாமதமென் தொலையா-தாமதமென் தொலையா
- ஜெய - பாரத

இங்கு வந்தோர் ஆறுமைந்தும் அறியேன் - இன
வழு வெழுத்தையுங் குறியேன் - இலக்கண

வகையுணராத சிறியேன் - வணங்கி உனைப்பிரியேன்
வணங்கியுனைப் பிரியேன் வணங்கியுனைப் பிரியேன்
- ஜெய பாரத
நாளும் அந்த முன்னடி தொழுங் கியானி - அடி
யார்க் கடிய தியானி - முஹையதீன்
அப்துல் காதர்க் கேனி
அருட்கிருபை மோனி அருட்கிருபை மோனி
அருட்கிருபை மோனி - ஜெய பாரத

இப்பாடல்கள் பல மேலூர் ஏ.ந.வ. முஹையதீன் அப்துல் காதினுறாவுத்தரால் பாடப்பட்டவை எனத் தெரிகிறது. 1925 க்கு முன் இவை சிறுசிறு பிரசுரங்களாக வெளியிடப்பட்டு, மக்களால் பாடப்பட்டுச் சுதந்திர வேட்கையைக் கிளறிவிட்டுள்ளன.

37

வந்தேமாதரம் துதி

இராகம்: இந்துஸ்தான் பியாக் தாளம்: - ஆதி

பல்லவி

வந்தேமாதரம் என்னுங்கள் - சகோதரரே (வந்தே)

அனுபல்லவி

நந்தேய மாட்சி பூக்கும் நம்மை எந்நாளும் காக்கும்
சந்தேகம் தன்னைத் தீர்க்கும் சதா கண்பார்க்கும் (வந்தே)

நமக்கிது மந்திரம் நாடிடத் தந்திரம்
அமைந்த கைராட்டே யந்திரம் அதே சுதந்திரம் (வந்தே)

துயர்தனைப் போக்கும் தொழும் மனதாக்கும்
பயமதனையும் நீக்கும் பட்சம் உண்டாக்கும் (வந்தே)
சுகிர்த விசுவாசம் தோத்திர நேசம்
முஹைதீன் அப்பதுல்காதர் பாசம் மொழிப் பிரகாசம்
(வந்தே)

38

சாத்துவிகப் போராட்டச் சங்கம்

சொல்லுங்கள் சொல்லுங்கள் வந்தேமாதரம் என்று - மகாத்மா
சொல்லியபடி முயலவேண்டும் நாமின்று
அல்லும் பகலும் சுதேசி இயக்கத்தில் நின்று- சுயாட்சி
யாள நல்ல நாளென்றெண்ணிப் பார்ப்பதே நன்று!
சாத்மீகப் போராட்டச் சங்கந் தன்னிற் சேருவோம்! - வைராக்கிய
சாதனை என்றிடும் அக்கரையிற் தேறுவோம்!
ஆத்மீக ஞானத்தினால் அறிந்து ஆறுவோம்! முஹையதீன்
அப்துல் காதர் பாவினத்தை என்றும் கூறுவோம்!
- நாம்

இப்படி ஒத்துழையாமை கொள
இனிமே லேயிலை தீமை நயஞ்
செப்பிடு மிதுவே மாமெய் ஒன்று
சேர்ந்திருப்பதுவே கூர்மை இனி

ஜெயக்கொடி இனி ஜெயக்கொடி இனி ஜெயக்கொடி
வந்தேமாதரம் வந்தே மாதரம்

ஜேய் ஜேய் ஜேய்

(முஹையதீன் அப்பதுல் காதிறு: 'சங்கந் தங்கிய மதுரைக் கோபுற வீதி' என்ற மெட்டு)

39

நமது சுதந்திரத்தின் துதி

கண்ணிகள்

இந்திய சகோதரரே எமக்குதவி யானவரே!
தந்திர மதாய்ச் சகல சனங்களுஞ் சுயராட்சிய
சுதந்திரம் பெற வகுத்த தோர் காட்சி
பதமுடனியம்பிடக் கேட்பதே மாட்சி

சந்திரரும் சூரியரும் சாருமிந்தப் பூதலத்தில்
முந்தியொரு காலத்திலே மோர்வெண்ணெய் உண்ட கிருஷ்ணன்

காந்தி யெனுமவதார மேந்தி வந்தார்
சாந்தி யெனவே நமக்கு ராட்டை தந்தார்

அந்நாளிற் பாண்டவராய் அவதரித்தோர்கள் இங்கே
இந்நாளிலே நமக்கு ஒன்ற உதவிசெய்ய

வந்தார்கள் பலவிதமாய் நாமஞ்சூட்டி
தந்தார்கள் மிகுந்தறிவையே காட்டி

பாண்டவரில் மூத்தொரு பட்சமுற்ற தருமரென்போர்
ஆண்டவனின் சோதனையால் அவனியுள்ளோர் மகிழ

லாலா லஜபதி என்றே யுதித்தார்
நாலாவிதத் தறி வையும் பகுத்தார்

தருமருக்கு நேரிளைய தம்பி என்ற போர்வீமன்
வர்ம மிதனைத் தவிர்க்க வளர்சவுக் கதலியென

வாழ்வு பெறவே ஜனித்தார் உலகினிலே
தாழ்வு கிடையாது நமக்கினி மேலே

அழகினிலே சிறந்த அருச்சுனன் எனும் வீரன்
விழைவுறும் தேசபக்தர் விழித்திடவே புவியில்

சித்த ரஞ்சன தாசென்றே பிறந்தார்
சத்தியாக்கிரக நிலையைப் பகர்ந்தார்

மூதறிவிலே சிறந்த முன்னோர்புகழ் நகுலன்
தீதகற்றிக் காக்க வந்தார் தேசாபிமானி யெனும்

பண்டித மோதிலால் நேருவென்போர்
கண்டிதம் பேசுங் கருணை யுள்ளோர்

சகல கலையில் வல்ல சாஸ்திர சகாதேவன்
இகநிலையை அறிந்து ஈவிரக்கத்துடனே

எங்கும்புகழ் முகம்மதலியாய்ச் செனித்தார்
சங்கப்பிரசங்க மெனவே தொனித்தார்

இப்படிக்கி மாறுதலாய் இவ்வுலகி லேபிறந்து
செப்பிடும் ஒத்துழையாமை தேசவிசு வாசத்துடன்

செல்வச் சீமான்கள் எல்லாஞ் சிறைபோனார்
நல்விவேகத்துடன் நற்றுணையானார்

ஆட்டுவரி மாட்டுவரி ஆனதொரு வீட்டுவரி
காட்டுவரி பாட்டுவரி கழறுந்தோல் கேட்டுவரி

இப்படிக்கு வரிக ளனேகமுண்டு
எப்படிக்குத் தருவோம் நாமிதைக் கொண்டு

தண்ணிவரி விளக்குவரி சாக்கடை கக்கூசுவரி
எண்ணரிய காசுவரி எழின்மிகுந் தொழிலின்வரி

வைத்துப் பல விதமாக வாங்கத் தந்தோம்
இத்தரைக் குள்ளே மதிகெட்டேங்கி நொந்தோம்

ஆனைவரி குதிரைவரி அன்பான வண்டிவரி
ஞான முன்னோர்கள் தர நடந்திடுமோ பிழைப்பு

நன்றல்லவே இதனைத் தாமறிவீர்
இன்றெல் லோரும் கரகோஷம் புரிவீர்!

முஹையதீன் அப்துல்காதிர் மொழியுமிக் கீதந்தனை
மிக நயமாய் உணர்ந்து மேன்மை உணர்ந்திடிலோ

எந்நாளும் மானந் தமேயாகும்
சொன்னாலது மேலதாய்ச் சேரும்

(முஹையதீசர் அப்துல் காதிறு பாட்டு)

40

தாயார் தன் மகனுக்கு உபதேசித்தல்

இராகம்: பைரவி தாளம்: சாப்பு

கண்ணிகள்

காந்தி மகான் சொல்லைக் கேட்டு
கட்குடியை விட்டுவிட்டு
கதராடை கட்டிடடா - என் மகனே

கள்ளைக் குடியாதேடா (காந்தி
கடனுமே வாங்கச் செய்யும்
கட்டாயங் குடிக்கச் செய்யும்
கஷ்டங்க ளாகுமடா - என் மகனே
கட்கடைக்குச் செல்லாதேடா (காந்தி

வட்டியுடன் வாங்கும் கடன்
வரவில்லை என்றவுடன்
வாரண்டு வந்திடுமடா - என் மகனே
வழிதப்பிப் போகாதேடா (காந்தி

குடித்திட்ட வெறியினாலே
குட்டிச் சுவரைப் போலே
கோடியில் நிற்கா தேடா - என் மகனே
கோமாளி யாகாதேடா (காந்தி

கட்குடியை நீக்கி விட்டு
காசுபணந் தன்னை யிட்டு
கதராடை வாங்கிடடா - என்மகனே
கஷ்டங்கள் தொலையுமடா (காந்தி

மகாத்மாஜி வாக்கின்படி
மதுவிலக்குச் சிந்தின் படி
மதித்து நடப்பாயடா - என் மகனே
மரியாதை யாகுமடா (காந்தி

மதுபானம் நீக்கிடவே
மறியல் செய்து போக்கிடவே
மண்ணில் சுப்பையன் பதம் - என் மகனே
மனதாரக் கேட்பாய் நிதம் (காந்தி

(தஞ்சை எஸ்.ஆர். சுப்பையன் பாடியது 1925., 'நெஞ்சிலுரமுமின்றி' என்ற வர்ணமெட்டு என்ற குறிப்புமுளது. பாரதி பாடலின் செல்வாக்கை இது காட்டுகிறது).

41

மகாத்மா காந்தி உபதேசம்

இராகம் : தேசிகம் தாளம்: ஆதி

(கண்ணிகள்)

தேசஅபிமானி காந்தி
சொல்வதைக் கவனி ஜாதி
நேசவழியில் துணி பாரத
தேவியடியைப் பணி சுதேச (தேச

ஜாதிபேதந்தள்ளு சன்
மார்க்க வழியே நில்லு ஜக
நீதி மார்க்கங்கொள்ளு இழி
வானதெலாம் வெல்லு சுதேச (தேச

கள்ளுக் குடியாதே சீட்டா
கஞ்சா பிடியாதே செய்தால்
தள்ள முடியாதே உன்குலம்
முழுதும் விடியாதே சுதேச (தேச

அடிமைத் தொழில் போக்கு கையால்
ஆகும் வேலை நோக்கு அது
உரிமையே நமக்கு உப
தேசம் செய்தேன் உமக்கு சுதேச (தேச
அன்னியர் துணியை அகற்று உள்ளூர்க்
கதருடையை உடுத்து தேசம்
கண்ணியம் பெறவுழைத்துக் கடைத்
தேறும் வழியில் நிறுத்து சுதேச (தேச

இராட்டினங் கொண்டு பஞ்சை
இழையைச் செய்முயன்று நல்ல
வேட்டி நெய்து கொண்டு பெரு
வர்த்தகம் செய் கண்டு சுதேச (தேச

(இப் பாடல்களை பைரவ சுந்தரம் பிள்ளை, வி.எஸ். சுந்தரேசய்யர், இருவரும் மேடைகளில் பாடிவந்ததாகத் தெரிகிறது இயற்றியவர், பெயர் தெரியவில்லை. பெரும்பாலும் பாஸ்கரதாஸாக இருக்கலாம்.)

துணைநூற் பட்டியல்

1. **இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும் (1974)** ந. சஞ்சீவி
2. **இந்தியாவும் விடுதலையும், (1940)** திரு.வி.க.
3. **இன்றைய இந்தியா (1980)** கு. சங்கர நாராயணன்
4. **கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல் (1985)** மன்னர் மன்னன்
5. **காற்றிலே மிதந்த கவிதை (1977)** மு. அருணாசலம்
6. **திரு-அருட்பா (1932),** இராமலிங்க சுவாமிகள்
7. **தேசியம் வளர்த்த தமிழ் (1914)** கா. திரவியம்
8. **நாமக்கல் கவிஞர் பாடல்கள், 1963,** பழனிப்பா பிரதர்ஸ், சென்னை.
9. **பாட்டும் கூத்தும்,** புத்தனேரி சுப்பிரமணியம்.
10. **பாரதி தமிழ் (1963)** பெ.தூரன் (பதிப்பாசிரியர்)
11. **பாரதியும் பாரதிதாசனும் (1983),** அ.ச. ஞானசம்பந்தன்
12. **பாரதி பாடல்கள்** (ஆய்வுப் பதிப்பு) (1987) ம.ரா.போ. (பதிப்பு)
13. **பாஸ்கரதாஸ் நினைவுச் சிறப்பு மலர்**- ந. கந்தசாமி
14. **மதுர பாஸ்கர தாஸ் வாழ்வும் பணியும்**-
    (மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறை எம்.பில். ஆய்வேடு எஸ். வாசுதேவன்)
15. **மனோன்மணீயம் (1978)** சி. பாலசுப்பிரமணியன்
16. **வைரமுத்து வரை (1989),** சண்முக சுந்தரம்

இந்திய விடுதலை இயக்கத்திற்குத் தமிழ்க் கவிஞர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. நாட்டுப் பற்றையும், தேசிய உணர்வையும் ஊட்டவல்ல சிறந்த பாடல்களை இயற்றி அன்னிய ஆட்சிக்கு எதிராக மக்களை வீறு கொண்டெழச் செய்த சிறப்பு அவருக்குண்டு. நாட்டுப் புறப்பாடல்கள், தெருக் கூத்துப் பாடல்கள், திரை இசைப் பாடல்கள், மேடை நாடகப் பாடல்கள் எனப் பல்வேறு வடிவங்களில் தேசபக்தி, விடுதலை வேட்கை முதலியவற்றைப் பாடிய தமிழ்க் கவிஞர்கள் இவர்கள்.

பாரதியார் காலத்தும் அவர் மறைவுக்குச் சற்று முன்னரும், பின்னரும் பாடப்பட்டவை இப்பாடல்கள். பாரதியாரை விடுதலை இயக்கப் பெருங் கவிஞராக்கிய பின்னணியை இப்பாடல்களால் அறிய முடிகிறது. தமிழ் மக்களிடையே சுதந்திர வேட்கை சுடர்விட்டு வீசியதையும் இப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

Viduthalai Iyakkath
Tamilzh Paadalgal (Tamil)
ISBN 81-7201 - 745-6

Rs.50